
Gokulam ஜூன் 83 · ரூ 2
கோகுலம்

வீட்டுப்பாடம் செய்ய முடியாத அளவு களைப்பா?



க்ளூகோன்-டி ⓣ

உங்களுக்கு நம்பகமான க்ளாக்ஸோஸ்-Dயின் புதிய பெயர்.

அதிக சக்தி — அவனுக்குத் தேவையான போது.

புத்துணர்ச்சியூட்டும், குளுமையான, சக்தி தரும் க்ளுகோன்-டி. வைட்டமின்-டி, கால்ஷியம் ஃபாஸ்ஃபேட் ஆகியன செறிந்த அசல் க்ளுகோஸ் பவுடர் அடங்கியது. க்ளாக்ஸோ நிறுவனம் அளிக்கிறது. எந்த பானத்திலும் இதனை கலந்து அருந்தலாம். பழரசம், பால், தேநீர், காபி, தண்ணீர் இவற்றிலே கலந்தோ அல்லது நேரடியாகவோ உட்கொள்ளுங்கள். திரும்பவும் பெருகிவரும் சக்தியை உணர்வீர்.

க்ளுகோன்-டி உங்களுக்கு வழக்கமான அதே பச்சை உறையிலே கிடைக்கிறது.





க்ளூகோன்-டி ⓣ சக்தியை மீட்டுத்தர நம்பகமானது.
க்ளாக்ஸோ நிறுவனம் அளிக்கிறது.

அருமைச் சிறுவர், சிறுமியரே!



'கல்கி' பத்திரிகையின் முதல் இதழ் 1—8—1941-ல் வெளிவந்தது. அந்த முதல் இதழில், பேராசிரியர் கல்கி அவர்கள் சிறுவருக்கான கதை ஒன்றை எழுதியிருந்தார். அந்தக் கதையை, படக் கதையாக இந்த இதழில் படித்து மகிழப் போகிறீர்கள். சென்ற இதழில், ராஜாஜியின் சிறுகதை ஒன்றைப் படக் கதையாகப் படித்தீர்கள். இதுபோல், பெரியோர் சொன்ன சிறிய கதைகளைத் தொடர்ந்து கோகுலத்தில படக் கதைகளாகத் தரப் போகிறோம்.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 3000க்கு மேற் போய்விட்டது. எல்லாருக்கும் உறுப்பினர் அட்டைகள் அனுப்பி விட்டோம். கையில் உள்ள மனுக்களுக்கெல்லாம் அட்டை அனுப்பிய பிறகுதான், உறுப்பினர் மனுவை மீண்டும் கோகுலத்தில் வெளியிட்டுப் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது என்று முடிவு செய்தோம். அதன்படி இந்த இதழில் உறுப்பினர் மனுவை மீண்டும் வெளியிட்டுள்ளோம். இதுவரை சேராத — 15 வயதுக்கு உட்பட்டவர்களெல்லாம் சேரலாம்.

தமிழ் நாட்டில் சில இடங்களில் மழை பெய்திருக்கிறது. இன்னும் பல இடங்களில் மழை பெய்யாததால் குடிப்பதற்குக்கூட நீர் இல்லாமல் மனிதர்களும், மற்ற உயிரினங்களும் வாடி வதங்குகின்றனர். ''பருவ மழை பெய்யத் தாமதமானால், பள்ளிக்கூடங்களைத் திறப்பதும் தாமதமாகலாம்'' என்று கல்வி அமைச்சர் கூறியிருக்கிறார்.

மழையே, மழையே, பெய்வாயே!
மாநிலம் மகிழச் செய்வாயே!

என்று நாள்தோறும் நாம் பிரார்த்தனை செய்வோம். நல்ல பலன் ஏற்படும்.

அழ. வள்ளியப்பா



பூவண்ணன்



திருவாழுத்தான்



கோகுலம்

கௌரவ ஆசிரியர்:

அழ. வள்ளியப்பா

மலர்—1 இதழ்—5

1983 ஜூன் மாத இதழ்

தனிப்பிரதி ரூ. 2/-

ஆண்டுச் சந்தா ரூ. 24/-

கோகுலம்

கிண்டி, சென்னை-600 032

மகிமைநாதன்



வெங்கடேசன்



இந்த இதழ் எழுத்தாளர்கள்


பட்டுக்கோட்டை ரவி



நெடுமிடல்



நா. செந்தில் முரளி



கௌசக் ரங்கநாதன்



நந்தகுமார்



கோமதி



திருமதி விஸ்வநாதன்







பெரியோரை அவமதிக்கலாகாது

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

பரிக்ஷித் என்னும் ஓர் அரசன், வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குச் சென்றான். அப்பொழுது அவனுக்குத் தண்ணீர்த் தாகம் எடுத்தது. அந்தச் சமயத்தில் அங்கு ஒரு சிறிய குடிசை தென்பட்டது. அரசன் அந்தக் குடிசைக்கருகில் சென்று குடிசைக்குள் தலையை நீட்டிப் பார்த்தான். அங்கு ஒரு மகரிஷி தியானத்தில் உட்கார்ந்து கொண்டு இருந்தது தெரிந்தது.

அரசன் தனக்குத் தண்ணீர் வேண்டும் என்று கேட்டான். மகரிஷி தியானத்தில் இருந்ததால் அரசன் கேட்டது அவர் காதில் விழவில்லை. அரசன் கோபம் கொண்டு குடிசைக்கு வெளியில் வந்து சுற்று முற்றும் பார்த்து, அங்கு கிடந்த செத்த பாம்பை வில்லால் எடுத்துக் குடிசைக்குள்ளிருக்கும் மகரிஷியின் கழுத்தில் போட்டு விட்டான். இதை உணர்ந்த மகரிஷி உடனே விழித்துக் கொண்டார். விஷயத்தை அறிந்து கொண்டார். மிகுந்த மன வருத்தம் அடைந்தார்.

அப்போது வெளியே விளையாடச் சென்றிருந்த மகரிஷியின் மகன், தந்தையின் மேல் கிடக்கும் பாம்பைப் பார்த்துவிட்டு, அது அரசன் செயல் என்று அறியாமல், மிகுந்த கோபத்துடன், ''எந்த ஒரு மனிதர் என் தந்தையின்மேல் பாம்பைப் போட்டாரோ, அந்த மனிதர் இன்றிலிருந்து ஏழாவது நாள் ஒரு பாம்பால் மரணமடைய வேண்டும்'' என அழுத்தமாகச் சொன்னான்.

அந்தச் சொல்லைக் கேட்ட அரசன் முதன் முதலில் நடுங்கிப் பயந்து போனான். பிறகு, நன்றாக ஆலோசித்துக் கீழ்க் கண்ட முடிவுக்கு வந்தான். தான் அவசரப்பட்டுப் பெரியோரை அவமதித்தது தவறு என்பதை உணர்ந்தான். பிறகு மனத்துக்குள் மிகவும் மகிழ்ந்தான். எந்த ஒரு மனிதனும் மற்ற எல்லாவற்றுக்கும் காலத்தைக் கணித்து விடுகிறான், பள்ளிக்குச் செல்ல வேண்டுமானால் ஒன்பதரை மணி, ஆண்டுப் பரீட்சை என்றால் மார்ச் மாதம், சனிக்கிழமை தோறும் வெங்கடேச சுப்ரபாதம்— இப்படி யெல்லாம் காலத்தைக் கணிக்கும் மனிதன், தன் வாழ்நாள் காலத்தைத் தெரிந்து கொள்ளவும் முடியாமல் வாழ்கிறான். ஆனால், தனக்கு இன்னும் ஏழு நாட்கள் வாழ உறுதி கிடைத்திருக்கிறது என்பதை அறிந்துகொண்டதை நினைத்து மகிழ்ந்தான். பிறகு, தன்னுடைய பணியாட்களை-எல்லாம் நாட்டுக்கு அனுப்பி வைத்து, தான் கங்கைக் கரையில் அமர்ந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் சுகர் என்னும் மகரிஷி அரசனிடம் பேசி அரசனுக்கு ஆறுதல் கூறி ஏழு நாட்களும் இடைவிடாமல் பாகவதம் என்னும் நூலை அரசனுக்கு அருளினார். ஏழாம் நாள் அன்று ஒரு பாம்பு அரசனைத் தீண்டியது. அரசன் பாம்புக் கடியினால் செத்தாலும், இறைவனுடைய பாகவதத்தைக் கேட்டுச் செத்ததனால் நல்ல கதியை அடைந்தான். ஆகவே, ஒவ்வொருவரும் பொறுமையுடன் வாழ்க்கை நடத்த வேண்டும். பொறுமை இல்லாமல் பெரியோரை அவமதிக்கக் கூடாது!

பாலுவின் ஆகாசப் ப்ரயாணம்



கதை: அமரர் கல்கி




அடடே! மைசூர்பாகு! ரொம்ப ருசி! இன்னும் இருக்கிறதா? கொடு, கொடு
தம்பி, இது என்ன தேசம்?
இந்தியா தேசம். இது சென்னை மா நகரம்
அடடா! நான் சீனாவுக்குப் போக வேண்டியவன். வழி தவறி வந்து விட்டேன். நீயும் சீனாவுக்கு வருகிறாயா?
நானும் பெரியவனான பிறகு சீனாவுக்கு வருவேன். இப்போது என் அம்மாவைப் பார்க்க ஆசை. உடனே போக வேண்டும்.
தம்பி, இதோ பார் பாரா-சூட். இதைப் பிடித்துக் கொண்டு கீழே குதி. குடை மாதிரி விரியும். தரையில் போய் இறங்குவாய். அபாயம் இல்லை.
ஆஹா! தரையை நெருங்கி விட்டோம். அம்மாவைப் பார்க்கப் போகிறேன்.
என்னடா ராஜு, இப்படி தொபுகடீர்னு கீழே விழுந்து விட்டாயே!
தொபுகடீர்!
ஒரு பயங்கரக் கனவு கண்டேன், அம்மா
அதிகமாகப் பட்சணங்கள் தின்றால் இப்படிப் பயங்கரக் கனவுகள்தான் வரும்! இனி அதிகம் சாப்பிடாதே!
கட்டாயம் சாப்பிடுவேன், அம்மா. பயங்கரக் கனவுதான் எனக்குப் பிடிக்குமே!
சித்திரம்: விஜயன்



5வது படிக்கும் சிறுமி 51 இராகங்களில் பாடுகிறாள்!

ஐந்தாவது படிக்கின்ற ஒரு சிறுமி 51 பாடல்களை 51 இராகங்களில் இராக மாலிகையாகப் பாடுகிறாள் என்றால் இது அதிசயமல்லவா?

வட ஆர்க்காடு மாவட்டம் வேலூர் அருகில் உள்ள காங்கேயநல்லூரில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோவிலில் 4–3–83ல் மிக அழகாகவும் அற்புதமாகவும் பாடி எல்லோரையும் மூக்கின் மேல் விரல் வைக்கும்படி செய்து விட்டாள், இச்சிறுமி!

காங்கேயநல்லூர், திருமுருக கிருபானந்த வாரியார் பிறந்த ஊர். அவர் பிறந்த ஊரில் அவர் தலைமையிலேயே இந்த இசையரங்கு நடந்தது. சிறுமிக்குப் பட்டாடை அணிவித்துப் பாராட்டி, ஒரு வாழ்த்துப் பாடலையும் வழங்கினார், வாரியார் சுவாமிகள். முருகன் மீது அருணகிரி நாதர் இயற்றிய 51 கந்தர் அநுபூதிப் பாடல்களையே இச்சிறுமி அன்று பாடினாள்.

இச்சிறுமியின் பெயர் சண்முகப்பிரியா என்று செல்லமாக அழைக்கிறார்கள்.

தமிழ் நாடகக் கலைக்குப் புத்துயிர் ஊட்டிய கலைஞர், அவ்வை டி.கே. சண்முகம் அவர்களின் பிரியமான பேத்திதான் இந்த **சண்முகப்பிரியா!** அவர் தமிழ் நாட்டின் தலைசிறந்த ஒரு நடிகர் மட்டுமல்ல: எடுப்பாகவும் உணர்ச்சி ததும்ப மிக அழகாகவும் பாடக் கூடியவர்.

அவ்வை டி. கே. சண்முகம் அவர்களின் மகன் டி. கே. எஸ். கலைவாணனும் தந்தையைப் போலவே நன்கு பாடக் கூடியவர். தொலைக் காட்சி நாடகங்களில் நடிப்பவர். தற்போது ஸ்டேட் பாங்க், அண்ணா சாலையில் பணி புரிகிறார்.

கலைவாணன் எட்டு வயதுச் சிறுவனாக இருந்தபோது, மதுரை திருப்புகழ் மண்டபத்தில் இதே போல ஒரு இசையரங்கு நடந்தது. 51 கந்தரநுபூதிப் பாடல்களை 51 இராகங்களில் பாட கலைவாணனின் தந்தை ஏற்பாடு செய்திருந்தார்.

பேபி சண்முகப்பிரியாவின் பெயரே ஓர் இராகத்தின் பெயர்தான். அவளுடைய இசை ஆசிரியர் பெயரும் ஓர் இராகத்தின் பெயர்தான்! ஆம், தக்கேசி என்பது அவரது பெயர்!

இன்னொரு விசேஷமும் உண்டு. சண்முகப் பிரியாவுக்கு ஆசிரியர் தக்கேசி. சண்முகப்பிரியாவின் அப்பாவான கலைவாணனுக்கு ஆசிரியராக இருந்தவர் யார் தெரியுமா? தக்கேசியின் அப்பாவான டி. ஏ. சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார்தான்!

• வாரியார் வாழ்த்துகிறார்





• இசையரங்கில் – அப்பாவுடன்

பேபி சண்முகப்பிரியா இப்போது சென்னை கோபாலபுரத்தில் உள்ள நேஷனல் பள்ளியில் 5-வது படிக்கிறாள். (இந்த இதழ் வெளிவரும்போது 6வது வகுப்புக்குப் போயிருப்பாள்). பள்ளிப் படிப்பிலே இவள் மிகவும் கெட்டிக்காரி. பல நற்சான்றிதழ்கள் பெற்றிருக்கிறாள். பாட்டுப் போட்டியிலும், ஓவியப் போட்டியிலும் கலந்து கொண்டு பல பரிசுகள் பெற்றிருக்கிறாள். அத்துடன் நிற்கவில்லை. தந்தை கலைவாணனுடன் பல இசை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறாள்.

சமீபத்தில் தமிழ்நாட்டு நல்வழி நிலையத்தின் சார்பில் 'அருளிசைச் செல்வி' என்ற பட்டத்தைச் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் வழங்கிப் பாராட்டினார்.

விரைவில் அப்பாவும் பெண்ணும் வெளி நாடுகள் சென்று இசை நிகழ்ச்சிகள் நடத்தப் போகிறார்கள். அவர்களுக்கு இப்போதே நாம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ரிஷபம்



அட்டை வண்ணப்படம்:
பிரபு சங்கர்



உலகப் புகழ் பெற்ற டின்டின்

உலகம் முழுவதும் பல பத்திரிகைகளில் தொடர் சித்திரமாக வெளிவந்து, லட்சக் கணக்கான சிறுவர், சிறுமியர்களை மட்டுமன்றி, பெரியவர்களையும் கவர்ந்திழுத்துப் பெரும் புகழ் பெற்ற 'டின்டின்' என்னும் கதா பாத்திரத்தின் படைப்பாளரான ஹெர்ஜ், சமீபத்தில் தன்னுடைய 75-வது வயதில் காலமானார்.

பெல்ஜியத்தைச் சேர்ந்த இவர், சிறு வயதில் எல்லாப் பாடங்களிலும் திறமைசாலி எனப் பெயரெடுத்திருந்தார். ஆயினும், ஓவிய வகுப்பின் போது மட்டும் பிடிப்பின்றி இருந்தாராம். சில நகைச்சுவைப் பாத்திரங்களின் படைப்புக்கள் பிரபலமாகி விட்டபோது அதன் உண்மைப் படைப்பாளி இறந்துவிட்டால், வேறு ஒருவர் அதைத் தொடர்ந்து எழுதுவது வழக்கம். அப்படித்தான் வால்ட் டிஸ்னியின் மிக்கி மௌஸ், பான்டம், டார்ஜான், மான்ட்ரக் போன்ற தொடர் சித்திரங்கள் வேறு சிலரால் தொடர்ச்சியாக வெளியிடப் பட்டு வருகின்றன. 'டின்டின்' கதாபாத்திரம் தன்னைத் தானே வைத்து உருவாக்கப்பட்டது என்று ஹெர்ஜ் பெருமையுடன் கருதினார். அதனால்தான், இறந்த பிறகு 'டின்டின்' கதாபாத்திரத்தை வைத்து வேறு யாரும் இந்தச்சித்திரத் தொடரை எழுதக் கூடாது என்று உயில் எழுதி வைத்திருக்கிறாராம்!

இவருடைய 'டின்டின்' சித்திரத் தொடர் உலகம் முழுதும் 33 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. ஜனவரி 10, 1929ஆம் ஆண்டில் உருவான 'இந்த 'டின்டின்' அந்தந்த நாட்டின் மொழிக்கேற்றவாறு பெயர் உச்சரிப்பு வேறுபடுவது உண்டு.

'டின்டின்' தன்னுடைய சாகஸங்களை நாடு விட்டு நாடு கடத்துவதுண்டு. அந்தந்த நாட்டு மொழி, மக்களின் நடை உடை பாவனைகள், இடங்கள்-பற்றி யெல்லாம் நூல்நிலையப் புத்தகங்கள், புகைப்படங்கள் மூலம் ஆராய்ந்தறிந்து எழுதினார் ஹெர்ஜ். தம்முடைய கதா பாத்திரத்தை உலகம் முழுதும் இவர் சுற்ற வைத்தாலும், இவரென்னவோ தம்முடைய நாட்டைவிட்டு வெளியில் வந்ததே இல்லை!

ஹெர்ஜ்



இதுவரை 'டின்டினை' வைத்து 23 தொடர் சித்திரங்களைத் தயாரித்திருக்கிறார் ஹெர்ஜ். ஒரு தொடரில் வரும் கதாபாத்திரம், வேறொரு தொடரில் வந்து சந்திப்பதாகக் கூறிச் செல்வதுண்டு. 'பிரேஸில் நாட்டில் டின்டின்' என்ற சித்திரத் தொடரைத் துவங்கிய போது, அந்த நாட்டு மக்கள் 'டின்டின்' மூலம் தங்கள் நாட்டுக்கு அளித்த கௌரவத்தைக் கொண்டாடும் வகையில், இரண்டு மீட்டர் உயரத்திற்கு 'டின்டின்' உருவத்தை நியான் விளக்குக் குழலில் அமைத்து, நகரத்தின் நடுவே வைத்துப் பெருமைப்படுத்தினார்களாம். ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் உழைத்து 1929ஆம் ஆண்டு முதல் 1982ஆம் ஆண்டுவரை லட்சக் கணக்கான வாசகர்களை மொழி வேறுபாடின்றி, டின்டின் சந்திக்கும்படி செய்தார், ஹெர்ஜ். இத்தனைக்கும் அந்தக் கதாபாத்திரமான 'டின்டின்'னின் வயது என்ன தெரியுமா? மூன்று தான்!

ஆதாரம்: வீக் என்ட் ரெவ்யூ-3-4-83

—அ. குமார்



படித்த புத்தகங்கள்



ஆண்டவன் படைத்த மலர்கள்

சென்ற வாரம் நான் படித்த புத்தகத்தின் பெயர் 'ஆண்டவன் படைத்த மலர்கள்'. இப்புத்தகத்தில் உள்ள பத்துக் கதைகளையும் சிறுவர் சிறுமியரே எழுதியிருக்கிறார்கள்.

சென்னையில் உள்ள கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சர்வதேசக் குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு 10 முதல் 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர் சிறுமியருக்காகச் சிறுகதைப் போட்டி ஒன்று நடத்தியது. அதில் வெற்றி பெற்ற பத்துப் பேர்களுடைய கதைகளும், பிறகு புத்தகமாக வெளிவந்திருக்கின்றன.

எழுதியவரின் பெயர்களுடன் அவர்களது புகைப்படங்களையும், முகவரிகளையும் அச்சிட்டிருக்கிறார்கள்.

'யார் கண்டது?' என்ற ஜே. மேகநாதன் எழுதிய கதை முதல் பரிசாக ரூ. 300 பெற்றிருக்கிறது. அந்தக் கதையில் தொழுநோயால் வாடிய ஒரு பிச்சைக்காரனை ஒரு சிறுவனும் அவன் நண்பர்களும் மிகவும் வெறுக்கிறார்கள். கேலியும் கிண்டலும் செய்கிறார்கள். நாயை ஏவிவிட்டு அவனை விரட்டுகிறார்கள். ஆனால், அதே பிச்சைக்காரன் லாரி விபத்தில் அடிபட இருந்த அந்தச் சிறுவனை ஓடோடி வந்து காப்பாற்றுகிறான். அப்போது ''அந்தச் சிறுவனுக்கு அந்தப் பிச்சைக்காரன் உருவம் விகாரமாகத் தென்படவில்லை; அங்கே அன்பின் சாயல் தென்பட்டது'' என்று கதை முடிகிறது.

இரண்டாவது பரிசாக ரூ. 200 பெற்ற கதையின் பெயர், 'இங்கே ஒரு தமிழன்னை!'' மு.
யது.

சங்கரின் அம்மா குப்பத்துக் குழந்தைகளைக் குளிப்பாட்டி அலங்காரம் செய்யத் தன் தோழிகளுடன் அவசர அவசரமாகப் புறப்படுகிறாள். தான் பெற்ற குழந்தைகளான சங்கரையும், ராணியையும் கவனிக்க அவளுக்கு நேரமே இல்லை. ஆயாதான் அவர்களைக் கவனிப்பது வழக்கம்.

ஒரு நாள் தோட்டத்தில் வேலைக்காரியின் மகன் முனியாண்டியிடம் சங்கர் சொல்லிக் கொண்டிருந்ததை, மரத்தின் பின்னால் நின்ற சங்கரின் அம்மா கேட்டு விடுகிறாள்.

''டேய் முனியா, உங்கம்மாதான் உன்னைத் தூக்கி வைச்சுப்பாளா? எங்களுக்கெல்லாம் ஆயாதான் எல்லாம் செய்யும். குளிப்பாட்டும்; சாதம்போடும்; டிரஸ் பண்ணி விடும். எங்க அம்மா ஒண்ணுமே செய்ய மாட்டாங்க. ஆயா இல்லாட்டி நாங்க பாவந்தான்'

—இதைக் கேட்ட அம்மா திடுக்கிடுகிறாள். போலிப் பெருமைக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு இப்படிப் பெற்ற குழந்தைகளைக் கவனிக்காமல் போனதை உணருகிறாள். ஓடிவந்து சங்கரைத் தழுவிக் கொள்கிறாள்.

தெ. அனுராதா எழுதிய 'அவன் திருந்தி விட்டான்' என்ற கதைக்கு மூன்றாம் பரிசாக ரூ. 100 கிடைத்திருக்கிறது. மற்ற ஏழு கதைகளுக்கும் கதைக்கு ரூ. 50 வீதம் பரிசு கிடைத்திருக்கிறது.

எல்லாக் கதைகளுமே படிக்கச் சுவையாக இருக்கின்றன. நல்ல கருத்துக்

களோடும் இருக்கின்றன. என்னைப் போன்றவர்களுக்கும், 'நாமும் கதை எழுத வேண்டும்' என்ற ஆவலைத் தூண்டுகின்றன.

சிறுவர், சிறுமியருக்குப் போட்டி வைத்து, பரிசு கொடுத்து, பரிசுபெற்ற கதைகளைப் புத்தகமாகவும் வெளியிட்ட கிறிஸ்தவ இலக்கிய சங்கத்துக்கு நன்றி கூற வேண்டும்.

பதிப்பாசிரியர்: எச்.பி. ராஜ்குமார்.
வெளியிட்டவர்கள்: கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை-3. விலை: ரூ. 4.00.

- சி. டி. லலிதா, மதுரை.

அறம் வளர்ப்போம் வாருங்கள்

புலவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்கள் எழுதிய இந்தப் புத்தகத்தில் 10 கதைகள் இருக்கின்றன.

பகபதி, பாலூரில் பெரிய பணக்காரர். அவர் அடிக்கடி பல இடங்களுக்கும் நன்கொடை தரப் போவதாக அறிவிப்பார்.

''இலங்கையில் தமிழர்கள் கஷ்டப்படுகிறார்களா? உடனே ஐயாயிரம் நன்கொடை அனுப்பப் போகிறேன்'' என்பார். ''கங்கை வெள்ளத்தால் கலங்கும் மக்களுக்கு இப்போதே பத்தாயிரம் அனுப்பப் போகிறேன்'' என்பார். ''அமெரிக்காவில் முருகன் கோயில் கட்ட இருபதாயிரம் ரூபாய் அளிக்கப் போகிறேன்'' என்று ஊரார் அறியக் கூறுவார். பிறகு, பைசாக்கூட அவர் அனுப்ப மாட்டார்! ஆனாலும், பாவம், அவரைப் பெரிய கொடை வள்ளல் என்று அந்த ஊரார் பாராட்டி வந்தார்கள். எவ்வளவு நாளுக்குத்தான் இப்படிப் போலிக் கொடை வள்ளலாக வாழ முடியும்? அவரது குட்டை அம்பலப்படுத்தி விடுகிறார் கந்தப்பன் என்பவர்.

இக்கதையில் வரும் பகபதிக்கு நேர் மாறாக இன்னொரு கதையில் வருகிறார் வள்ளல் வடிவேலு.

வள்ளல் வடிவேலுவைப் பார்த்து, பூங்கோதை என்ற சிறுமி, ''நீங்கள் எப்படி வள்ளலாக ஆனீர்கள்? வள்ளலாக விளங்க வேண்டும் என்று ஏன் முடிவு செய்தீர்கள்?'' என்று கேட்கிறாள்.

அதற்கு வடிவேலு, ''நான் மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். ஒரு நாள் பள்ளிக்கூடம் செல்லும் போது வழியில் ஒருவன் வித்தை காட்டிக் கொண்டிருந்தான். அவன் காலியான தட்டிலே வாழைப் பழங்களை வரவழைத்தான். மாம்பழம் வரவழைத்தான், கொய்யாப் பழம் வரவழைத்தான். வரவழைத்த பழங்களையெல்லாம் சுற்றி நின்ற குழந்தைகளுக்குக் கொடுத்தான். கடைசியில் எல்லாரிடமும் காசு வாங்கிக் கொண்டு போய், அரிசி பருப்பு வாங்கி, பசியாயிருந்த அவனுடைய குழந்தைகளுக்குச் சமையல் செய்யக் கொடுத்தான்.

''உங்கள் பிள்ளைகளுக்கும் ஏதாவது வித்தையில் வரவழைத்துக் கொடுக்கக் கூடாதா?'' என்று கேட்டேன்.

''வித்தை காட்டுவது, நான் வயிறு வளர்ப்பதற்காக. எனக்கு வேண்டியதையெல்லாம் வரவழைத்துக் கொள்ள முடியாது. முடிந்தால் நான் ஏன் பிச்சைக்காரனாக இருக்கிறேன்?'' என்றான்.

''அப்படியானால் பிறர் கேட்பதை எல்லாம் கொடுக்க என்ன செய்ய வேண்டும்?'' தமிழாசிரியரிடம் கேட்டேன். ''உழைத்து முன்னுக்கு வா. அப்போது பணம் சேரும். சேர்ந்த பணத்தில் தானம் செய்யலாம்'' என்றார்.

எனக்கு வயது வந்ததும் நன்றாக உழைத்தேன். நிறையப் பணம் சம்பாதித்தேன். முன்னுக்கு வந்தேன். இயன்ற வரை பிறருக்கு உதவி செய்கிறேன்.'' என்றார்.

—இப்படி நல்ல கதைகளாகப் பத்துக் கதைகளை நமக்குத் தந்திருக்கிறார் இந்தப் புத்தக ஆசிரியர். வெளியிட்டவர்கள்: வசந்தா பதிப்பகம். சென்னை 16, விலை ரூ. 4.

- எம். சித்ரா, கோவில்பட்டி

தந்தை: என்ன இது! பக்கத்து வீட்டுப் பையனைக் குளிப்பாட்டிறியே!
தாய்: அடடே! உடம்பெல்லாம் ஒரே தூசி. குளிப்பாட்டின பிறகுதான் தெரியுது இவன் பக்கத்து வீட்டுப் பையன் என்று!

—வி. ஏ. சண்முகானந்தம்



இளமையில் இவர்கள்

மூன்றாவது பெண்!

அப்போது கஸ்தூரிபா ஏழு வயதுச் சிறுமியாக இருந்தார். அந்த வயதிலே அவருக்கும் அடுத்த வீட்டிலிருந்த மோகன் தாஸ் காந்திக்கும் திருமணம் செய்வது என்று இருவரது பெற்றோர்களும் முடிவு செய்து விட்டார்கள். அப்போது காந்திக்கும் வயது ஏழுதான்!

முதலில் காந்திக்கு ஒரு பெண்ணைப் பேசி நிச்சயித்தார்கள். ஆனால், அப்பெண் திடீரென்று இறந்து விட்டாள். இரண்டாவதாக ஒரு பெண்ணை நிச்சயம் செய்தார்கள். அந்தப் பெண்ணும் இறந்து விட்டாள். மூன்றாவதாக நிச்சயம் செய்த பெண்தான் கஸ்தூரி.

'இந்தப் பெண்ணாவது நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டுமே! கடவுளே, இந்தப் பெண்ணை என் மகன் திருமணம் செய்து கொண்டு இருவரும் மகிழ்ச்சியாக நீண்ட காலம் வாழவேண்டும்' என்று காந்தியின் தாயாராகிய புத்லிபாய் அடிக்கடி வேண்டிக் கொள்வார்.



அந்த அன்புத் தாயின் வேண்டுகோள் நிறைவேறியது. நிச்சயமான ஆறாவது ஆண்டில் — அதாவது காந்திக்கும் கஸ்தூரிக்கும் 13 வயது ஆகும்போது— திருமணம் மிகவும் சிறப்பாக நடந்தது.

கஸ்தூரிக்கு அப்போது எழுதப் படிக்கத் தெரியாது. அக்காலப் பெண்களில் பெரும்பாலோர் அப்படித்தான் கல்வி அறிவில்லாமல் இருந்தார்கள்.

'கஸ்தூரிக்கு எப்படியாவது எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். வாத்தியார் வைத்தால் நடக்காது. நானே சொல்லிக் கொடுக்கப் போகிறேன்' என்று காந்தி தீர்மானித்தார்.

பகல் வேளையில் பாடம் சொல்லிக் கொடுத்தால், 'பெண் பிள்ளைக்குப் படிப்பு எதற்கு?' என்று பெரியவர்கள் கூறித் தடுக்கலாம். ஆகையால், இரவு சாப்பிட்ட பிறகு, கஸ்தூரியைத் தனியாக அழைத்துச் சென்று, பாடம் சொல்லிக் கொடுத்தார் காந்தி.

காந்திக்குத்தான் சரியாகப் பாடம் நடத்தத் தெரியவில்லையோ, அல்லது கஸ்தூரிக்குத்தான் கணவர் சொல்வதைப் புரிந்து கொள்ள முடியவில்லையோ, காந்தி நினைத்தபடி வேகமாகப் பாடம் நடைபெறவில்லை. மிக மிக மெதுவாகவே நடந்தது. தாய் மொழியான குஜராத்தியில் வெளியாகும் பத்திரிகைகளையும், சில புத்தகங்களையும் ஓரளவு படிக்கும் அளவுக்குக் கஸ்தூரி கற்றுக் கொண்டார். பகவத் கீதையை அவர் முழுதும் படித்து நன்றாக மனப்பாடம் செய்து கொண்டார். பிற்காலத்தில் தனக்கு நிம்மதியில்லாத சமயங்களில் எல்லாம் கண்களை மூடிக் கொண்டு, பகவத் கீதையில் உள்ள சுலோகங்களைக் கூறிக் கொண்டே இருப்பது அவருக்கு வழக்கமாகி விட்டது.

மன்மதன் பெயர் கொண்டவர்!

விருதுநகரில் தேங்காய்க் கடை வைத்திருந்த குருசாமி நாடாருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் பிறந்த குழந்தை, கட்டான உடலும் கறுப்பு நிறமும் கொண்டிருந்தது. அக்குழந்தைக்கு 'காமராஜன்' என்று பெயரிட்டார்கள்.

மன்மதனைக் 'காமராஜன்' என்றும் அழைப்பார்கள். மன்மதன் எப்படி இருப்பான்? 'நல்ல கறுப்பாகவும் கட்டான உடலோடும் இருப்பான்' என்று கூறுவார்கள். ஆகையால், காமராஜன் என்ற பெயரையே அக்குழந்தைக்கு வைத்து விட்டார்கள். அதற்கு முன்பு யாருமே தங்கள் குழந்தைக்கு இந்தப் பெயரை வைத்ததாகத் தெரியவில்லை.

காமராஜ் ஐந்தாவது வயதில் பள்ளியில் சேர்ந்து நான்கு ஆண்டுகளே கல்வி கற்றார். வியாபாரத்துக்கு ஓரளவு எழுதப் படிக்கவும், கணக்குப் பார்க்கவும் தெரிந்தால் போதும் என்று அக்காலத்தில் நினைத்ததால், அதற்கு மேல் அவரைப் படிக்க வைக்கவில்லை.

பள்ளிக்கூடப் படிப்பை நிறுத்திய பிறகு காமராஜ் விருதுநகரில் துணிக் கடை வைத்திருந்த தன்னுடைய மாமாவின் கடையிலே போய் வேலை பார்த்தார்.

அப்போது ஐரோப்பாவிலே முதலாவது உலகப் போர் நடந்துகொண்டிருந்தது. மாமா கடைக்கு வரும் செய்தித் தாள்களையெல்லாம் காமராஜ் ஆர்வமுடன் படிப்பார். உலகப்-போரைப் பற்றியும், உள் நாட்டில் நடந்து வரும் விடுதலைப் போரைப் பற்றியும் மிகவும் அக்கறையாகப்



படித்துத் தெரிந்து கொள்வார். விருதுநகரிலும் சுற்றுப்புறங்களிலும் நடை-பெறும் பொதுக் கூட்டங்களுக்கும் சென்று முன்னால் போய் உட்கார்ந்து கொண்டு, தலைவர்களின் வீர உரைகளைக் கேட்பார்.

பத்திரிகைகளில் தேசத் தலைவர்களின் சொற்பொழிவுகளைப் படிக்கப் படிக்க, கூட்டங்களில் அவர்களின் வீர உரைகளைக் கேட்கக் கேட்க காமராஜின் தேசப் பற்று அதிகமாகியது. நாளுக்கு நாள் அது வளர்ந்தது.

பலன்? வியாபாரத்தை வெறுத்தார். விடுதலைப் போரில் குதித்தார். அயராத உழைப்பும், அரிய தியாகமும், அறிவுத் திறனும் சாதாரணத் தொண்டராக இருந்த அவரைப் படிப்படியாக உயர்த்தியது. 'பெருந் தலைவர் காமராஜ்' என்று மக்கள் பெரிதும் பாராட்டும் நிலைக்கு அவர் உயர்ந்தார்.

நான்கு ஆண்டுகளே பள்ளியில் படித்த அவர், கல்வியின் அருமையை உணர்ந்து, ஊருக்கு ஊர் கல்விக் கூடங்களைத் திறந்தார். கணக்கற்ற மாணவர்கள் இலவசக் கல்வி கற்று முன்னேற்றம் அடைய அடித்தளம் அமைத்தார். உயர்நிலைப் பள்ளியைக் கூட எட்டிப் பார்க்காத அவரது பெயரை, ஓர் உயர்ந்த பல்கலைக் கழகத்துக்கு வைத்திருக்கிறார்கள் என்றால், அவரது மிகச் சிறந்த கல்வித் தொண்டுதான் அதற்குக் காரணம்.

முயல் ஆண்டில் பிறந்தவர்!

எவரெஸ்ட் சிகரத்தில் முதன் முதலாக ஏறி, இந்தியக் கொடியை நாட்டிய டென்சிங், அவருடைய பெற்றோருக்குப் பதினோராவது குழந்தையாகப் பிறந்தவர்! ஆறு சகோதரர்கள், ஆறு சகோதரிகள் இவருடன் கூடப் பிறந்தவர்கள்.

இவர்களுடைய பஞ்சாங்கப்படி ஓர் ஆண்டுக்கு மாட்டின் பெயர் இருக்கும்; இன்னோர் ஆண்டுக்குக் குதிரையின் பெயர் இருக்கும். இப்படியே புலி, முயல், பாம்பு என்று ஒவ்வோர் ஆண்டையும் அழைப்பார்கள். மொத்தம் பன்னிரண்டு பெயர்கள். இவற்றில் ஆறு ஆண்பால் பெயர்களாக இருக்கும் ஆறு பெண்பால் பெயர்களாக இருக்கும். அந்தப் பன்னிரண்டு பெயர்



களும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை திரும்பத் திரும்ப வரும்!

டென்சிங் பிறந்த ஆண்டுக்கு முயலின் பெயர். அதற்குச் சரியான ஆங்கில ஆண்டு எது? மிகுந்த சிரமப்பட்டு, இவரே அந்த ஆண்டைக் கண்டு பிடித்துவிட்டார். அதுதான் 1914-ஆம் ஆண்டு!

சரி, எந்த மாதத்தில் பிறந்தார்? அப்போது இருந்த பருவத்தை வைத்து அது மே மாதமாகத்தான் இருக்கும் என்கிறார்.

அப்படியானால் எந்தத்தேதியில் பிறந்தார்? அதுதான் தகராறு! சரியாகக் கூறமுடியவில்லை.

ஆனாலும் மே மாதம்தான் இவருக்கு அதிர்ஷ்டமான மாதமாம்!


மே 28ம் தேதி இவர் எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்தார். ஆனாலும் உச்சிக்குச் செல்ல முடியவில்லை. திரும்பி வந்து விட்டார். அதற்கு அடுத்த ஆண்டு மே 29ம் தேதி ஹில்லாரியுடன் எவரெஸ்டின் உச்சியில் ஏறிவிட்டார்!

டென்சிங் பிறந்தது ஸாச்-கு என்ற இடத்தில்தான். ஸாச்-கு என்றால், 'வெந்நீர் ஊற்று' என்று பொருள். இது மிகவும் புண்ணிய ஸ்தலம் என்கிறார்கள். புராணக் கதைகளில் கூட இந்த ஊரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறதாம்.

டென்சிங் சிறுவனாயிருந்தபோது வானை முட்டிக் கொண்டு நிற்கும் எவரெஸ்டை அடிக்கடி பார்ப்பார். ஆனால் அப்போதெல்லாம் அதை 'சோமுலுங்மா' என்றுதான் அழைப்பார்கள். ஆனால் டென்சிங்கின் அம்மா அதைப் 'பறவையும் பறக்க முடியாத மலை' என்றுதான் சொல்வாராம்.

'பறவையும் பறக்க முடியாத அந்த மலையின் மேல் நாம் ஏறிப் பார்த்து விட வேண்டும்' என்று சிறு வயதிலேயே டென்சிங் ஆசைப்பட்டார். அடிக்கடி அது பற்றிக் கனவு கண்டார். 13வது வயதில் ஊரை விட்டு ஓடிப் போனார். எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்குப் பல தேசங்களிலிருந்தும் பல கோஷ்டிகள் வருவார்கள். அவர்களுடன் இவரும் சேர்ந்து மலை ஏறிச் செல்வார்.

ஒரு முறையல்ல, ஏழு முறை முயன்று ஏழாவது முறைதான் 29,028 அடி உயரத்தில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தார். எவரெஸ்டின் உச்சியில் இந்தியக் கொடியை நாட்டினார்!



ஒளிந்திருக்கும் பெயர்கள்

மைதிலி வேணுகோபால்

குழந்தைகளே! கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பெயர் ஒளிந்து கொண்டிருக்கிறது. அடைப்புக் குறியின் உதவியினால் கண்டுபிடிக்க முடிகிறதா பாருங்கள்.

(1) ஒரு கல் கிணற்றில் தொப்பென்று விழுந்தது.
(ஒரு பத்திரிகையின் பெயர்)

(2) குமார் கழியால் மாட்டை அடித்து விரட்டினான்.
(தமிழ் மாதம்)

(3) சாம்பு தன் புதுச் சட்டையை அணிந்து கொண்டான்.
(ஒரு கிழமை)

(4) சரோ! ஜாடியை இறுக்கி மூடிவிடு.
(ஒரு புஷ்பம்)

(5) வெங்கு, திரைப்படத் துக்குப்போகலாமே என்றார் தமிழாசிரியர்.
(ஒரு மிருகம்)

(6) வாட்ச் ரிப்பேர் பண்ணி வந்துவிட்டதோ? டில்லிக்குக் கொடுத்தனுப்பணுமே!
(ஒரு ராகம்)

(7) லதா! மரைன் என்ஜினியராக்கும் உன் வருங்காலக் கணவன்.
(ஒரு புஷ்பம்)

(8) வேம்பு! லிட்டர் 2 ரூபாய்க்குத் தருவானா என்று கேள்.
(ஒரு மிருகம்)

விடைகள்:

(1) கல்கி (2) மார்கழி (3) புதன்
(4) ரோஜா (5) குதிரை (6) தோடி
(7) தாமரை (8) புலி.

இதே போல நீங்களும் கண்டுபிடிக்கும் போட்டி நடத்தி விளையாடலாமே!

சூ-சூ-கிழவி!

நந்தகுமார்

ஊருக்கு வெளியே பொட்டல் வெளியில் அதோ புகை புகையாய் வருகிறது பாருங்கள்! அதுதான் சுண்ணாம்புச் சூளை! அந்தச் சூளைக்குச் சற்றுத் தள்ளி அமைந்திருப்பது தான் சூ-சூ-கிழவியின் வீடு. என்ன, பெயர் விநோதமாக இருக்கிறதா?

சூ-சூ-கிழவியின் இயற் பெயர் என்ன என்பது கடவுளுக்குத்தான் தெரியும். பத்து ஆண்டுகளுக்கு முன்பு எங்கிருந்தோ வந்து அந்தப் பொட்டல் வெளியில் சிறு குடிசை ஒன்றைப் போட்டுக்கொண்டு குடியமர்ந்தவள் அவள். ஊரில் யாரிடமும் பேசுவது கிடையாது. தான் உண்டு, தன் குடிசை உண்டு என்று குடிசையிலேயே முடங்கிக் கிடப்பாள். குடிசைப் பக்கம் போனவர்கள், 'கிர்கிர்! விர்விர்!' என்ற ஒலி கேட்டு ஏதேதோ பேசிக் கொண்டார்கள்.

தினமும் காலை வேளையில் குளிப்பதற்காக அவள் சற்றுத் தொலைவில் உள்ள ஊருணிக்குப் போவாள். அப்போதுதான் அவளை வெளியே பார்க்க இயலும். நடந்து போகும்போது அடிக்கொரு தடவை தலையை ஆட்டிக் கொண்டும், நொடிக்கொரு தடவை 'சூ-சூ' என்று சொல்லிக் கொண்டும் போவாள்! எனவே அவளுக்கு 'சூ-சூ-கிழவி' என்ற பெயர் ஏற்பட்டுவிட்டது.

அவளுடைய விசித்திரமான நடையுடை பாவனைகளைப் பார்த்த ஊர் மக்கள் அவளைச் சூனியக்காரி என்றே முடிவு கட்டி விட்டார்கள். யாரும் அந்தக் குடிசைப் பக்கம் அதிகம் போவதில்லை. பிள்ளைகளையும் அங்கே போகக் கூடாது என்று பயமுறுத்தி வைத்தனர்.

சப்பிய பனங்கொட்டை போன்ற தலை! சிணுக்காரனின் மீசை! யானைத் தந்தம் போல் முன்புறம் துருத்திக் கொண்டிருக்கும் பற்கள். சித்தானைக் குட்டி போன்ற உடலமைப்பு! இப்படிக் காணச் சகிக்காத கோர உருவம் கொண்ட ஒருவன், வாரம் ஒருமுறை கிழவியின் குடிசைக்கு விஜயம் செய்வான். தலையில் சிறு மூட்டை ஒன்றைச் சுமந்து வருவான். சிறிது நேரங் கழித்து, வேறு சிறு மூட்டை ஒன்றைச் சுமந்தபடி வெளியே புறப்பட்டுப் போவான்.

யார் அந்த ஆள்? எங்கிருந்து வருகிறான்? என்ன கொண்டு வருகிறான்? எதை எடுத்துச் செல்கிறான்? ஊர் மக்களுக்கு ஒரு பெரும் புதிராகவே இது இருந்தது. யார் வந்து பேசினாலும் 'சூ-சூ' என்ற வார்த்தைகளைத் தவிர வேறு எதுவும் அவள் பேசுவதில்லை.

ஈசல் பிடிக்கும் சுப்பனால் ஆர்வத்தை அடக்க முடியவில்லை. ஒரு நாள் மழை பெய்திருந்த சமயம். ஈசல் புற்றுக்களைத் தேடி, அவற்றின் அருகே வாயை வைத்து 'ஊ...ஊ...' எனக் கத்தி, உடன் வெளியே வந்த ஈசல்களைப் 'படக் படக்'கென்று பிடித்து, இறக்கைகளைச் 'சடக் சடக்' என்று கிள்ளிக் கொட்டாங்கச்சியில் நிரப்பிக் கொண்டிருந்தான். அப்போது, கோரமான வடிவமுடைய அந்த மனிதன் தலையில் மூட்டையுடன் அந்தப் பக்கம் வந்து கொண்டிருந்தான்.

சுப்பன் ஈசல்களைப் போட்டு விட்டு அந்த ஆளை நெருங்கினான். ''ஐயா, நீங்க யாரு? கிழவிக்கு உறவோ?'' என்று பணிவுடன் கேட்டான்.

அந்த ஆள் ஒன்றும் பேசவில்லை. மெதுவாக மூட்டையைக் கீழே இறக்கி வைத்தான். இடுப்பிலிருந்து எதையோ வெளியே எடுத்தான். பொடி மட்டை! பொடியைச் சாவகாசமாக மூக்கிலே திணித்து 'சர் புர்' என்று உறிஞ்சினான். தன் கேள்விக்குப் பதில் வரும் என்று சுப்பன் காத்திருந்தான். ஆனால், அந்த

ஆள் ''ஹக்கூ! ஹக்கூ!'' என்று அதிரடித் தும்மல்களைப் போட்டு விட்டு, மூட்டையைத் தூக்கித் தலையில் வைத்தபடி நடக்கலானான்.

''ஏங்க, நான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் போறீங்களே!'' என்று பின்னால் ஓடிக் கேட்டான், சுப்பன்.

ஒரு கணம் திரும்பிப் பார்த்த அந்த ஆள், ''பே...பே...பே...!'' என்றபடி கைகளை ஆட்டி ஏதோ உளறலானான். சுப்பனுக்குத் துணுக்கென்றது. 'அட, இவன் ஒரு ஊமையன்!' இதற்குப் பிறகு வேறு யாரும் கிழவியையோ, அந்த ஆளையோ விசாரிக்க முடியவில்லை.

மோகனின் வீட்டிலும் கூ-கூ கிழவியைப் பற்றிய பேச்சுத்தான் நடைபெற்றது. கூழைக் குடித்தவாறே அவன் தன் தாயை நோக்கி, ''பாவம் அம்மா, அந்தப்பாட்டி! அவளைப் பற்றி, ஊரிலே அவதூறாக என்னென்னவோ பேசுகிறார்கள்!'' என்று கூறினான். கிழவி கள்ளக் கடத்தல் செய்வதாகச் சிலரும், கள்ள நாணயம் தயாரிப்பதாக வேறு சிலரும் பேசி வந்தனர்.

''பிறத்தியார் கதையெல்லாம் நமக்கெதுக்கு? நம்ம வயித்துப் பாடே நமக்குப் பெரும் கவலையாக இருக்குது! அடுத்த வாரத்துக்குள்ளே உனக்குப் பள்ளிக் கூடத்துக்குப் போட்டுக்கிட்டுப் போகப் புதுசாச் சீருடை தைச்சாகணும். கையிலோ சல்லிக் காசு இல்லே!'' எனப் புலம்பினாள் அவன் அம்மா.

மோகனின் தந்தையோ குடித்து விட்டு வந்து ராகம் பாடுவார். போதும் போதாததற்கு மோகனின் முதுகிலும் அவன் அம்மாவின் முதுகிலும் தாளமும் போடுவார்! ஏதோ மோகனின் அம்மா நாலு இடத்தில் சட்டி பானை கழுவிக் குடும்பத்தை நடத்தி வந்தாள்.

அம்மா நினைவூட்டியதும் மோகனுக்குச் சீருடையின் நினைவு வந்தது. பொங்கல் விடுமுறை முடிந்ததும் சீருடையில் போகா விட்டால் ஆசிரியர் தோலை உரித்து விடுவார். மோகனுக்கு அதற்கு மேல் கூழ் வயிற்றில் இறங்கவில்லை. கையைக் கழுவித்துடைத்துக்கொண்டு வெளியே கிளம்பிவிட்டான் அவன்.

தனிமையை நாடி ஊருக்கு வெளியே அவன் காற்றாட நடந்து சென்றபோது, 'ஜல்ஜல்' என மணியொலிக்கக் காளைகள் ஓடிவருவதைப் பார்த்தான். ஆம்! அன்றுதான் கல்லூரில் மஞ்சுவிரட்டுத் திருவிழா! மஞ்சுவிரட்டு முடிந்து மாடுகள் வீடு திரும்பிக் கொண்டிருந்தன.

அப்பொழுது கழியை ஊன்றிக்கொண்டு எதிரே கூ-கூ கிழவி வந்து கொண்டிருந்தாள். அவள் பின்னால் குப்பனும் சுப்பனும் அவளைக் கேலி செய்தபடி தொடர்ந்து வந்தனர். அவர்கள் இருவரும் மோகனுடைய வகுப்பில் படிப்பவர்களே! ஆனால், குணத்தில் அவனுக்கு எதிர் மாறானவர்கள்.

கூ-கூ-கிழவி!
கூனியக்காரக் கிழவி!
போ போ கிழவி!
பொக்கை வாய்க் கிழவி!

என்று ராகத்துடன் பாடியவாறு அவர்கள் வந்தனர்.

மோகன் அவர்களைப் பார்த்து, ''பாட்டியை ஏன் கிண்டல் செய்கிறீர்கள்? வயதானவர்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டாமா'' என்றான்.

''ஹோய்!.. பாட்டிக்கேற்ற பேராண்டியோய்!'' என அவர்கள் உடன் உரக்கக் கத்தினர்.

அந்த நேரத்தில் அந்தப் பக்கம் வந்து கொண்டிருந்த காளையொன்றின் மீது கல்லை எறிந்து, ''ஹோ! ஹோ!''

என்ன வேஷம்?

''அடுத்த வாரம் டெலிவிஷன்லே நான் நடிக்கிற நாடகம்!''

''அப்படியா? உனக்கு என்ன வேஷம்?''

''ஒரு அசரீரி குரல் மட்டும் கொடுக்கிறேன்.''

—அன்பிற்கினியவன்



என்று அவர்கள் துரத்தினார். மிரண்டு போன காளை நாலு கால் பாய்ச்சலில் ஒரே தாவாகத் தாவிக் கிழவியைக் கீழே தள்ளியது. கிழவி விழுந்த வேகத்தில் கீழே கிடந்த கூர்மையான கல் நெற்றியில் குத்தி இரத்தம் பெருகியது.

''ஐயையோ! என்ன காரியம் செய்தீர்கள்!'' எனத் துடித்துக் கிழவியின் அருகில் ஓடினான் மோகன். சட்டென்று தான் போட்டிருந்த ஒரே சட்டையைக் கிழித்து அவள் நெற்றியில் கட்டுப் போட்டான். இரத்தப் பெருக்கு சற்று நின்றது. உடன் சுப்பனையும் குப்பனையும் உதவிக்கு அழைத்தான். மெதுவாகப் பாட்டியை அவள் வீட்டில் சேர்க்க வேண்டும் என்பது அவன் எண்ணம்.

ஆனால் சுப்பனோ, ''ஐய்யய்யோ! நாங்கள் மாட்டோம். சூனியக்காரிக்கு உதவி செய்வதா? மாட்டவே மாட்டோம்!'' என ஓட்டம் பிடித்தான். குப்பனும் அவனைத் தொடர்ந்தான்.

மோகனே கிழவியைக் கைத்தாங்கலாக அவள் வீட்டில் கொண்டு சேர்த்தான். அங்கே அந்தக் கோர வடிவமுடைய ஆள் கிழவிக்காக மூட்டையுடன் காத்திருந்தான். கிழவியின் தலையில் கட்டைப் பார்த்ததும், ''ஐய்யய்யோ! என்ன ஆயிற்று உங்களுக்கு!'' என்று அலறினான்.

மோகனுக்குப் பெரிய அதிர்ச்சி. இத்தனை நாட்களாக அவனை ஊமையன் என்றல்லவா ஊரே நம்பியிருந்தது!

''கூ!கூ! ஒன்றுமில்லையப்பா கூ!கூ! எல்லாம் சிறுவர்களின் குறும்புத்தனம்தான்! கூ!கூ!'' என்று விடை பகர்ந்தாள் கிழவி.

கிழவி பேசி மோகன் கேட்பதும் இதுதான் முதல் முறை! அவனுக்கு வியப்புக்கு மேல் வியப்பு. அப்படியானால் இவர்கள் இவ்வளவு நாட்களாக நடந்து கொண்டதெல்லாம் நடிப்புத்தானா? மோகனுக்குத் திடீரென்று பயம் ஏற்பட்டது. உண்மையிலேயே இந்தக் கிழவி சூனியக்காரியாக இருந்தால்...?

கூ-கூ- கிழவியின் வேண்டுகோளின்படி மோகன் மருத்துவர் வீட்டிற்குச் சென்று அவரை அழைத்து வந்தான். மருந்து வைத்துக் கட்டிவிட்டு அவர் புறப்பட்டுச் சென்றார். மோகனும் புறப்பட எத்தனித்தான்.

''கூ-கூ! தம்பி! கூ-கூ! நீ கொஞ்சம் இரப்பா! நேரத்தில் உதவினாய்! கூ-கூ'' என்றாள் கிழவி.

மோகனோ பரபரத்தான். ''ஒன்றும் வேண்டாங்க!'' என்று எழுந்தான்.

''தம்பி! ரொம்பப் பயப்படுது! ஊரிலே கண்டபடி பேசுவார்கள்... ஆனால்.....'' என்று இழுத்த அந்தக் கோரமான ஆள் அவனைக் குடிசையின் உள்ளே இருந்த அறைக்குக் கூட்டிச் சென்றான்.

அங்கே—

பெரியதொரு கைராட்டை மத்தியிலே கம்பீரமாக வீற்றிருந்தது. கிழவி அருகில் சென்று அமர்ந்து அதை 'விர்.... விர்.... கிர்.. கிர்...' எனச் சுழற்றி நூற்க ஆரம்பித்தாள்.



மோகனுக்குப் பெருத்த அதிர்ச்சி. இந்த ராட்டை ஒலி கேட்டுத்தானு, மக்கள் வதந்திகளைக் கண்டபடி பரப்பிக் கொண்டிருந்தார்கள்!

பாட்டிக்குப் பின்புறம் பொக்கை வாய்ச் சிரிப்புடன் காந்திஜியின் படம் அவனைப் பார்த்து ஆசீர்வதித்தது.

''சூ!சூ! முருகா! தம்பிக்கு இன்னும் திகைப்பு நீங்கவில்லை! சூ!சூ! எல்லாவற்றையும் சொல்லிவிடு!'' என்றாள் பாட்டி.

''சொல்லலாமா?'' என்று தயங்கியபடி கேட்டான் முருகன் எனப்படும் கிழவியின் வேலையாள்.

''ஊம்! நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்! சூ!சூ! இனி சொல்லலாம்! சூ!சூ!'' என்றாள் அவள்.

பாட்டியின் சொந்த ஊர் அறுபது மைல்களுக்கு அப்பால் உள்ள எருமைப்பட்டி என்னும் கிராமம் ஆகும். பாட்டியின் கணவர் ஏராளமான நிலபுலன்களைவிட்டு விட்டு இறந்து போனார். அவர்களுக்குக் குழந்தை இல்லாததால், பாட்டியின் உறவினர்கள் அவளது சொத்தை அபகரிக்க முயன்றனர். ஒரு நாள் பாட்டியின் அண்ணன் மகனும், தங்கை மகனும் தனித்துப் பேசிக் கொண்டிருந்ததை முருகன் தற்செயலாக மறைந்திருந்து கேட்டான். அவர்கள் கிழவியைத் தூங்கும் போது கொலை செய்துவிட்டு, சொத்தைப் பிரித்துக் கொள்ளத் திட்டம் தீட்டினர்.

இது தெரியவந்த பாட்டி மிகத் துயர் அடைந்தாள். நிலபுலன்களை முருகனின் பார்வையில் விட்டுவிட்டு, யாருக்கும் தெரியாமல் இந்தக் குக்கிராமத்துக்கு வந்து தங்கி விட்டாள். முருகன் நல்ல பலசாலியானதால் யாரும் அவனிடம் நெருங்குவதில்லை. பாட்டி தல யாத்திரை சென்றிருப்பதாக எல்லோரிடமும் சொல்லி வந்தான் அவன்.

நிலத்திலிருந்து வரும் வருவாயைப் பாட்டி அறப் பணிகளுக்கே செலவிட்டு வந்தாள். தன் சாப்பாட்டுக்கு அதிலிருந்து ஒரு பைசா எடுப்பதில்லை. காந்திஜியின் கொள்கைகளில் பிடிப்புள்ள அவள், கைராட்டையால் தினமும் நூற்று அதைக் கொண்டு ஜீவனம் நடத்தி வந்தாள்.

வாரத்திற்கு ஒரு முறை முருகன் வருவான். பாட்டி நூற்ற நூலைக் கொண்டு போய் விற்றுவிட்டுப் பதிலுக்கு அரிசி பருப்பு வாங்கி வந்து தருவான். திரும்பும்போது பாட்டி நூற்ற நூலை எடுத்துச் செல்வான். இது தான் அவனது விஜயத்தின் மர்மம்!

பின் ஏன் இதனை மர்மமாக வைத்திருந்தார்கள்? முருகன் ஊமையனாகவும் பாட்டி அதிகம் யாரிடமும் பேசாமலும் இருந்ததற்குக் காரணம் என்ன? பாட்டி இந்த ஊரில் இருக்கும் விஷயம் வெளிப்பட்டால் உறவுக்காரப் போக்கிரிகள் இங்கு வந்து உயிருக்கு ஆபத்து விளைவிப்பார்களே!

''பாட்டி, இப்பொழுது எனக்கு எல்லாம் விளங்கி விட்டது.'' என்று வியந்து கூறினான் மோகன்.

''தம்பி சூ!சூ! எல்லோரும் இந்த ஊரில் என்னை வெறுத்தபோதும் அன்பு காட்டினாய் நீ! தக்க நேரத்தில் உயிர் காத்தாய்! சூ!சூ! இப்படிப்பட்ட தகுதி படைத்த பையனைத்தான் நான் தேடிக் கொண்டிருந்தேன் சூ!சூ! என் சொத்தை யெல்லாம் உன் பெயருக்கே எழுதி வைக்கப் போகிறேன்.'' என்று முடித்தாள் பாட்டி.

''நல்ல முடிவு!'' என்று பாராட்டினான் முருகன். தன் ஒரே சட்டையையும் இழந்து நின்ற மோகன் மலைத்து நின்றான்!



40 கோடி சகோதரர்கள்!

ஒருமுறை பத்து வயதுச் சிறுவன் ஒருவன் காந்திஜியைப் பார்த்து ''பாபு, நீங்கள் ஏன் எப்போதும் சட்டையே அணிவதில்லை? நான் வேண்டுமானல், என் அம்மாவிடம் சொல்லி உங்களுக்கு ஒரு சட்டை வாங்கித் தரட்டுமா?'' என்று கேட்டான்.


அவனைப் பார்த்துப் புன்னகைத்த காந்திஜி, ''நான் மட்டும் சட்டை போட்டுக் கொண்டால் என் சகோதரர்கள் என்னோடு சண்டைக்கு வந்து விடுவார்களே!'' என்றார்.

பையன் அவரை விடவில்லை. ''என் அம்மாவிடம் சொல்லி அவர்களுக்கும் சட்டை வாங்கித் தர ஏற்பாடு செய்கிறேன்.... அது சரி, உங்களுக்கு எத்தனை சகோதரர்கள்?'' என்றான்.

காந்திஜி அவன் கன்னத்தைச் செல்லமாக வருடியபடியே, ''நாற்பது கோடி'' என்றார்!

- சீதா பஞ்சு

கால்பந்து ஆடுவோம்



கால் பந்து ஒரு கோஷ்டிக்குப் பதினொரு ஆட்டக்காரர்களாக இரு கோஷ்டிகள் ஆடும் விளையாட்டு. இந்தக் காலத்து ஆட்டத்தின் நோக்கம் பந்தை எதிரி குழுவின் கோலில் செலுத்துவதுதான்! எந்தக் குழு அதிக கோல்களைப் போடுகிறதோ, அதுவே வெற்றி பெற்ற குழுவாகக் கருதப்படும்.

கால் பந்தாட்ட மைதானம் நூறு கஜ அகலமும், 130 கஜ நீளமும் கொண்டது.

இரு பக்கங்களிலும் கோல் கம்பங்களுக்கிடையே கோல் பகுதி இருக்கும். கோல் பகுதியில் ஃபெனல்டி பகுதி கோடு போட்டுக் காட்டப் பட்டிருக்கும்.

மைதானத்தில் ஒவ்வொரு மூலையிலும் ஐந்தடிக்குக் கொடிக் கம்பம் பதிக்கப்பட்டிருக்கும்.

கால் பந்தாட்டத்தை ரெபரி இரு லயன்மேன்களோடு நிர்வகிப்பார். ரெபரியே நேரக் கணக்கையும் ஆட்டரிக்கார்டையும் பதிவு செய்துகொள்வார். ஆட்டக்காரர்களுக்குக் காயப்பட்டு விட்டால், ஏதாவது குறுக்கீடுகள் நிகழ்ந்தால் ஆட்டத்தை நிறுத்தி வைத்து மறுபடி தொடங்கும் அதிகாரம் ரெபரிக்கு உண்டு.

மோசமான வெளிச்சம், ரஸிகர்கள் மைதானத்தில் படையெடுத்து இடையூறு செய்தால் ஆட்டத்தை 'முடிவுக்கு'க் கொணர ரிபரிக்கு அதிகாரம் உள்ளது.

லைன்ஸ்மேன் ஒவ்வொரு பாதியை நிர்வகிப்பார். பந்து 'அவுட்'டுக்குப் போனால் எந்தக் குழு ஆட வேண்டும் என்பதைக் குறிப்பிடுவது லைன்ஸ்மேன் பொறுப்பு. அவர் பகுதியில் ஏதாவது ஆட்டக்காரர்கள் தவறுகளைச் செய்தால் தம் கையில் உள்ள கொடியைத் தூக்கிக் காட்டி ரெபரிக்கு எடுத்துக் கூறுவார். அதனை முடிவெடுக்கும் உரிமை ரெபரிக்கே உண்டு.

ஒரு குழுவில் உள்ள பதினொரு ஆட்டக்காரர்களில் கோல் கீப்பரும் இருப்பார்.

கால் பந்தாட்டம் இரு பகுதிகளாக ஒவ்வொரு பகுதியும் 45 நிமிடங்களுக்கு நடக்கும். இடைவேளைக்குப் பிறகு கால் பந்தாட்டக் குழு இரண்டும் ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்கு மாறிக்கொள்ளும்.

பந்தை 'த்ரோ' செய்வதற்கு மட்டும் ஆட்டக்காரர்கள் கையினால் பந்தைத் தொடுவார். கையினால் பந்தைத் தொட்டு எடுத்து வீசுவதற்கு கோல் கீப்பருக்கு மட்டுமே அனுமதி கிடைக்கும். இவரும் தம் 'கோல் பெனல்டி' பகுதியிலேயே கையினால் தொட்டு வீசலாம்.

கோல் கீப்பர் மற்ற ஆட்டக்காரர்களிடமிருந்து வேறுபட வண்ண உடையில் மாறுதலாக அணிவார்.

ஜெர்ஸியோ, ஷர்ட்டுகளோ கால் பந்தாட்டக்காரர்கள் அணிவர். காலில் பூட்ஸ்களும் அணிந்து கொள்வார்கள்.

கோல் கீப்பர் பாதுகாப்புக்காகக் கையுறைகளை அணிவது உண்டு. ஆட்டக்காரர்களுக்குக் கையில் பந்தைத் தொடுவதற்கு அனுமதிக்கப்படாவிட்டாலும், தம் உடலின் எந்தப் பகுதியினாலும் பந்தைத் தேக்கி, 'பாஸ்' செய்து கோல் போட முயலலாம். அவர் பந்தைத் தேக்கக் கால், தலை, தொடை, மார்புப் பகுதிகளைப் பயன்படுத்துவார்.

90 நிமிஷ ஆட்டத்தில் வெற்றி தோல்வியின்றி ஆட்டம் முடிந்தால் இரு தடவை பதினைந்து நிமிஷ எக்ஸ்டிரா ஆட்டத்துக்கு ரெபரி வகை செய்வார். அதிலும் ஆட்ட முடிவு ஏற்படாவிட்டால், 'பெனல்டி கிக்' அடிக்க இரு குழுக்களையும் ஏவலாம். இல்லாவிட்டால் கடைசி முடிவாக நாணயத்தைச் சுண்டிப் போட்டு வெற்றி தோல்வியாளரை நிர்ணயிப்பார்.

கால் பந்து தோலினால் ஆனது. ஆட்டத் தொடக்கத்தின் போது பந்து 14.16 அவுன்ஸ் எடை இருக்கும். ஒரு ஆட்டத்தின்போது பந்து மாற்றப்படக் கூடாது. ஆனால் ரெபரியின் அனுமதியோடு பந்தை மாற்றிக் கொள்ளலாம்.

கால் பந்தாட்டக்காரர்கள் பூட்ஸ்களில் காயம் ஏற்படுத்தும் ஆணிகளைப் பொருத்திக் கொள்ளக் கூடாது. எந்த ஆட்டக்காரராவது பயங்கர ஆணிகளைப் பொருத்திக் கொண்டு ஆடினால், அவரை ஆட்டத்திலிருந்து விலக்குவதற்கு ரெபரிக்கு உரிமை உண்டு. அந்தப் பயங்கரப் பொருள்களை நீக்கிவிட்டுவந்து ஆடச் சொல்லவும் செய்யலாம்.


கால் பந்தாட்டத்துக்குத் தமிழ்நாட்டில் நல்ல மவுசு உண்டு. நேரு ஸ்டேடியத்தில் நடக்கும் கால் பந்தாட்டப் பந்தயங்களுக்குப் பல்லாயிரக் கணக்கில் வந்து கூடுவர்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் கால் பந்தாட்டப் பந்தயங்கள் ஒளி விளக்கில் புதுதில்லி ஜவாஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்றன. ஆசியக் கால் பந்தாட்டப் போட்டிகளைக் காண பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் குழுமியிருந்தார்கள். ஆசிய விளையாட்டுப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் ஆடும் பெருமையைப் பெற்ற நாடுகள் இராக்கும் குவைத்தும் ஆகும்.

குவைத்தும் இராக்கும் ஆசிய சாம்பியன் பட்டத்தை அடைவதற்குக் கடுமையாகப் போட்டி யிட்டன. ஒரே கோலைப் போட்டுக் கடைசியில் இராக் சாம்பியன் பட்டத்தைச் சூடிக்கொண்டது!

கேரளத்தில் கால் பந்தாட்டத்துக்கு அதிக அளவு ஈடுபாடு. அங்கே நிறைய சர்வதேசப் பந்தயங்கள் நடைபெற்று வருகின்றன. கொச்சியில் நேரு தங்கக் கோப்பைப் பந்தயம் நடந்து முடிந்தது. பிறகு கண்ணனூரில் பெடரேஷன் கோப்பைப் பந்தயம் நடந்து முடிந்தது. தமிழகத்திலும், சர்வதேசப் பந்தயங்கள் நடக்கும் நாளை வெகு ஆவலுடன் எதிர்பார்ப்போம்!





நாங்கள் செய்த நல்ல செயல்கள்



மோ.ஸ்ரீதர்

தாயைக் காப்பாற்றினேன்!

20—2—83 அன்று வந்தவாசிமருத்துவ மனை அருகில் ஒரு மின் கம்பத்துக்குப் பக்கத்தில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தாள் ஒரு தாய். அவள் அருகிலே மூன்று குழந்தைகள், (6, 4, 3 வயதுடையவை) கையிலே ஒரு குழந்தை, எல்லோரும் கதறி அழுது கொண்டிருந்தார்கள். தாயின் வாயில் நுரை தள்ளியது.

இக் காட்சியைக் கண்ட நான் அருகில் உள்ள தொலை பேசியில் (மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, படாளம், வந்தவாசி வட்டார அலுவலகம், போன் எண் 66) அரசினர் மருத்துவ மனையுடன் தொடர்பு கொண்டேன். மருத்துவர் 'அது போலீஸ் கேஸ். எனவே, போலீசில் தகவல் அளியுங்கள்'' என்றார். ஆனால், அதற்குக் கால தாமதம் ஆகும் என்று கருதிய நான், உடன் இருந்தவரை உதவிக்கு அழைத்தேன். ஆனால், அவர்கள் வராமல் போகவே, நானே ஒரு ரிக்‌ஷாக்காரரின் உதவியுடன் ரிக்‌ஷாவில் அந்த அம்மாளையும் குழந்தைகளையும்அழைத்துச்சென்றேன்.

பின் மருத்துவர் உதவியுடன் அப்பெண் உயிர் பிழைத்தாள். அவள் தன் கணவன் கொடுமை தாங்காமல் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றவள் எனத் தெரிந்தது. பின்னர் அவளுக்கு நாலைந்து (எனக்குத் தெரிந்தவர் மூலம்) வீடுகளில் பற்றுப் பாத்திரம் தேய்க்கும் வேலையில் சேர்ப்பித்தேன்.

நான் செய்த இன்னொரு உதவியும் குறிப்பிடத் தக்கது. மேல் மருவத்தூர் — வந்தவாசி போக்கு வரவு பெரியார் பஸ் ஒன்று சென்ற வருடம் (10—3—82) விபத்துக்கு உள்ளானது. அப்போது, ஒரு அலுவலருக்குப் பலத்த காயம். விபத்துக்குள்ளான பலர், அவர் மீது விழுந்து அழுத்தியதில் அவரது வலது மார்பு எலும்பு, இடது தொடை ஆகியவை தாக்கப்பட்டன.

அவரது விருப்பப்படி அவரை வேலூர் பெட்லண்ட் ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தனர்.

நான் அங்கு சென்றிருந்த சமயம் ''யாராவது ஒருவர் போய் அம்மன் பெயரில் ஓர் அர்ச்சனை செய்தால் அம்மன் மனம் குளிரும். என் உடல் நலம் பெறும்'' என்று கலக்கத்தோடு கூறினார். அதைக் கேட்ட நான் உடன்

விரைந்து அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்தேன். அவர் இன்று நலத்துடன் உள்ளார். அவருக்கு அவரது நம்பிக்கை வீண்போகவில்லை. எனக்கு ஒரு நோயாளிக்கு உதவிய திருப்தி. இப்படி நான் செய்த நல்ல உதவிகள்—சிறு சிறு உதவிகள் பல. அவற்றால் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

மோ. ஸ்ரீதர் (117)
கும்மிடிப்பூண்டி.

பாலகன் பிழைத்தான்!


ஆர். சுந்தர்


அன்று ஞாயிற்றுக் கிழமை.

நான் என் நண்பர்களுடன் எங்கள் ஊருக்கு அருகில் உள்ள பூம்புகாரின் எழிலை ரசித்து வரத் திட்டமிட்டு, அங்கே சென்றேன். பேருந்து நிலையத்தில் இறங்கியபோது வழக்கமான கலகலப்போடு பேருந்து நிலையம் காணப்பட்டது. அந்தப் பேருந்து சாலையில் பேருந்துகள் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறத் துடித்துக் கொண்டிருந்தன.

அந்தப் போட்டியில் ஒவ்வொரு பேருந்தின் ஹாரன் ஒலியும் சாலையின் குறுக்கே நின்று கொண்டிருந்த ஒரு மூன்று வயதுக் குழந்தையைத் தடுமாற வைத்தது. தன்னைச் சுற்றி நடப்பது எதையும் பொருட்படுத்தாமல் அது சாலையைத் தனதாக்கிக் கொண்டு தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தது. அதைச் சிலர் பார்த்தும் பாராதது போல் போய்க் கொண்டிருந்தனர். அப்போது ஒரு தனியார் பஸ்ஸும் ஒரு அரசினர் பஸ்ஸும் எதிர் எதிராக அந்தக் குழந்தையின் முன்னும் பின்னுமாய் வந்து கொண்டிருந்தன. அப்போதுதான் நான் திடீரென்று சாலையில் பாய்ந்து அந்தக் குழந்தையைத் தூக்கிப் பேருந்துகள் செல்ல வழி விட்டேன். அப்படிப் பாய்ந்து தூக்கியதில் எனக்குக் காலில் லேசாக அடிபட்டு விட்டது. நல்ல வேளை, அந்தக் குழந்தைக்கு எந்த விதக் காயமும் இல்லை.

பால் மணம் வீசும் அந்தப் பாலகன் என்னைப் பார்த்து அழ ஆரம்பித்த போது, யாரோ இருவர் என்னை நோக்கி ஓடி வந்தார்கள். நடந்ததைப் பார்த்தவர்கள் அவர்களிடம் விவரத்தை விளக்கத் தங்கள் மகனைக் காப்பாற்றியவன் நான்தான் என்று அறிந்து அவர்கள் மிக்க சந்தோஷப்பட்டு என்னைப் பாராட்டிப் பரிசு தர முயன்றனர். நானோ அவர்கள் தந்த எதையும் ஏற்காமல் அந்த இளம் பாலகனைக் காப்பாற்றியதை எண்ணி, அதில் கிடைத்த மகிழ்ச்சியோடு அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன்.

—ஆர். சுந்தர் (644)
விக்கிரபாண்டியம்



கண்ணன்: கார் மலிவாக வந்திருக்கு என்று தள்ளிவிட்டாராம் எங்க மாமா இந்தக் காரை எங்களுக்கு.

முரளி: அதுதான் தெரியறதே! அவர் அன்று தள்ளிவிட்டது இன்றுவரை தள்ளிவிடவேண்டிய நிலையிலேதான் இருக்குது. -லலிதா செல்லப்பா

பிச்சுவும் பிள்ளையாரும்



ஆழி. வே. ராமசாமி

மாலை ஆறு மணி.

பிச்சுவின் தம்பி முத்துவுக்குக் கடுமையான காய்ச்சல். பாவம், குழந்தை!

அப்பா வெளியூருக்குப் போய்விட்ட சமயத்தில் இப்படி ஆகிவிட்டது. அம்மா மிகவும் தவித்துப் போனாள்.

முத்து, ஜுர வேகம் தாங்க முடியாமல் திணறிக் கொண்டிருந்ததைப் பார்க்கப் பிச்சுவுக்கு அழுகை அழுகையாக வந்தது.

மூன்று நாட்களாக ஜுரம் குறையவே இல்லை. மாதக் கடைசி. பணத் தட்டுப்பாடு வேறு.

பக்கத்துத் தெருவில் இருந்த டாக்டர் வந்து பார்த்தார். ''ச்சு! ஜுரம் ரொம்பக் கடுமையாகத்தான் இருக்கிறது. உடனடியாகக் கவனிக்க வேண்டும். இல்லாவிட்டால் உயிருக்கே ஆபத்து! குழந்தை பிதற்ற ஆரம்பித்து விட்டான். மூன்று நாட்களாக இப்படி வைத்திருக்கிறீர்களே!'' என்று கோபித்துக் கொண்டார்.

''நாட்டு மருந்து கொடுத்துப் பார்த்தோம் டாக்டர்!'' என்றாள் பரிதாபமாக அம்மா.

''இந்தக் கேஸ் ரொம்ப சீரியஸ். என்னமோ என்னால் முடிந்த அளவு கவனிக்கிறேன்'' என்றார் டாக்டர்.

அம்மா திடுக்கிட்டாள். கண்கள் கலங்கின.

''ஊசி போட்டு விட்டுப் போகிறேன். ஆனால், இது மட்டும் போதாது. இதோ வேறு ஓர் ஊசியும் மருந்தும் எழுதியிருக்கிறேன். உடனே வாங்கி வரச் சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

அம்மாவுக்கு ஜுரத்தைப் பற்றிய கவலையுடன் பணத்தைப் பற்றிய கவலையும் வந்து விட்டது.

பணத்துக்காக அவள் பெட்டி சட்டியை யெல்லாம் தட்டிக் கொட்டிப் பார்த்தாள். பணம் இருந்தால்தானே கிடைக்கும்?

சோர்ந்துபோன அம்மா பிச்சுவைக் கூப்பிட்டாள்.

''பிச்சு, மருந்து வாங்கணும்டா. என்கிட்டப் பணமே இல்லேடா. நீ போய், அப்பாவோட சிநேகிதர் ராமநாதன்கிட்ட விஷயத்தைச் சொல்லி இருபது ரூபாய் கடன் வாங்கிட்டு வா. அப்பா வந்ததும் கொடுத்திடலாம். அந்தப் பணத்திலே அப்படியே மருந்தும் வாங்கிட்டு வந்துடு. இந்தா மருந்துச் சீட்டு'' என்றாள்.

அம்மாவிடமிருந்து மருந்துச் சீட்டை வாங்கிக் கொண்டு புறப்பட்டான் பிச்சு.

''பிச்சு, சீக்கிரம் வாங்கிட்டு வாடா. அங்கே இங்கே வேடிக்கை பார்த்திட்டு நின்னுடாதே!''

''இதோ ஒரு நொடியிலே வந்திடறேம்மா.''

ஓடினான் பிச்சு.


தம்பியிடம் அவனுக்கு அன்பு அதிகம். எப்போதும் தம்பியுடன் விளையாடிக் கொண்டிருப்பது அவனுக்குப் பிடிக்கும்.

'ராமநாதன் சாரிடம் பணம் இருக்குமோ என்னமோ? அவர் கிட்டே இல்லாவிட்டால் கூட, பக்கத்தில் தெரிஞ்ச யார் கிட்டேயாவது வாங்கித் தரச் சொல்லணும்' என்று நினைத்துக் கொண்டே ஓடினான் பிச்சு.

ஓடும்போது வழியில் இருந்த வரசித்தி விநாயகர் கோயிலின் முன்னால் சற்று நின்றான்.

'பிள்ளையாரே, ராமநாதன் சார் கிட்டே யிருந்து எனக்குப் பணம் கிடைக்கணும். நான் மருந்து வாங்கிட்டுப் போகணும். பணம் கிடைச்சா உனக்கு நூற்று எட்டுத் தோப்புக்கரணம் போடறேன்' என்று பிரார்த்தனை செய்து கொண்டான்.

மறுபடியும் ஓடினான். அவன் ஓட்டம் ராமநாதனின் வீட்டு வாசல் முன்னால்தான் நின்றது.



ஆனால், வாசல் கதவைப் பார்த்த அவன் திகைத்து நின்று விட்டான்.

வாசல் கதவு பூட்டப்பட்டிருந்தது!

பக்கத்து வீட்டில் விசாரித்தான்.

''அவங்க வீட்டிலே எல்லோரும் நேத்து வெளியூருக்குப் போயிட்டாங்களே!'' என்றார் பக்கத்து வீட்டுக்காரர்.

அப்படியானால், பணம்? மருந்து?

'பிள்ளையாரே, என்ன இது?'

''ஏன் தம்பி திகைச்சு நின்னுட்டே? ஏதாவது முக்கியமான செய்தியா?'' என்று கேட்டார் பக்கத்து வீட்டுக்காரர்.

''ஆமாங்க. என் தம்பிக்கு ஜுரம். மருந்து வாங்கணும். ராமநாதன் சார் கிட்டே கடன் வாங்கிட்டுப் போகலாம்னு வந்தேன்'' என்றான் பிச்சு.

''கடனா? அட, போ தம்பி! இந்தக் காலத்துலே உனக்கு யாரப்பா கடன் கொடுக்கப் போறாங்க?'' என்று சொன்ன அவர், விடுவிடு என்று உள்ளே போய்விட்டார்.

மேலும் அங்கே நின்றால், அவன் தன்னிடமே கடன் கேட்டு விட்டால் என்ன செய்வது என்று அவர் பயந்துக் கொண்டு கிளம்பி விட்டார்.

சோர்ந்து போய்த் திரும்பிக் கொண்டிருந்த பிச்சு, வரசித்தி விநாயகர் கோவிலுக்கு முன்னே நின்றான்.

''பிள்ளையார் மோசம் பண்ணிட்டார். மருந்து வாங்கப் பணம் கிடைக்கணும்னு வேண்டிக்கிட்டேனே! பணம் கிடைக்கலியே!'' என்று புலம்பினான்.

பிள்ளையாரை முறைத்துப் பார்த்தான்.

''போயும் போயும் உனக்கு நாற்றெட்டுத் தோப்புக் கரணம் போடறேன்னு பிரார்த்தனை பண்ணினேனே! பணமே கிடைக்கலியே. இனிமேல் உன் கோவில் பக்கமே திரும்பிப் பார்க்க மாட்டேன்!'' என்று சிறிது சத்தம் போட்டே சொன்னான்.

பிள்ளையாருடன் அவன் நேருக்கு நேர் பேசிக் கொள்வது போல் இருந்தது.

அவன் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது.

''டேய், பிச்சு! என்னடா, உனக்கு நீயே பேசிக்கிட்டிருக்கிறாய்? என்ன விஷயம்?'' என்று விசாரித்தான் அவன் நண்பன் பாலாஜி.

பிச்சுவின் மனத்துக்குள் இருந்த ஆத்திரம், அழுகையாக வெடித்தது. கேவிக் கேவி அழுது கொண்டே நடந்ததைச் சொன்னான்.

''இந்தப் பிள்ளையார் என்னை ஏமாத்திட்டார்டா. இனிமேல் இந்தப் பிள்ளையார் முகத்திலே முழிக்கவே மாட்டேன்டா, பாலாஜி!''

அவன் அழுவது பாலாஜிக்குப் பாவமாக இருந்தது.

''சரி, வீணே புலம்பிக்கிட்டு இருக்காதே. வீட்டுக்குப் போ. பணம் கிடைக்கல்லேங்கற செய்தியை உங்க

அம்மா கிட்டே சொல்லு. அவங்க வேறே ஏதாவது ஏற்பாடு செய்வாங்க!'' என்றான் பாலாஜி.

''வேறே என்ன ஏற்பாடு செய்ய முடியும்? ஒரு மண்ணும் முடியாது. ஐயோ! என் தம்பி சீரியஸ்னு டாக்டர் சொன்னாரே!'' என்று சொல்லிக் கொண்டே வீட்டுக்கு ஓடினான் பிச்சு.

அவன் கூடவே பாலாஜியும் ஓடினான்.

வாசலில் நின்ற அவன் அம்மா, ''ஏண்டா பிச்சு, பணம் கிடைத்ததா, மருந்து வாங்கினாயா?'' என்று கேட்டாள்

பிச்சு, அழுது கொண்டே, ''இல்லேம்மா, ராமநாதன் சார் குடும்பத்தோட வெளியூருக்குப் போயிட்டாராம். பணம் கிடைக்கலே. அதனாலே மருந்தும் வாங்க முடியலே!'' என்றான்.

''சரி, பரவாயில்லே. அழாதே. டாக்டர் போட்ட ஊசியிலேயே தம்பிக்கு ஜுரம் குறைஞ்சிடுத்து. இப்போ நல்லா இருக்கான். ஜுரம் குறைஞ்சால் வேறே ஊசியும் மருந்தும் வேண்டாம்னு டாக்டரே சொல்லி அனுப்பியிருக்கார். அத்தோடே அவரே தன் கிட்டே இருந்த ஒரு மருந்தையும் கொடுத்தனுப்பியிருக்கிறார்!''

பிச்சு அம்மாவையே பார்த்துக் கொண்டு நின்றான். ''அண்ணா!'' என்று முத்து சிரித்தபடியே அழைத்தான். பிச்சு உடனே தம்பியின் அருகே ஓடி அவனைத் தொட்டுப் பார்த்தான். ஜுரம் குறைந்துதான் இருந்தது.

''குழந்தைக்கு ஜுரம் குணமாகணும்னு அந்த வரசித்தி விநாயகரை நான் வேண்டிக்கிட்டேன். என் பிரார்த்தனை வீண் போகவில்லே. பணம் காசு கிடக்கட்டும். நமக்கு ஆரோக்கியத்தையும் நிம்மதியையும் சுவாமி கொடுத்தாரனாப் போதும்'' என்றாள் அம்மா.

பிச்சுவின் தலையில் அந்தப் பிள்ளையாரே 'நச்' என்று குட்டுவது போல இருந்தது.

பாலாஜி சொன்னான்: ''ஏண்டா, பிச்சு, சுவாமி கிட்டே உன் தம்பி குணமாகணும்னு வேண்டிக்கிட்டிருந்தால், எவ்வளவு நல்லா இருந்திருக்கும்? அதை விட்டுட்டுப் பணம் கிடைக்கணும்னு வேண்டிக்கிட்டே. இப்போ, பணமே இல்லாம உன் தம்பி குணமாயிட்டான்!''

''சரி, இருடா, பாலர்ஜி; வந்திடறேன்!'' என்று கிளம்பினான் பிச்சு.

''எங்கேடா கிளம்பிட்டே!''

''வரசித்தி விநாயகருக்கு ஒரு நூற்றெட்டுத் தோப்புக் கரணம் போட்டுவிட்டு வந்திடறேன்...'' என்று கூறிவிட்டு ஓடினான் பிச்சு!

சொல்லிப் பாருங்கள்!

வேகமாகச் சொல்லிப் பாருங்கள்: திரும்பத் திரும்பச் சொல்லிப் பாருங்கள்!

ஓடுகிற நரியிலே ஒரு நரி சிறு நரி

சிறுநரி முதுகிலே ஒருபிடி நரைமயிர்

கடல் அலையிலே ஒரு உரல் உருளுது, புரளுது,

தத்தளிக்குது, தாளம் போடுது

விரைவாகவும் சரியாகவும் சொல்பவர்கள் கெட்டிக்காரர்கள்!



என் பொழுது போக்கு தபால் தலை சேகரித்தல்

எஸ். சேஷாத்திரி (95)

இலண்டனிலிருந்த இளம் பெண் ஒருத்திக்கு வேடிக்கையான ஆசை உண்டாயிற்று. தன் அறையை அஞ்சல் தலைகளாலேயே அழகுபடுத்த வேண்டுமென்பதே அந்த ஆசை. இதற்காக அவள் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தாள். இதன் மூலம் அவளுக்கு 16,000 தபால் தலைகள் வந்தன. இவளே முதன் முதலாக அஞ்சல் தலை திரட்டுவதைப் பொழுது போக்காகக் கொண்டவள்.

1841 ஆம் ஆண்டில்தான் தபால் தலை சேகரிக்கும் கலை முதன் முதலாகத் தோன்றியது. இவ்வாறான தபால் தலைகளில் 'நினைவு அஞ்சல் தலைகள்' என்றும், 'சிறப்பு அஞ்சல் தலைகள்' என்றும் இரு பிரிவுகள் உள்ளன. காந்தியடிகள், நேருஜி, பாரதியார் போன்ற தலைவர்களின் நினைவாக வெளியிடப்படும் அஞ்சல் தலைகள் 'நினைவு அஞ்சல் தலைகள்' எனப்படுகின்றன. புதிய வசதிகள் அளிக்கப்படும்போது அவற்றின் சிறப்புக் கருதி வெளியிடப்படுவது சிறப்பு அஞ்சல் தலையாகும்.

மாணவர்களாகிய நாம் ஓரளவு நேரத்தைப் பொழுது போக்காகக் கழிக்க விரும்புவோம். அவற்றுள் ஒன்றுதான் அஞ்சல் தலை திரட்டுவதாகும். அதாவது ஆங்கிலத்தில் Stamp Collection என்று கூறுவர். அஞ்சல் தலையை நாம் பார்க்கும்போது ஒரு கவர்ச்சித் தன்மை உண்டாகிறது. இதனையே 'ஃபிலாடெலி' என்ற சொல் குறிக்கிறது.


அஞ்சல் தலை திரட்டுவது இரண்டு வகைப்படும். ஒன்று கருத்துத்தொகுப்பு; மற்றொன்று கலைத் தொகுப்பு. ஒரு நாட்டில் வெளியாகும் அனைத்து அஞ்சல் தலைகளையும் திரட்டுவது கலைத் தொகுப்பு. ஒரு பொருள் அல்லது கருத்தின் அடிப்படையில் வெளியான அனைத்து நாடுகளின் அஞ்சல் தலைகளையும் திரட்டுவது கருத்துத் தொகுப்பாகும்.

நம் போன்ற அஞ்சல் தலை சேகரிப்பவர்களுக்காகப் பல கடைகளும் ஆங்காங்கே தோன்றியுள்ளன. தவிர, நம் இந்திய அரசுத் துறை அஞ்சல் தலை சேகரிப்பவர்களுக்கு என ஆண்டு தோறும் பல கண்காட்சிகளை நடத்துகிறது. ஒவ்வொரு நாட்டில், வெளியாகும் அஞ்சல் தலைகளைக் கொண்டு அந்நாட்டின் சிறப்பை அறியலாம். அறிஞர்களையும், தலைவர்களையும், நினைவுச் சின்னங்களையும் பறவைகளையும் மிருகங்களையும், பல விளையாட்டு வீரர்களையும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களையும் இவை போன்ற பலவற்றையும் அறியலாம். அஞ்சல் தலை உலக மக்களிடையே எவ்வளவுதான் தூரம் இருந்தாலும் தோழமை கொள்வதற்குத் துணை செய்கிறது.

சுருக்கமாகக் கூறினால் அஞ்சல் தலை திரட்டும் கலை என்பது இளைய உள்ளங்களின் இனிய பொழுதுபோக்கே எனக் கூறலாம்.

(சேஷாத்திரியைப் போலவே இதுவரை சுமார் 1500 தபால் தலைகளைச் சேகரித்து வைத்துள்ள செல்வன் எஸ். கோபாலகிருஷ்ணன் (மடத்துக்குளம்) அனுப்பிய சில தபால் தலைகளை இங்கே நீங்கள் காணலாம்.





நிஜ நாடகம்

-திருவாழத்தான்-

அத்தனை அமர்க்களத்தில் விசில் ஊதப்பட்டதும், சத்தம் அடங்கியது. அந்த வீட்டில் அப்பாக்கள், அம்மாக்கள், மாமாக்கள், அத்தைகள், அண்ணா, அக்காமார், தம்பி தங்கைமார், நண்பர்கள் முதலானோர் கூடி இருந்தனர். தாத்தாக்களுக்கு இரண்டு ஈஸிச் சேர் போடப்பட்டிருந்தன. பெரியவர்களுக்கு நாற்காலிகள். சிறியோர் தரையில் உட்கார்ந்திருந்தனர். ஒரு குழந்தை தூளியில் உட்கார்ந்து ஆடியபடி கவனித்தது. ஒரே ஒரு மின் விசிறி மேலே சுழன்றது.

அன்று நாடகம். மாலை நேரம். மணி ஆறு அடிக்க ஐந்து நிமிடங்கள் இருந்தன. குமார், சீனு, ரமேஷ் மூவரும் ஒப்பனை செய்து-கொண்டு தயாராக இருந்தனர். மணி ஆறு அடித்ததும் நாடகம் ஆரம்பமாகும். நாடக நடிகர்கள், பார்வையாளர் எல்லாரும் மணி எப்போது ஆறு அடிக்கப் போகிறது என்று காத்திருக்கின்றனர். நேரம் தவறாமை கடைப்பிடித்தாக வேண்டும் என்பது நடிக நண்பர்களின் கொள்கை.

ஜன்னலுக்கு ஜன்னல் கயிற்றைக் கட்டி, இரண்டுவேட்டிகளைக்கயிற்றின் மீதுபோட்டுத் திரையாக்கி இருக்கிறான் ரமேஷ். இது அவன் வீடு. அவன் வீட்டில்தான் நாடகம் நடக்கிறது.


'ஆபத்தில் உதவாத நண்பன்' என்பது நாடகத்தின் பெயர்.

உங்களுக்குத்தான் கதை தெரியுமே! இரண்டு நண்பர்கள் காட்டின் வழியே செல்கிறார்கள். அப்போது எதிரே ஒரு கரடி வருகிறது. நண்பர்களில் ஒருவன் அருகில் இருந்த மரத்தின்மீது ஏறிக் கொண்டு விடுகிறான். மற்ற நண்பனுக்கு மரம் ஏறத் தெரியாது. சட்டென்று ஒரு யோசனை தோன்றுகிறது அவனுக்கு. இறந்தவனைப் போல் தரையில் படுத்து விடுகிறான். கரடி வருகிறது. படுத்திருப்பவனை முகர்ந்து பார்க்கிறது. பிறகு தன் வழியே அது சென்று விடுகிறது.

மரத்தில் இருந்த நண்பன் இறங்கினான். தரையில் படுத்திருந்த நண்பனை எழச் செய்து ''கரடி உன் காது அருகில் ஏதோ சொல்லியதே. என்ன சொன்னது?'' என்று கேட்டான்.

''ஓ, அதுவா? அது, ஆபத்தில் உதவாத நண்பனுடன் சேராதே! என்று சொன்னது'' என்றான் தரையில் படுத்திருந்த நண்பன்.

பரீட்சைக்குப் பிறகு பள்ளியில் கோடை விடுமுறை அறிவித்து விட்டார்கள். குமார், சீனு, ரமேஷ் மூவரும் விடுமுறையை எப்படிக் கழிப்பது என்பதைக் குறித்து விவாதித்தார்கள். இந்த விடுமுறையின்போது அவர்களால் வேறு ஊருக்குச் செல்ல முடியவில்லை. எங்கும் தண்ணீர்ப் பஞ்சம்,



அதனால் உறவினர்கள் எவரும் அவர்களை அழைக்கவில்லை.

அவர்கள் நாடகம் போடுவது என்று நிர்மானித்தார்கள். என்ன நாடகம் போடுவது? குமார்தான் சொன்னான். இந்த 'ஆபத்தில் உதவாத நண்பன்' என்ற கதையை நாடகமாகப் போடலாம் என்று.

''அதுக்கு காட்டு ஸீன் ஜோடனை வேணுமேடா!'' என்றான் ரமேஷ்.

''இப்போதெல்லாம் அப்படி ஜோடனையோடு நாடகம் போடுவதில்லை. 'காடு' என்று பெரிசாக எழுதிச் சுவரிலே தொங்க விட்டோம்னு பார்க்கறவங்க காட்டுலே நடக்கும் நிகழ்ச்சின்னு தெரிஞ்சுக்குவாங்க'' என்றான் குமார்.

''கரடியா நடிக்கிறவனுக்கு ஒப்பனை பண்ணக் கரடி டிரஸ் வேணுமே!'' சீனு கேட்டான்.

''எங்க வீட்டிலே மூஞ்சியோடே கரடித் தோல் பாடம் பண்ணினது இருக்கு. அதை நான் கொண்டு வரேன்'' என்றான் குமார்.

' அப்படின்னா சரி. ஆபத்தில் உதவாத நண்பன் நாடகமே போடலாம். எங்க வீட்டிலே பெரிய கூடம் இருக்கு. அங்கேயே நாடகம் போடலாம்'' என்றான் ரமேஷ்.

அவர்கள் வசனம் பேசினார்கள். ஒத்திகை பார்த்தார்கள். கரடித் தோலைப் போர்த்திய படி வந்து குமார் சிறு குழந்தைகளைப் பயமுறுத்தினான். அவர்கள் அலறி ஓடினார்கள்.

போதாததற்கு அந்த நகருக்கு சர்க்கஸ் குழாம் ஒன்று வந்திருந்தது. அந்த சர்க்கஸ் கூடாரத்தில் சிங்கம், புலி, கரடி, காண்டா மிருகம், யானை, ஒட்டகங்கள் முதலியவை பல வித்தைகளைக் காட்டி, வந்திருந்த மக்களை மகிழ்வித்தன. கரடி சைக்கிள் ஓட்டியது. முன் கால்களை மட்டும் தரையில் ஊன்றி, பின் கால்களை உயர்த்தி நடந்தது. கரடித் தோலைப் போர்த்தியபடி குமாரும் கரடி வித்தைகள் செய்தான்.

ஒப்பனை செய்துகொண்ட நண்பர்கள் மூவரும் நாடகம் நடைபெற இருக்கும் கூடத்துக்கு வெளியே தோட்டத்தில் காத்திருந்தனர். கடிகாரம் ஆறு மணி அடித்தது. சீனுவும் ரமேஷூம் பேசியபடி கதவைத் திறந்து கொண்டு நாடக அரங்கத்தில் நுழைந்தனர். முன்பே சொல்லிவைத்தபடி ரமேஷின் மாமா திரையை விலக்கினார்.

சீனுவும் ரமேஷூம் மேடையில் (அதாவது காட்டில்) நடந்தனர். சிறிது நேரம் இப்படியும் அப்படியுமாக நடந்த பின்னர், ''என்னடா கரடியை இன்னும் காணோம்?'' என்றான் சீனு.

பார்வையாளர்கள் எல்லோருமே இப்போது சிரித்தனர்.

''ஏய் கரடி...! குமார், சீக்கிரம் வாடா!'' என்றான் ரமேஷ்.

அப்போது கரடி நுழைந்தது.

ரமேஷ் திரும்பி ஓடி, பாய்ந்து மேஜை மீது ஏறி உட்கார்ந்து கொண்டான். மேஜை தான் மரம்.

சீனு சடாரென்று தரையில் படுத்து இறந்தவன் போல நடித்தான்.

கரடி வந்து சீனுவை முகர்ந்து பார்த்தது. அவனுடைய காதில் கரடியின் மீசை குறுகுறுத்தபோது, மிகப் பொறுமையுடன் அசையாது படுத்திருந்தான். அது அவனுடைய மூக்கு அருகில் தன் முகத்தைக் கொண்டு போனபோது ''சீக்கிரம் போடா, குமார்! தோல் ரொம்ப நாறுது!'' என்றான் சீனு.

பார்வையாளர்கள் சிரித்தனர். கரடி நகரவில்லை. சீனுவின் அருகில் உட்கார்ந்தது.

''நிஜக் கரடி போலவே குமார் நடிக்கிறானே!'' என்றாள் குமாரின் தாய் வியப்புடன்.



''காப்பியைப்பத்திகட்டுரைஎழுதச் சொன்னால், இரெண்டு பேரும் ஒரே மாதிரி எழுதி இருக்கீங்களே!யாரைப் பார்த்து யார் காப்பி அடிச்சது?''

''நன்றாகப் பாருங்க சார்! ஸ்ட்ராங் காப்பியைப் பத்தி நான் காப்பிங் பென்சிலால் எழுதி இருக்கேன். அவன் லைட் காப்பி பத்தி சாதாபென்சிலால் எழுதி இருக்கிறான்!''

''அது எப்படிக் கரடி மாதிரியே கண்களைக் கொட்டறான்?'' குமாரின் தந்தை கேட்டார்.

சீனு எழுந்து உட்கார்ந்தான். ''போடா, குமார்! நீ போன பிறகுதான் ரமேஷ் மரத்திலிருந்து இறங்கி வரணும். போயேன்!'' என்றான்.

கரடி அவனைப் பார்த்து விழித்துவிட்டு, நாக்கை வெளியே நீட்டிக் கீழ் உதட்டை ஈரமாக்கிவிட்டு, வாயை மூடிக்கொண்டது.

சீனு எழுந்தான். ''போயேண்டா, குமார்'' கரடியைப் பிடித்துத் தள்ளினான். அது அசையவில்லை.

''நிஜக் கரடி போல இருக்கே!'' ரமேஷின் அம்மா சொன்னாள்.

கரடி கொட்டாவி விட்டது. அதன் பெரிய பற்கள் தெரிந்தன.

''ஐயோ! நிஜக் கரடியேதான்!'' — பார்வையாளர்களின் நடுவில் உட்கார்ந்திருந்த குமாரின் மாமா எழுந்து, மற்றவர்களின் தொடைகள் மீது கால்களை வைத்து வெளியே ஓடினார்.

எல்லோருமே எழுந்து ஓடப் பார்த்தார்கள், முட்டிக் கொண்டார்கள், மோதிக் கொண்டார்கள்.

அலறியபடி சீனு மேஜை மீது ஏறி ரமேஷ் அருகில் உட்கார்ந்து கொண்டான்.

''நீ ஏறக் கூடாதுடா! உனக்கு மரம் ஏறத் தெரியாது!'' என்று சொல்லியபடி ரமேஷைக் கீழே தள்ள முயன்றான்.

''போடா! நிஜக் கரடி வந்திருக்கு! குமார் கரடியைக் காணோம்!'' என்று கூறி சீனு அருகில் இருந்த கோட் ஸ்டாண்ட் முளையை இறுகப் பற்றிக் கொண்டான்.

அதே சமயம் அவ்வீட்டினுள் சிலர் நுழைந்தனர். ''சர்க்கஸ் கூடாரத்திலிருந்து ஒரு கரடி தப்பி வந்து விட்டது. இங்கே நுழைந்ததா?'' என்று அவர்களில் ஒருவர் கேட்டார்.

''ஆமாமா! உள்ளே இருக்கு!'' என்றார் ரமேஷின் தந்தை.

வந்தவர்கள் சர்க்கஸ் கோஷ்டியினர். அவர்கள் கூடத்துக்கு வந்து, அங்கே சமர்த்தாக உட்கார்ந்திருந்த கரடியின் கழுத்தில் கயிற்றை இறுகக் கட்டி அதை இழுத்துக் கொண்டு சென்றார்கள்.

அவர்கள் கரடியுடன் சென்ற பிறகு, குமார் தெருக் கோடியிலிருந்து கரடி வேஷத்துடன் வந்தான்.

''ஐயையோ! இந்தப் பக்கம் இன்னொரு கரடி வருது!'' என்று தெருவில் நின்றிருந்தவர்கள் ஓடினார்கள்.

குமார் வந்து, ரமேஷ் வீட்டில் வாயிற் கதவைத் தட்டினான். ''ரமேஷ், கதவைத் திறடா, நான்தான் குமார் வந்திருக்கேன்!'' என்றான்.

கதவு திறக்கப்பட்டது. கரடி வேஷத்துடன் குமார் வீட்டினுள் வந்து, தன் ஒப்பனையைக் கலைத்தான்.

''எங்கேடா போனே? நிஜக் கரடி ஒண்ணு சர்க்கஸ் கூடாரத்திலேருந்து தப்பி, உனக்குப் பதிலா இங்கே நடிக்க வந்துடுத்து!'' என்றான் ரமேஷ்.

''ஆமா, நீயும் சீனுவும் நடிக்க உள்ளே போனீங்களா, அப்போ இந்தக் கரடி வந்தது. என்னையும் அதன் இனம்னு நினைச்சதோ என்னவோ! அது என்கிட்ட வரவும் நான் பாய்ஞ்சு வெளியே ஓடிட்டேன்!'' என்றான் குமார்.

''பாரேன், நாம் நாடகம் போடறோம்னு தெரிஞ்சு, நிஜக் கரடியே நடிக்க வந்திருக்கு'' என்று சீனு சொல்லவும் கூடி இருந்தவர்கள் அனைவரும் சிரித்தனர்.



அந்தக் காலம்

— எம். குருமூர்த்தி —

அன்று விடுமுறை நாள். மைதானத்தில் சிறுவர் கூட்டம் அதிகமாக இருந்தது. அப்பொழுதுதான் அவர்களில் ஒருவன் அந்தப் பொருளைக் கண்டெடுத்தான். என்ன அது? முட்டையா! இல்லை. கீழே போட்டால் உடையவில்லை. பின்னே ஏதேனும் தானியமாக இருக்குமோ? இவ்வளவு பெரிய தானியம் உண்டோ? என்றெல்லாம்அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். என்னவாக இருந்தால் என்ன? நமக்கு விளையாடுவதற்கு ஒரு புதிய பொருள் கிடைத்தது என்று விளையாடத் தொடங்கினார்கள்.

அந்த வழியே போன ஒரு வியாபாரி அந்த அதிசயப் பொருளைக் கண்டான். சிறுவர்களிடம் ஒரு பந்தைக் கொடுத்துவிட்டு அதை வாங்கிச் சென்றான். மறுநாள் அரசவைக்குச் சென்று அரசருக்கு அந்த அதிசயப் பொருளை அன்பளிப்பாக அளித்தான்.

அரசருக்கும் அது ஓர் அற்புதப் பொருளாகத் தோன்றியது. அது என்னவாக இருக்கும் என்று அவரும் மந்திரிகளும் விவாதித்துக் கொண்டிருக்கும்போதே, ஒரு குருவி உள்ளே பறந்து வந்து அதைக் கொத்தித் தின்னத் தொடங்கியது. அரசருக்கு ஒரே வியப்பு! ''இவ்வளவு பெரிய தானியமா? இது எங்கே விளைகிறது?'' என்றெல்லாம் அறியத் துடித்தார். யாரேனும் ஒரு முதியவரை அழைத்து வருமாறு ஏவினார்.

ஏவலாட்கள் சுற்றி அலைந்து, நூறு வயது மதிக்கத் தக்க ஒரு கிழவரை வண்டியில் ஏற்றிக்கொண்டுவந்தார்கள். அவருக்குக் கண் பார்வை சரியில்லாமல் இருந்தது. அரசர் தன் முன்னால் இருந்த தானியத்தைப் பற்றிக் கேட்டபொழுது முதியவர் விழித்தார். அவருக்குக் காதும் கேட்காது என்ற விஷயம்அவர்களுக்கு அப்போதுதான் தெரிந்தது. மந்திரி உரத்த குரலில் அந்த அதிசய தானியத்தைப் பற்றிக் கேட்டார்.

''எனக்குத் தெரியாது. என்னுடைய அப்பாவுக்கு ஒருவேளை தெரிந்திருக்கலாம். நீங்கள் அவரைக் கூப்பிட்டுக் கேளுங்கள்'' என்று கிழவர் சொல்லிவிட்டார்.

அரசருக்கு மீண்டும் வியப்பு. ஆட்கள் பறந்தார்கள். அவருக்கு நூற்றி இருபது வயதுக்கு மேல் இருக்கும். ''வண்டி எல்லாம் வேண்டாம்'' என்று சொல்லிவிட்டுத் தடி ஊன்றி

நடந்து வந்தார். மந்திரி அவரிடம் உரத்த குரலில் பேசியபொழுது, ''ஏன் இப்படி இரைந்து பேசுகிறீர்கள்? எனக்குக் காது நன்றாகவே கேட்கும்'' என்று கோபித்துக் கொண்டார்.

அதிசயத் தானியத்தைப் பற்றிக்கேட்டபோது, ''எனக்குத்தெரியாது. என் தகப்பனார் காலத்தில் இது போன்ற பெரிய தானியங்கள் விளைந்தன என்று கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களுக்கு நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் என் தந்தையைக் கேட்டுக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி விட்டார்.

அரசருக்குவியப்புத் தாளவில்லை. மீண்டும் கட்டளைகள் பிறந்தன. முதன் முதலாக அழைத்து வந்த முதியவரின் பாட்டனாரைக் கண்டு பிடித்தார்கள். அவர் தமக்கு நூற்றி ஐம்பது வயதுக்கு மேல் ஆவதாகச் சொன்னார். என்றாலும் தடி ஊன்றாமல், வேக வேகமாக நடந்து போனார். ஏவலாட்கள் அவர் பின்னால் ஓட வேண்டியிருந்தது. கண், காது முதலிய புலன்கள் தெளிவாக வேலை செய்தன. அரசர் அவரிடம் அந்த அதிசய தானியத்தைப் பற்றிக் கேட்டார்.

''நான் இளைஞனாக இருந்த காலத்தில் இந்த நாட்டில் விளைந்த தானியம் இவ்வளவு பெரியதாகத்தான் இருந்தது. ஆனால், அதற்கப்புறம் இது போன்ற தானியத்தை யாரும் விளைவிக்கவில்லை'' என்று அந்த முதியவர் சொன்னார்.

''உங்களுடைய நிலம் எங்கே இருந்தது?'' என்று அரசர் கேட்டார்.

''என்னுடைய நிலமா? அந்தக் காலத்தில் யாருக்கும் சொந்த நிலம் இல்லாமல் இருந்தது. விளைகிற எல்லா நிலங்களும்எல்லாருக்கும் சொந்தமாக இருந்தன. யார் எங்கே வேண்டுமானாலும் விவசாயம் செய்யலாம். தனக்கு வேண்டிய அளவுக்கு ஒவ்வொருவரும் சாகுபடி செய்வார்கள். சில சமயம் தேவைக்கு அதிகமாக விளைவது உண்டு. அதையெல்லாம் தேவைப்படுபவர்களுக்கு இனமாகவே கொடுப்போம். அந்தக் காலத்தில் எல்லாம் தானியத்தை விற்பதோ வாங்குவதோ பழக்கத்தில் இல்லை.''

முதியவர் இப்படிச் சொல்லி முடித்ததும், அரசர் சிந்தனையில் ஆழ்ந்தார். கொஞ்ச நேரத்துக்கப்புறம் தன்னுடைய மந்திரியை நோக்கிச் சொன்னார்:

''எவ்வளவு பெரிய விஷயத்தை இந்த முதியவர் நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார், பார்த்தீர்களா? அந்தக் காலத்தைப் பற்றியெல்லாம் நீங்கள் எனக்கு ஒன்றுமே சொல்லவில்லையே? போகட்டும். இன்று முதல் நம்முடைய நாட்டில் உள்ள நிலங்களும் எல்லோருக்கும் சொந்தமாகட்டும். இதே போன்ற தானியத்தை மீண்டும் பயிர் செய்ய நாம் எல்லோரும் கூட்டாக முயற்சி செய்வோம். அப்போதுதான் நாட்டில் உள்ள பஞ்சமும், பட்டினியும் நீங்கும்'' என்று சொல்லி முடித்தார்.


(ஒரு மலையாளக் கதையின் தழுவல்)

குருவும் சிஷ்யனும்

ஜோஸ்யர்: குரு எட்டாம் இடத்தில் இருக்கிறான்.
ஜோஸ்யம் கேட்க வந்தவர்: சிஷ்யன்?
ஜோஸியர்: 'மாட்னி ஷோ'வுக்கு டிக்கெட் வாங்கப் போயிருக்கிறான்.

—இரத்தினம்





ட்டம்

சிறுவன் 1: மாவட்டம் பெரிசு: வட்டம் சிறுசு. வட்டத்தைவிடச் சின்னது எதுடா?
சிறுவன் 2: இன்னும் ஒரு எழுத்தைக் குறைச்சுடு. 'ட்டம்'!

—ஆர். எஸ். சுப்பிரமணியன்



கண்ணனின் தந்திரம்

பட்டுக்கோட்டை ரவி

ஆலத்தூர் கிராமத்தில் கந்தசாமி என்ற ஏழை விவசாயி வாழ்ந்து வந்தான். அவன் தனக்குள்ள கொஞ்ச நிலத்தில் பயிர் செய்து அதில் விளையும்தானியங்களில் தன் சாப்பாட்டுக்குப் போக மிஞ்சுவதை விற்றுப் பிழைப்பு நடத்தி வந்தான்.

இந்த வருடமும் அது போல் தை மாதம் அறுவடை செய்த சம்பா நெல் தானியங்களைத் தன் வீட்டுக்குத் தேவையான அளவு வைத்துக் கொண்டான். மீதமிருந்த நான்கைந்து நெல் மூட்டைகளைத் தன் வீட்டுக் கட்டை வண்டியில் ஏற்றி, ஓட்டிக் கொண்டு சென்றான். அவ்வூர் மிராசுதாரான பெரிய பண்ணை என்று அழைக்கப் படும் தர்மலிங்கத்தின் அழகிய மாடி வீட்டை நோக்கிப் போனான்.

அந்தக் கிராமத்தில் எவருடைய நிலத்தில் விளைந்த தானியங்களாக இருந்தாலும் சரி, பெரிய பண்ணை தர்மலிங்கத்திடம்தான் விற்பனை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தர்மலிங்கத்தின் பகையைச் சம்பாதித்துக் கொள்வது மட்டுமல்லாமல், மறு வருடத்துக்குத் தேவையான உரமும், பூச்சி மருந்தும் அவரிடமிருந்து கடனாகக் கிடைக்காது.

வாசலில் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார் தர்மலிங்கம். விவசாயி கந்தசாமியை வண்டியுடன் கண்டதும், அவனிடமிருந்து நெல் மூட்டைகளைத் தந்திரமாக அபகரிக்க மனத்துக்குள்ளேயே ஒரு திட்டம் போட்டுக் கொண்டு எழுந்து போய் வண்டியின் முன் நின்றார்.

வண்டியை விட்டு இறங்கினான் கந்தசாமி.

''வோய்... கந்தா... உன் வண்டி நெல்லுக்கு எவ்வளவுடா பணம் வேண்டும்?'' என்று கந்தனைப் பார்த்துக் கேட்டார் தர்மலிங்கம்.

''நான் என்ன சொல்வது எஜமான். நீங்களே பார்த்துக் கொடுங்க...'' என்றான் விவசாயி கந்தசாமி.

தர்மலிங்கம் இதுதான் சரியான சந்தர்ப்பம் என்றெண்ணி ஜிப்பாப் பாக்கெட்டிலிருந்து நூற்றி ஐம்பது ரூபாய் எடுத்துக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்ட கந்தசாமி, மாட்டை அவிழ்த்து வண்டியிலிருக்கும் மூட்டைகளை விருவிருவென்று இறக்கப் போனான்.

அதைக் கண்ட தர்மலிங்கம் கந்தசாமியைத் தடுத்து, ''நான் உன்னிடம் வண்டி,நெல் எல்லாத்தையும் சேர்த்துத்தான் விலை பேசினேன். ஆகவே நீ நெல் மூட்டைகளை வண்டியுடன் நிறுத்தி விட்டுப் போ'' என்றார்.

தினசரி காலண்டர்

அம்மா: தினசரி காலண்டர் வாங்கா தீங்கன்னு சொன்னேனே, கேட்டீங்களா?

அப்பா: அதனாலே இப்போ என்ன நஷ்டம்?

அம்மா: நம்ம வீட்டு வாண்டுகள் தேதி கிழிக்கிறதுக்குப் போட்டி போட்டுக் கொண்டு ஒரு நொடியிலே எல்லாத்தையும் கிழிச்சுப் போட்டுட்டாங்க. அட்டைதான் மிச்சம்!

—எஸ். ஆர். சின்னமணி



அவர் இப்படிக் கூறியதைக் கேட்டதும் கந்தசாமிக்கு ஆத்திரமும் அழுகையும் வந்தன. அடக்கிக் கொண்டு, துயரத்துடன் தனது வீட்டுக்குச் சென்றான். தன் மகன் கண்ணனிடம் சொன்னான். கண்ணன் கொஞ்சம் படித்தவன். ஆதலால், தன் தந்தையைத் தர்மலிங்கம் நயவஞ்சகமாக ஏமாற்றி விட்டதை உணர்ந்தான். உடனே வீட்டில் சாப்பாட்டுக்கென ஒதுக்கி வைத்திருந்த நெல் மூட்டைகளில் ஐந்தைப் பக்கத்து வீட்டுக்காரரின் வண்டியில் ஏற்றிக் கொண்டு போய்த் தர்மலிங்கத்தின் முன் நின்றான்.

முன்போலவே தர்மலிங்கம் கண்ணனிடம் ''வண்டி நெல்லுக்கு எவ்வளவு பணம் வேணும்?'' என்று கேட்டார்.

''உங்க கையோடே எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக்கிறேன் எசமான்....'' என்றான் கண்ணன்.

தர்மலிங்கம் தன் வீட்டுப் பீரோவைத் திறந்து ஒரு கை நிறையச் சில்லறை நாணயங்களாக அள்ளிக்கொண்டு வந்து நீட்டினார்.

தன் கையில் தயாராய் வைத்திருந்த அரிவாளை எடுத்துத் தர்மலிங்கத்திடம் கொடுத்து, ''இந்தாங்க எஜமான், உங்க கையோட வெட்டிக் கொடுங்க'' என்றான் கண்ணன்.

''என்னது!கையோடு வெட்டித் தருவதா!'' பதை பதைப்போடு கேட்டார் தர்மலிங்கம்.

''ஆமாம் எஜமான்... நான் 'உங்க கையோடே எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக்கிறேன்'னுதானே சொன்னேன்?''என்று கூற, அவனின் சூசகமான வார்த்தையைப் புரிந்து கொண்ட தர்மலிங்கம், 'திருதிரு'வென விழித்தார். சுற்றியிருந்தவர்கள் எல்லாம் அவரைப் பார்த்து உள்ளூரச் சிரித்தார்கள். தருமலிங்கம் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, ''தம்பி, உன் அறிவு கூர்மையானது. அதைப் பாராட்டுகிறேன்'' என்று கூறி அவனைத் தட்டிக்கொடுத்தார். ''உன் அறிவுத் திறத்தைப் பாராட்டி, உன் தந்தையின் வண்டியையும் நெல் மூட்டைகளையும் திருப்பித் தருகிறேன்'' என்றார். அவ்வாறே செய்தார். அன்று முதல், அவர் தமது ஏமாற்று வித்தையை மூட்டை கட்டி வைத்துவிட்டார்.

கண்ணனின் புத்திசாலித்தனமான தந்திரத்தால் அந்தக் கிராமத்துக்குப் புதிய விழிப்பு ஏற்பட்டது!

கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை -600 032

இச்சங்கத்தில் யார் சேரலாம்?

தமிழ் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் குழந்தைகள் சங்கத்தில் சேரவேண்டும் என்பது எங்கள் ஆசை.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினர் ஆகலாம்.

உறுப்பினர் ஆனதும்.....

கோகுலத்திற்கு நீங்கள் எதை எழுதினாலும் எப்போது எழுதினாலும் மறக்காமல் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப் பட்டிருக்கும். உறுப்பினர் பெயரும், பிறந்த நாளும் முகவரியும் அதில் இருக்கும்.

பயன் என்ன?

உறுப்பினர் ஆனவர்களின் பெயர்களை முகவரியுடன் கோகுலத்தில் வெளியிடுவோம். உறுப்பினர்கள் இதன் மூலம் பேனா நண்பர்கள் ஆகலாம்.

உறுப்பினர்கள் கோகுலத்துக்குக் கதைகள், கவிதைகள், துணுக்குகள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

உறுப்பினர்களுக்கான பலவிதப் போட்டிகளை நடத்துவோம். வெற்றி பெறுவோர் பரிசுகள் பெறலாம். அவர்களின் படங்களையும் வெளியிடுவோம்.

'கோகுலம்' கௌரவ ஆசிரியர், ஆசிரியர், அல்லது 'கோகுலத்தின் பிரதிநிதிகள் உங்கள் பகுதிக்கு வந்தால் அறிவிப்போம். சந்தித்து உரையாடலாம்.

ஆண்டுக்கு ஒரு முறை நல்ல முறையில், பயன் தரும் வகையில் விழா நடத்தலாம்.

உறுப்பினராகக் கட்டணம் உண்டா?

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் மனு


பெயர்:

பிறந்த தேதி:

முகவரி:

கையெழுத்து

ஒரே கோட்டில்



பல பறவைகள்

கீதா



பள்ளிக்கூடத்துக்கு நேரமாகிவிட்டது. வீட்டுக் கணக்கை வேகமாகப் போட்டுக் கொண்டிருந்தான், பாலு. அப்போது—

''பாலு!'' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வந்தார், அப்பா.

பாலு திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். அவன் முன்னே முகத்தில் மகிழ்ச்சியுடன் நின்றுகொண்டிருந்தார் அப்பா. 'இப்போதுதானே ஆபீஸுக்குப் புறப்பட்டுப் போனார். ஏன் திரும்பி வந்துவிட்டார்' — இப்படி எண்ணிக் கொண்டிருக்கும்போதே—

''நீ பள்ளிக்கூடத்துக்குப் போகச் சைக்கிள் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தாய் அல்லவா? வாசலில் ஒரு சைக்கிள் இருக்கிறது. பிடித்தமாக இருக்கிறதா என்று பார்த்து விட்டு வா'' என்றார், அப்பா.

மகிழ்ச்சியுடன் வெளியே ஓடினான், பாலு.

வாசலில் ஒரு சைக்கிள் நிறுத்தப் பட்டிருந்தது. அதன் அருகில் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

பாலு, சைக்கிளைச் சுற்றிப் பார்த்தான். புதியதாக இல்லா விட்டாலும் வாங்கி அதிக நாட்கள் ஓடியதாகத்-தெரியவில்லை. திரும்பி வந்து, ''சைக்கிள் நன்றாக இருக்கிறது'' என்றான், பாலு.

''சரி'' என்ற அப்பா, அலமாரியிலிருந்து பணத்தை எடுத்து எண்ணத் தொடங்கினார்.

சமையற்கட்டிலிருந்து வந்த அம்மா, ''சைக்கிள் எங்கே வாங்கினீர்கள்?'' என்று கேட்டாள்.

அதற்கு அப்பா, ''ஆபீஸுக்குப் போய்க் கொண்டிருக்கும்போது ஓர் ஆள் சைக்கிளில் வந்தார். என் அருகில் வந்ததும் சைக்கிளை விட்டு இறங்கி, 'அவசரமாகப் பணம் தேவைப்படுகிறது. இந்தச் சைக்கிளை விலைக்கு வாங்கிக் கொள்கிறீர்களா?' என்று கேட்டார். பாலு சைக்கிள் கேட்டுக் கொண்டிருந்ததனாலே நானும் சரியென்று சொல்லி அழைத்து வந்துவிட்டேன்'' என்றார்.

''சைக்கிளின் விலை எத்தனை ரூபாய்?'' என்று கேட்டான், பாலு.

''சொன்னால் நம்ப மாட்டீர்கள். அவ்வளவு குறைவு'' என்றார் அப்பா பெருமிதத்துடன்.

''சொல்லுங்க. நாங்களும் தெரிந்து கொள்கிறோம்'' என்றாள் அம்மா.

வரும்போது ஒரு சைக்கிள் கடையில் காண்பித்து விலை போடச் சொன்னேன். ஐந்நூறு ரூபாய் கொடுக்கலாம் என்று அந்தக் கடைக்காரர் சொன்னார். அவர் சொன்னது இந்தச் சைக்கிள்காரருக்குத் தெரியாது. இப்போது நாம் கொடுக்

கப்போவது — இவர் கேட்ட முந்நூறு ரூபாய்தான்.'' என்றார் அப்பா, மகிழ்ச்சியுடன்.

''அப்படியானால் நமக்கு இருநூறு ரூபாய் இலாபம் என்று சொல்லுங்கள்' என்றாள் அம்மாவும் மகிழ்ச்சியுடன்.

பாலு குறுக்கிட்டு, ''அப்பா! அந்த ஆள் அவ்வளவு குறைந்த விலைக்கு சைக்கிளைக் கொடுக்கிறார் என்றால் அதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும்.'' என்றான்.

''பணத் தேவைதான் காரணம். அந்த ஆளுக்கு அவசரமாகப் பணம் தேவைப்படுகிறது. கையில் இருக்கும் பொருளை ஒன்றுக்குப் பாதியாகவாவது விற்றுவிட நினைக்கிறார்''என்றார் அப்பா. பணத்தை மறுபடியும் எண்ணிப் பார்த்தார். முந்நூறு ரூபாய் சரியாக இருந்தது. பணத்தை அந்த ஆளிடம் கொடுப்பதற்காகப் புறப்பட்டார்.

அப்போது—

''அப்பா! நமக்குத் தெரியாமல் சைக்கிளில் ஏதேனும் குறை இருந்தாலும் இருக்கலாம். எனக்குத் தெரிந்த ஒருவர் இருக்கிறார். அவரை அழைத்து வருகிறேன். நன்றாகப் பார்த்துக் கொண்டு பிறகு பணத்தைக் கொடுக்கலாம்'' என்றான், பாலு.

அப்பாவுக்கும் அது 'சரி' என்று தோன்றியது.

வாசலில் நின்றிருந்த ஆள், ''நான் போகணுங்க. பணத்தைக் கொடுங்க'' என்றான்.

''சைக்கிள்காரரே! இன்னும் ஐந்து நிமிஷம் பொறுத்துக் கொள்ளுங்கள். பையன் வெளியில் போயிருக்கிறான். சீக்கிரம் வந்துவிடுவான். அவன் வந்த உடனே பணத்தை வாங்கிக்கொண்டு



போய்விடலாம்'' என்று அந்த ஆளைச் சமாதானப்படுத்தினார், அப்பா.

அடுத்த ஐந்தாவது நிமிடம்—

'டர்ர்ர்...' என்ற சப்தத்துடன் மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. அதன் பின்னாலிருந்து பாலு இறங்கினான்.

மெல்ல நகரத் தொடங்கிய அந்த ஆளைப் பார்த்து, 'டேய் முத்து! எங்கே ஓடப் பார்க்கிறாய்?'' என்று அதட்டினார், மோட்டார் சைக்கிளில் வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர்.

அப்பாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. ''இன்ஸ்பெக்டர் ஸார்! இந்த ஆளை உங்களுக்கு முன்னமே தெரியுமா?''

''தெரியும். இவன் பலே சைக்கிள் திருடன். நேற்றுத்தான் சிறையிலிருந்து விடுதலையாகி வந்தான். மறுபடியும் அவன் தொழிலை ஆரம்பித்து விட்டான்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

அப்பாவுக்கு ஒரு சந்தேகம். ''பாலு! நீ யாரையோ அழைத்துக் கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றாயே!''

அவர் சந்தேகத்தை இன்ஸ்பெக்டரே தீர்த்து வைத்தார். ''மிஸ்டர் சங்கரன்! பாலு அழைத்து வரப் போவதாக உங்களிடம் சொன்னது வேறு யாரையும் அல்ல; என்னைத்தான். சைக்கிளின் விலை மிகவும் குறைவாக இருந்ததால், பாலு சந்தேகப் பட்டிருக்கிறான். என்னிடம் ஓடிவந்து சொன்னான். பாலு சொல்லிய அடையாளங்களிலிருந்து இவனாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். நான் நினைத்தது சரியாகத்தான் இருக்கிறது.''

''ஆமாம், இன்ஸ்பெக்டர் சார். பாலு சந்தேகப்பட்டதை நான்தான் புரிந்துகொள்ளவில்லை'' என்றார் அப்பா.

பாலுவின் முதுகில் தட்டிக்கொடுத்து ''நீ மிகவும் கெட்டிக்காரன். உன்னால் ஒரு திருடன் பிடிபட்டான்'' என்ற இன்ஸ்பெக்டர், அந்த ஆளைப்பார்த்து, ''டேய், நட ஸ்டேஷனுக்கு'' என்றார்.

அன்று மாலை பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு வந்த பாலுவுக்கு, வாசலில் ஒரு புதிய சைக்கிளைப் பார்த்ததும் ஆச்சரியமாக இருந்தது.

நாற்காலியில் அமர்ந்திருந்த அப்பா, ''பாலு! காலையில் என்னை ஏமாற்றப் பார்த்த திருடனைப் பிடித்துக் கொடுத்தாய் அல்லவா? அதற்குப் பரிசாக இந்தச் சைக்கிளைக் கடையிலிருந்து புதிதாக உனக்கு வாங்கி வந்திருக்கிறேன்'' என்றார்.

மகிழ்ச்சியுடன் சைக்கிளில் ஏறி, நண்பர்களிடம் காட்டுவதற்காகப் புறப்பட்டான் பாலு.


புதிர் மன்றம்

தொகுத்தவர்:- கடத்தூர் நெடுமிடல்

புதிர்–1

ஓர் அச்சகத்தில் பணியாற்றும் இரு தொழிலாளர்கள் ஒரே வீட்டில் வாழ்கிறார்கள். ஒருவர் வேகமாக நடப்பவர்; மற்றவர் மெதுவாக நடப்பவர். வேகமாக நடப்பவருக்கு அச்சகத்துக்கு நடந்து வர 20 நிமிடம் ஆகிறது. மெதுவாக நடப்பவர் இந்தத்தொலைவை 30 நிமிடங்களில் நடக்கிறார். வேகமாக நடப்பவரை விட ஐந்து நிமிடம் முன்னதாகவே மெதுவாக நடப்பவர் வீட்டை விட்டுப் புறப்படுவாராயின், வேகமாக நடப்பவர் அவரை எத்தனை நிமிடத்தில் எந்த இடத்தில் எட்டிப் பிடிப்பார்?

புதிர்–2



மேலே உள்ள புதிர் வட்டத்தில் 1 முதல் 9 வரையுள்ள எண்களை மையத்தில் ஒன்றும், விட்டங்களின் முனைகளில் மற்ற எண்களும் வரும்படி எழுத வேண்டும். ஒவ்வொரு விட்டத்திலும் மூன்று எண்களின் கூட்டுத் தொகை 15 வரவேண்டும். நீங்கள் முயன்று நிரப்புங்கள்.

புதிர்–3

புதிர் மன்ற உறுப்பினர்களுக்குப் பேராசிரியர் கணக்குநெஞ்சன் ஒரு போட்டி வைத்துள்ளார். அந்தப் போட்டியில் வெற்றி பெறுவோர்க்கு நூறு ரூபாய் பரிசு கொடுப்பதாயும் அறிவித்துள்ளார்.

''ஐம்பது காசு, இருபது காசு, ஐந்து காசு நாணயங்களைக் கொண்டு ஐந்து ரூபாய்க்குச் சில்லறை கொடுக்க வேண்டும். அதில் மொத்தம் 20 நாணயங்கள் மட்டும் இருக்க வேண்டும். அப்படிக் கொடுப்பவருக்கு நூறு ரூபாய் பரிசு வழங்குவேன்'' என்று பேராசிரியர் அறிவித்துள்ளார். அந்தப் பரிசினைப் பெற உங்களால் முடியுமா? முயலுங்கள்.

புதிர்–4

கடையில் இரண்டு பப்பாளிப் பழங்கள் இருக்கின்றன. ஒன்று மற்றொன்றை விட கால் பங்கு பெரியது. இதன் விலை ஒன்றரை மடங்கு அதிகம். இரண்டில் எதை வாங்குவது நல்லது?

புதிர்–5



மணிமாறன் புத்தகக் கடைக்குச் சென்றான். திருக்குறள், புறநானூறு, சிலப்பதிகாரம், மூன்றும் வாங்கிக் கொண்டு மொத்தம் ரூ. 20 கொடுத்தான். சிலப்பதிகாரத்தின் விலை புறநானூற்றின் விலையை விட ரூ. 9 அதிகம். புறநானூறு, சிலப்பதிகாரம் இரண்டின் மொத்த விலை, திருக்குறளின் விலையை விட ரூ. 16 அதிகம். ஒவ்வொரு நூலும் தனித் தனியே என்ன விலை?

புதிர்–6

ஒன்றரை டிகிரி உள்ள கோணத்தைக் காட்டும் பூதக் கண்ணாடி மூலம் பார்த்தால் அந்தக் கோணம் எவ்வளவு பெரிதாகத் தெரியும்?


புதிர்—7

ஓர் அலுவலகத்தில் பணியாற்றும் ஒருவருக்கு மிகை நேர (ஓவர் டைம்) சம்பள வருவாயையும் சேர்த்து சென்ற வாரம் கிடைத்த வருமானம் ரூ. 50. அவருடைய வாரச் சம்பளம் மிகை நேரச்சம்பளத்தை விட ரூ. 40 அதிகம். எனில், மிகை நேரச் சம்பளத்தைச் சேர்க்காமல் அவருடைய வருவாய் எவ்வளவு?

விடைகள்:

புதிர்—1: சரி பாதி வழியில் 10 நிமிடத்தில் எட்டிப் பிடிப்பார்.

புதிர்—2:



புதிர் 3: அப்படிச் சில்லறை கொடுக்க முடியாது.

புதிர் 4: பெரியதை வாங்குவதுதான் நல்லது. ஒன்றரை மடங்கு விலை கொடுத்தாலும், இது இரண்டு மடங்குக்கும் கூடுதலான பழ அடக்கம் கொண்டதாக இருக்கும்.

புதிர்—5: திருக்குறள் விலை ரூ. 2.00 புறநானூறு விலை: ரூ. 4—50. சிலப்பதிகாரம் விலை: ரூ. 13—50.

புதிர்—6: பூதக் கண்ணாடி கோணத்தின் அளவைப் பெருக்குவதாக நினைத்தால், அது மிகப்பெரிய தவறாகும். கோணம் அளவு மாற்றமின்றி அப்படியேதான் தெரியும்.

புதிர்—7: அடிப்படை வாரச் சம்பளம் ரூ. 45; மிகை நேரச்சம்பளம் ரூ. 5.

புது டெலிவிஷன்



எங்கள் வீட்டில் டெலிவிஷன்
இன்று வந்தாச்சு;
மங்கல நாள் போல வீடே
கோலா கலமாச்சு.

பெட்டி வந்த செய்தி உடனே
எங்கும் தெரிஞ்சாச்சு
சுட்டிகள் எல்லாம் ஓடியாடித்
துள்ளி வந்தாச்சு.

கோடி வீட்டுக் குப்பம்மா
கூடாரம் போட்டாச்சு.
மாடி வீட்டு ஏட்டு மாமா
மஃப்டியில் வந்தாச்சு.

மாமா, மாமி, சித்தியோடு
தாத்தா பாட்டியும்
தேமே என்று பாயை விரித்துக்
கீழ் அமர்ந்தாச்சு.

அப்பா வந்து டெலிவிஷனை
'ஆன்' செய்தாச்சு,
அப்போ 'வணக்கம்' என்றகுரலும்
அழகாய்க் கேட்டாச்சு.

வந்த வேகத்தோட டீ.வி.
நின்று போயாச்சு!
இந்தக் கரண்டு நின்றதாலே
ஏமாந்து போச்சு!

—நா. செந்தில் முரளி



மேலே பறக்க ஆசை

டாக்டர் பூவண்ணன்

சந்தன மரம், தேக்கு மரம் முதலிய விலை மதிப்பு மிக்க மரங்களும், மாமரம் பலாமரம் முதலிய பசிபோக்கும் பழ மரங்களும் நிறைந்தது அந்தக் காடு. அந்தக் காட்டிலே பூனை முதல் யானை வரையில், எலி முதல் புலி வரையில், சின்னக் குருவி முதல் பெரிய கழுகு வரையில் பலவகையான விலங்குகளும் பறவைகளும் இருந்தன. இவைகளுள் முத்து மிகவும் புகழ் பெற்றது.

முத்து என்பது புலியோ சிங்கமோ அல்ல; ஒரு முயல்! சின்ன முயல்! குட்டி முயல்! வெள்ளைப் பட்டுப் போலப் பளபளப்பான முயல்! இந்தக் குட்டி முயலைப் பெற்ற அம்மா அதற்கு 'முத்து' எனப் பெயரிட்டிருந்தாள்.

முத்து அந்தக் காடு முழுதும் சுற்றித் திரியும். ஓர் இடத்தில் கொஞ்ச நேரம் தங்காது. காட்டிலுள்ள விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் அது செல்லக் குழந்தை. வஞ்சக நரிகூட அதனிடம் வாஞ்சையுடன் பழகும். சுருக்கமாகச் சொன்னால், முயல் குட்டி முத்து எல்லார்க்கும் நல்லபிள்ளை; செல்லப் பிள்ளை!


முத்து அடிக்கடி அண்ணாந்து வானத்தைப் பார்க்கும். பச்சைக் கிளிகளும் கறுப்புக் குயில்களும் பழுப்புப் பருந்துகளும் வானத்தில் விர்விர்ரென்று பறந்து போவதை வியப்புடன் பார்க்கும். ஒரு மரத்திலிருந்து புறப்பட்டு மற்றொரு மரத்துக்குப் பறவைகள் எவ்வளவு எளிதாகக் காற்றிலே மிதந்து பறந்து செல்கின்றன! அவை கல்லிலே மோதிக்கொள்வதில்லை; முள் அவற்றின் கால்களைக் குத்தாது. புதர்களிடையே நுழைந்து போக வேண்டிய சிரமமும் இல்லை. ''எனக்கும் பறவையைப் போலப் பறக்க ஆசையாக இருக்கிறது! நானும் வானத்திலே பறக்க வேண்டும். வாழ்நாளில் ஒரு முறையாவது பறந்தே தீரவேண்டும்'' என்று முத்து அடிக்கடி சொல்லிக் கொண்டது.

தனக்குத் தெரிந்த பறவைகளிடம் போய், ''எனக்குப் பறக்கக் கற்றுக் கொடுங்கள்'' என்று கேட்டது முத்து. சில பறவைகள் இப்படிக் கேட்ட முத்துவைப் பார்த்துச் சிரித்து விட்டுப் போயின. சில பறவைகள், ''முத்து, பறவைகள் முயற்சி செய்யாமலே பறக்கும். நீ எவ்வளவு முயன்றாலும் பறக்க முடியாது. இந்த நிறைவேறாத ஆசையை விட்டுவிடு'' என்று புத்திமதி கூறின.

முயல் குட்டி முத்து ஏமாந்தது. என்றாலும் 'வானிலே பறக்க வேண்டும்' என்ற ஆசையை மட்டும் விட்டுவிடவில்லை; அது மெல்ல மெல்ல வளர்ந்து கொண்டே இருந்தது. '' நான் என்று

வது ஒரு நாள் வானத்திலே பறப்பேன்'' என்று அது உறுதியாக நம்பியது.

ஒரு நாள் முத்து ஓர் அணில் குட்டியுடன் ஓடிப் பிடித்து விளையாடியது. காட்டின் நடுவே ஒரு காட்டாறு. அது கோடைக் காலம். அதனால் நீர் இல்லாமல் வற்றியிருந்தது. ஆங்காங்கே சின்னக் குட்டை போலக் கொஞ்சம்



கண்ணன்: வெண்ணெயைப் பார்த்து விட்டு நம்ம பால்காரர் மயங்கி விழுந்து விட்டாரா? ஏன்?

முரளி: அவரு கொடுத்த பாலிலே எடுத்தது இந்த வெண்ணெய் என்று காட்டினேன். அதிர்ச்சியில் மயங்கி விழுந்து விட்டார்!

- லலிதா செல்லப்பா

கொஞ்சம் தண்ணீர் தேங்கியிருந்தது. முத்துவும் அணிலும் அந்தக் காட்டாற்றுப் பகுதியில் விளையாடின. அதைக் கடந்து ஆற்றுக்கு மேற்கில் உள்ள பகுதிக்கு ஓடின. அங்கே ஒளிந்தும் ஓடியும் விளையாடின.

பிற்பகல் நேரம். ஓடிக் களைத்த அணில், ''நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்று விடைபெற்றுச் சென்றது. முயல் குட்டி முத்துவும் வீட்டுக்குப் போக வேண்டும். காட்டாற்றிலிருந்து விளையாடிக் கொண்டே வெகு தூரம் வந்து விட்டதை முத்து உணர்ந்தது. 'இருட்டுவதற்கு முன் வீட்டுக்குப் போக வேண்டும்' என்று நினைத்தது. ஆனால், விளையாடிய களைப்பால் உடனே ஓட விரும்பாத முத்து, 'கொஞ்ச நேரம் ஓய்வு எடுப்போம். பிறகு வீட்டை நோக்கி ஓட்டம் பிடிப்போம்' என்று எண்ணியது. ஒரு மரத்தின் நிழலில் முத்து படுத்தது. கொஞ்ச நேரத்தில் தூங்கி விட்டது.

தூங்கிக் கொண்டிருந்த முத்து திடுக்கிட்டு எழுந்தது. 'ஏதோ சத்தம் கேட்டது போல் இருந்ததே!' என்று சுற்றுமுற்றும் பார்த்தது. எதிரே எதுவும் இல்லை. ஆனால், அது பொழுது சாயும் நேரம் என்பதைப் புரிந்து கொண்டது. ரொம்ப நேரம் தூங்கி விட்டேன். சீக்கிரம் வீட்டுக்குப் போக வேண்டும் என்று நினைத்த முத்து காட்டாற்றை நோக்கி ஓடியது.

கொஞ்ச தூரம் ஓடிய முயல் குட்டி சட்டென்று நின்றது. 'ஏதோ சத்தம் கேட்கிறதே!' என்று காதுகளை நிமிர்த்தி உற்றுக் கேட்டது. ''ஓ....ஓ....ஓ....'' என்ற ஓசை முத்துவின் காதில் மோதியது. 'அது என்ன ஓசை?' என்று யோசித்தவாறு ஓட்டத்தைத் தொடர்ந்தது, முயல் குட்டி முத்து. காட்டாற்றை நெருங்க நெருங்க ஓசை அதிகமானது.

முத்து காட்டாற்றை அடைந்ததும் திகைத்து நின்றுவிட்டது. காலையில் வறண்டிருந்த காட்டாற்றில் பெரு வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. முயல் குட்டி கேட்ட ஓசை, வெள்ளம் ஓடும் ஓசைதான்!

இந்தக் காட்டாற்று வெள்ளத்தைக் கடந்து எப்படி வீட்டுக்குப் போவது என்பது புரியாமல் முயல் குட்டி ஓவென்று அழத் தொடங்கியது. அப்போது ஒரு யானை அங்கே வந்தது. அது, ''நீ ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டது.

''யானை மாமா, என் வீடு மறுகரைப் பக்கம் இருக்கிறது. இன்று பகல் நான் இந்தப் பக்கம் வரும்போது ஆற்றிலே தண்ணீர் இல்லை. இப்போது திடீரென்று வெள்ளம் வந்து விட்டது. இத்தனைக்கும் ஒரு சொட்டு மழைகூடப் பெய்யவில்லை'' என்றது முத்து.

''இந்தக் காட்டாறு ரொம்பவும் நீளமானது. வெகு தூரத்தில் இருக்கும் மலைப் பகுதியில் மழை பெய்தால் இங்கு திடீரென்று வெள்ளம் வந்துவிடும். இப்படி நடப்பதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன்'' என்றது யானை.

''யானை மாமா, நான் எப்படியும் காட்டாற்றைக் கடந்து என் வீட்டுக்குப் போயாக வேண்டும். என்னைக் காணாமல் எங்கம்மா அழுவாங்க. எப்

படியாவது என்னை அக்கரையில் சேர்த்து விடு மாமா'' — முத்து அழுதுகொண்டே வேண்டியது.

''காட்டாற்றிலே வெள்ளம் வேகமாகப் போகுது. அது என்னையே அடித்துக்கொண்டு போய்விடக் கூடும். உன்னை எப்படி அக்கரை சேர்ப்பது?''— யானை இப்படிச் சொல்லிக் கொண்டே அண்ணாந்து பார்த்தது. அதன் கண்ணில், கரையோரத்தில் வானத்தைத் தொடுவது போல வளர்ந்திருந்த மூங்கில் தென்பட்டது. உடனே, ''முத்து, பயப்படாதே. இப்போதே உன்னை அக்கரைக்கு அனுப்புகிறேன்'' என்றது.

முத்து அழுகையை நிறுத்தியது. யானை தன்னை எப்படி மறு கரைக்கு அனுப்பப் போகிறது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே, யானை தும்பிக்கையால் உயர்ந்த மூங்கிலைப் பற்றி இழுத்து வளைத்தது. அப்படியே பின்னோக்கி நகர்ந்தது. இரண்டு பனை மரம் உயரமிருந்த மூங்கில் வான வில்போல் வளைந்து பூமியைத் தொட்டது. அதன் முனையை யானை பற்றிக் கொண்டிருந்தது.

''முத்து, ஓடிவா, இந்த மூங்கில் முனை மீது ஏறி உட்கார்.''

யானை சொன்னதும் முயல் மூங்கில் முனைக்குத் தாவியது.

''மூங்கிலைக் கெட்டியாகப் பிடித்துக் கொள். நான் மூங்கிலை விட்டதும் மூங்கில் உன்னைச் சுமந்துகொண்டு விர்ரென்று நிமிரும். அது நிமிர்ந்ததும் உன் பிடியை விடு. நிமிரும் மூங்கில் உன்னைத் தூக்கி எறியும். நீ வானத்தில் பறந்து, ஆற்றைக் கடந்து மறுபுறம் போய்த் தொப்பென்று விழு-வாய்''

யானை சொன்னதைக் கேட்டதும் முயலுக்கு ஒரே சந்தோஷம். ''நான் வானத்தில் பறக்கப் போகிறேனு, யானை மாமா! நான் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டேன். மூங்கிலை விடுங்கள்.''

யானை மூங்கிலை விட்டது. மூங்கில் விர்ரென்று நிமிர்ந்தது. அது நிமிரும் போதே முயல் தன் பிடியை விட்டது. உடனே கவணிலிருந்து எறியப்படும் கல்லைப் போல முயல் வானத்திலே பறந்தது!

''நான் பறக்கிறேன்! கிளியைப் போலப் பறக்கிறேன்! குயிலைப் போலப் பறக்கிறேன்! காக்கையைப் போலப் பறக்கிறேன்! கழுகைப் போலப் பறக்கிறேன்! மண்ணும் மரமும் ஆறும் எனக்குக் கீழே இருக்கின்றன! நான் பறக்கிறேன்!''

முயல் குட்டி முத்து சந்தோஷத்தோடு கத்தியபடி, காட்டாற்றைக் கடந்து, வானத்திலிருந்து தாழ்ந்து மறு கரையில் மணல் மீது தொப்பென்று விழுந்தது.

விழுந்து எழுந்த முத்து, ''யானை மாமா! உனக்கு ஆயிரம் கோடி நன்றி. பறவையைப் போலக் கொஞ்ச நேரமாவது பறக்க வேண்டும் என்னும் என் ஆசையை நிறைவேற்றிவிட்டீர்கள். நன்றி! நன்றி! நன்றி!'' என்று கூவிவிட்டு, தன் வீட்டை நோக்கி ஓடியது.

யாருக்கு யார் சொன்னது?

''உள்ளங்கை நெல்லிக் கனிபோல'' ''காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்த கதையாக'' என்ற உபமானங்களைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? எத்தனை ஆண்டுகளாக இது பழக்கத்தில் இருந்து வருகிறது என்று சிந்தித்ததுண்டா?

இந்த உபமானங்களை வசிஷ்டர், ராமருக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்பொழுது உபயோகித்ததாக வால்மீகி எழுதியிருக்கிறார்.

—ஜயா வெங்கட்ராமன்



முதல் மாணவன்

திருமதி. விஸ்வநாதன்

கோடைக் காலத்து வெய்யில் மண்டையைப் பிளக்கக் காய்ந்து கொண்டிருந்தது. தெருவின் ஓரமாக இருந்த வேப்ப மரத்தின் அடியில் சோமு விக்கி விக்கி அழுதபடி உட்கார்ந்திருந்தான்.

அவனை வீட்டில் தேடிப் பார்த்து விட்டு, அங்கே வந்த கீதாவும், சேகரும் அவன் அழுவதைக் கண்டு திகைத்தனர்.

''என்ன சோமு? ஏன் இப்படி அழுகிறாய்? உன் வீட்டுக்குப் போனோம். உன் அம்மா நீ விளையாடப் போய் விட்டாய் என்று சொன்னார்கள். ஆனால், நீ என்ன இப்படி அழுது கொண்டிருக்கிறாய்?''

சற்று நேரம் பதில் சொல்லாமல் விக்கி விக்கி அழுதான் சோமு. பிறகு, ''என் அப்பா ஒன்பதாம் வகுப்பு வரை படித்தது போதும், எங்காவது கடையில் சேர்த்து விடுகிறேன். வேலைக்குப் போ என்கிறார்'' என்றான்.

''ஏன் படிக்க வேண்டாம் என்கிறார்? அதுவும் உன்னைப் போய்! நீதானே வகுப்பில் முதல் மாணவன்!'' என்று கேட்டாள் கீதா.

''என்ன செய்வது? நான் ஏழையாயிற்றே! என் அப்பா ஒரு சாதாரணத் தொழிலாளி. அவருடைய வருமானமோ குடும்பம் நடத்தவே போதவில்லை. அரை வயிறு, கால் வயிறு சாப்பாடுதான். என் தம்பிகளும், தங்கையும் படிக்கிறார்கள். இந்த வருடம் எனக்குப் புத்தகமும் சீருடையும் வாங்க வேண்டுமானால் அதிகம் செலவாகும். அதை வாங்கித் தர அவரிடம் பணம் இல்லை. நான் படிக்க வேண்டும் என்று அவருக்கும் ஆசைதான். ஆனால், என்ன செய்வது, பணமில்லையே! அதனால் படிப்பை நிறுத்தி விட்டு வேலை செய்யச் சொல்கிறார். வீட்டுக்குக் கொஞ்சம் வருமானமும் கிடைக்கும் என்று நினைக்கிறார்.''

''அடப் பாவமே... நீ என்ன செய்யப் போகிறாய்?'' — சேகர் கேட்டான்.

''என்ன செய்வது? சீருடையும் புத்தகமும் இல்லாமல் எப்படி வகுப்புக்கு வருவது? நீங்கள் எல்லோரும் பள்ளிக்கூடம் சென்று நன்றாகப் படியுங்கள். எனக்குக் கடவுள் கொடுத்தது அவ்வளவுதான்'' என்று விரக்தியாகச் சொன்னான், சோமு. சேகரும் கீதாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''அழாதே, சோமு, நிச்சயம் நீயும் படிக்க வருவாய். அதற்கு எங்களால் ஆன முயற்சியைச் செய்கிறோம்'' என்று ஆறுதல் சொல்லிவிட்டு இருவரும் திரும்பிச் சென்றார்கள்.

''சேகர், என்ன செய்யலாம்?'' என்று கேட்டாள் கீதா.

''எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. எதற்கும் நம் டீச்சர் வீட்டுக்குப் போய் அவரிடம் பேசிப் பார்க்கலாம்'' என்றான் சேகர்.

அவர்கள் இருவரும் கமலா டீச்சரிடம் இந்த விஷயத்தைச் சொன்னதும், ''அடடா, நன்றாகப் படிக்கும் மாணவனாயிற்றே! சில வருஷங்கள் சிரமப்பட்டுப் படித்துவிட்டால் எதிர்காலம் நன்றாக இருக்கும். இல்லையானால், அவனுடைய அறிவு வெறும் பொட்டலம் கட்டும் வேலையில் வீணாகிப் போகுமே'..'' என்று அனுதாபப் பட்டார்.

''ஆமாம் டீச்சர். அதற்குத்தான் ஒரு யோசனை... நானும் கீதாவும் என் வகுப்பு மாணவர்களும் சேர்ந்து நிதி திரட்டப் போகிறோம். அவரவர்களுக்கு விருப்பமான தொகையைக் கொடுக்கலாம்.''

''ஓ...செய்யுங்களேன். என்னால் ஆன உதவியை நானும் செய்கிறேன்'' என்றார் கமலா டீச்சர்.

ஆனாலும் 'இந்தச் சிறுவர்களால் என்ன சாதிக்க முடியும்? எதற்கும் முயற்சி செய்து பார்க்கட்டுமே! வெற்றி கிடைத்தால் ஒரு நல்ல மாணவனால் தொடர்ந்து படிக்க முடியும்'' என்று நினைத்தார்.

கோடை விடுமுறை முடிந்து பாஸ் செய்த ஒன்பதாம் வகுப்பு மாண

வர்கள் மகிழ்ச்சியும் பேச்சுமாய்ப் பத்தாம் வகுப்பில் கூடினார்கள். சோமு மட்டும் அவர்களுடன் இல்லை.

கீதாவும் சேகரும், டீச்சர் 'அட்டென்டென்ஸ்' எடுத்து முடிக்கும் வரை காத்திருந்தார்கள்.

பிறகு வகுப்பின் நடுவில் நின்று கீதா பேசினாள்.

''அன்புள்ள சகோதர சகோதரிகளே,

மிகவும் மகிழ்ச்சியாக எல்லோரும் கூடியிருக்கும் இந்த நேரத்தில், உங்களிடம் ஒரு வேண்டுகோள். நாம் எல்லோரும் புது வகுப்புக்கு வந்திருக்கிறோம். ஆனால், முதல் மாணவனைத் தேறிய சோமு நம்மோடு சேர்ந்து படிக்க வரவில்லை. ஏன் தெரியுமா? வசதி யில்லை. சீருடையும் புத்தகங்களும் வாங்கப் பணமில்லை. நாமெல்லோரும் படித்து முன்னேறி நல்ல ஒளிமயமான எதிர்காலத்தை அடையும்போது, சோமுவின் எதிர்காலம் இருண்டு போகக் கூடாது.

''எனவே, நண்பர்களே, நானும் சேகரும் உங்கள் உதவியுடன் நிதி திரட்டி அவனுக்கு உதவி செய்யலாம் என நினைக்கிறோம். நீங்கள் எல்லோரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாய் ஒரு விஷயம். இதில் யாரையும் நாங்கள் கட்டாயப் படுத்தவில்லை. விருப்பம் உள்ளவர்கள் உதவி செய்யலாம்'' அவள் பேசி முடித்தாள்.

உண்டியலைக் குலுக்கிக் கொண்டு சேகர் ஒவ்வொரு மாணவனிடமும் போய் நின்றான்.

டீச்சர் தன் பங்காக இரண்டு ரூபாயை உண்டியலில் போட்டார். சில மாணவர்கள் கையில் இருந்த சில்லறையைப் போட்டார்கள். சிலர் மௌனமாய் இருந்தார்கள். சிலர், 'நாளைக்கு அம்மாவிடம் கேட்டு வாங்கி வருகிறோம்' என்றார்கள்.

கோபுவிடம் வந்து உண்டியலைக் குலுக்கியபோது, ''உனக்கேனடா இந்தப் பிச்சைக்கார வேலையெல்லாம்? சோமுவால் முடிந்தால் படிக்கிறான், முடியா விட்டால் மாடு மேய்ச்சுட்டுப் போகிறான். இதுக்கு என்கிட்ட வந்து பிச்சை கேட்கிறாயே!''என்றான், அலட்சியமாக, சூயிங்கத்தை மென்றபடி.

கோபு, தானும் படிக்க மாட்டான்: அடுத்தவர்களையும் படிக்க விடாமல் தொந்தரவு செய்வான். எப்படியோ இந்த முறை பாஸாகி விட்டதால், திமிர் தலைக்கேற இப்படி அலட்சியமாகப் பேசுகிறான்.

''கோபு, உனக்கு உதவணும்னு மனமிருந்தால் செய். இல்லையென்றால் சும்மா இரு. நாங்கள் பிச்சை எடுப்பதில் உனக்கென்ன சிரமம்?'' என்றான் சேகர் கோபமாக.

இதை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த டீச்சர் மெல்லச் சிரித்தார்.

''சில நல்ல காரியங்களைச் செய்யும்போது இது போன்ற சிலரையும் சமாளிக்கணும். மனம் தளராமல் முயற்சி செய்யுங்கள்'' என்று உற்சாகப் படுத்தினார்.

அன்று முதல் மூன்று நாட்கள் சேகரும், கீதாவும் ஒவ்வொரு வகுப்பாய்ப் போய் நிதி திரட்டினார்கள். தெரிந்தவர்கள், நண்பர்கள் என்று எல்லோரிடமும் உண்டியல் குலுக்கினார்கள்.



ஓரளவு உண்டியல் நிரம்பியதும் கமலா டீச்சரிடம் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

டீச்சர் உண்டியலை உடைத்தும் எண்ணியதில் 215 ரூபாயும் சில்லறையும் இருந்தது.

டீச்சர், சேகர், கீதா மூவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி

அன்று மாலை சேகரும் கீதாவும் சோமுவின் வீட்டுக்குப் போனார்கள்.

''சோமு, நாளைக்குக் காலையில் நீ பள்ளிக்கூடம் வருகிறாய். அங்கே உனக்கு ஒரு அதிசயம் காத்திருக்கிறது'' என்றாள் கீதா.

''என்ன அதிசயம்?'' என்று கேட்டான் சோமு.

''உஷ்... அதை இப்போது சொல்ல மாட்டோம். நாளைக்கு நீயே வந்து பார்த்துக் கொள்ளேன்.''

மறு நாள்.

பிரார்த்தனைக் கூட்டத்தில் கடவுள் வாழ்த்து முடிந்ததும் தலைமை ஆசிரியர் சோமுவை அழைத்தார்.

நடுங்கிய வண்ணம் மேடையில் ஏறி நின்றான் சோமு. அவன் கையில் ஒரு கவரைக் கொடுத்தார் தலைமை ஆசிரியர். அதைப் பிரித்துப் பார்த்ததும் திகைத்துப் போனான். 'ரூபாய் நோட்டுக்கள்!'

''உனக்குத்தான் சோமு. நீ படிக்க வேண்டும் என்பதற்காக இதோ இங்கே நிற்கும் உன் பள்ளிக்கூடத் தோழர்கள் வழங்கிய நிதி இது. சேகரும், கீதாவும் சேர்ந்து இந்த நிதியைத் திரட்டினார்கள். இந்தப் பணத்தை உன் அப்பாவிடம் கொடுத்துப் புத்தகங்களும், சீருடையும் வாங்கிக் கொள் சோமு.''

''ஐயா, இந்தப் பணத்தை நான் வாங்குவது தருமா? எனக்கு ஏனோ தயக்கமாக இருக்கிறது'' என்றான் சோமு.

''தயங்குவதற்கு இதில் ஒன்றும் இல்லை சோமு. திருடுவதும் ஏமாற்றுவதும்தான் தவறு. இப்படியொரு நல்ல காரியத்துக்காக நிதி திரட்டுவது தவறில்லை. நீ படித்ததில்லையா, 'கற்கை நன்றே கற்கை நன்றே; பிச்சை புகினும் கற்கை நன்றே' என்று? தயங்காமல் இதை நீ ஏற்றுக்கொள். தொடர்ந்து படித்து முன்னுக்கு வா'' பிறகு,மாணவர்களைப் பார்த்து, ''அன்புள்ள மாணவ மாணவிகளே, இப்படியொரு நல்ல உதவியைச் செய்த கீதாவுக்கும் சேகருக்கும் நம் பள்ளியின் சார்பாக இந்தப் பேனாவைப் பரிசளிக்கிறேன். நீங்கள் எல்லோரும் இது போல உதவும் மனப்பான்மையுடன் நல்ல காரியங்களைச் செய்து, படித்து முன்னேற வாழ்த்துகிறேன். நன்றி!'' என்று பேசி முடித்தார்.

மாணவர்களின் கரகோஷம் வானைப் பிளந்தது. மாணவர்கள் பிரிந்து வகுப்பறைக்குச் சென்றார்கள். கீதாவும், சேகரும் சோமு நின்ற இடத்திற்கு வந்தனர். சோமு நன்றியுடன் அவர்களின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''ரொம்ப நன்றி சேகர், ரொம்ப நன்றி கீதா. எனக்காக எவ்வளவு சிரமம் உங்களுக்கு.''

''சிரமம் ஒன்றுமில்லை. நீ படிக்க வந்தாயே, அது எவ்வளவு பெரிய சந்தோஷம்'' என்றாள் கீதா.

''அதுமட்டுமல்ல சோமு, உனக்கு ஒரு வேலையும் வாங்கி வைத்திருக்கிறோம்'' என்றான் சேகர்.

''என்ன!''

''ஆமாம், மூன்றாவது தெருவில் இருக்கிறாரே டாக்டர் வேதநாயகம், அவர்தான் உனக்கு வேலை தருகிறார். காலையில் அவருடைய காரைத் துடைத்துச் சுத்தம் செய்யணுமாம். ஏதோ எடுபிடி வேலை, கடைக்குப் போவது போன்ற வேலைகள் செய்யணுமாம். பிறகு நீ பள்ளிக்கூடம் வரலாம். மாலையில் பள்ளிக்கூடம் முடிந்ததும்....''

கீதா தொடர்ந்தாள்:


''அவருடைய கிளினிக்கில் அட்டெண்டராக இரவு 8 மணி வரை வேலை. பிறகு நீ வீட்டுக்குப் போய்ப் படிக்கலாம். இதற்காக அவர் உனக்கு மாதம் அறுபது ரூபாய் சம்பளம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். நீ தொடர்ந்து நன்றாகப் படிக்க வேண்டும்.உன் குடும்பத்துக்கும் உதவியாக இருக்க வேண்டும் என்றே அவர் இந்த வேலையை உனக்குக் கொடுக்க ஒத்துக் கொண்டார்.''

''அடடே! அப்படியா! எனக்காக எவ்வளவு சிரமப் பட்டிருக்கிறீர்கள்! டாக்டரிடம் வேலை செய்துகொண்டே படிப்பது எனக்கும் நல்லது; என் அப்பாவிற்கும் நல்லது.'' என்று நன்றிப் பெருக்குடன் கூறினான் சோமு

''வாருங்கள். மூன்றாவது மணி அடித்து விட்டது. வகுப்பிற்குப் போகலாம்'' என்றான் சேகர்.

கனவில் வந்த பூனைக்குட்டி!

மகிமைநாதன்



மணி மிகவும் கோபமாக இருந்தான். ஏனென்றால் அவன் குடிக்க வேண்டிய பாலை குட்டிப் பூனை குடித்து விட்டது.

மணி முகத்தில் நடனமாடும் ஆத்திரத்தையும் கோபத்தையும் கண்டால் ஒருவேளை குட்டிப் பூனை அவன் கையில் கிடைத்து இருந்தால், அந்த வினாடியே அதுக்கு மேல் லோகப் பதவி நிச்சயம் கிடைத்திருக்கும்.

இந்த வேளையில் சமயம் தெரியாமல் அவனது தங்கை கலா வந்து, ''உன் பாலை பூனைக்குட்டி குடித்துவிட்டது என்று வருத்தமாய் இருக்கிறாய், அண்ணா? ஆனது ஆச்சு, நாளை இரண்டு டம்ளராகக் குடித்துவிடு அண்ணா!'' எனக் கூறினாள்.

தனது தங்கை இப்படிக் கூறியதும் மணிக்கு இன்னும் அதிகக் கோபம் உண்டாகி விட்டது. உடனே அவன், ''ஏய், உன்னை யார் கேட்டது? கலாவாம் கலா... கலா.... கலா... டலா... உலா... உன் வாயை மூடிக் கொண்டு இரு. நாளைக்கு இரண்டு கிளாஸ் என்ன, நான்கு கிளாஸ் பாலைக் குடிப்பேன். அதைச் சொல்ல நீ யாருடி!'' என்று பூனைக் குட்டியின் மேல் இருந்த கோபத்தைத் தங்கையின் மேல் காட்டினான்.

இதைக் கேட்டதும் கலாவுக்கு மிகவும் கோபம் வந்து விட்டது. ''ஆமாம், அப்பா அம்மா வைச்ச பேரையா கேலி செய்கிறாய்? உன் பாலைத் தினமும் குட்டிப் பூனை குடிக்கணும். அப்போதுதான் உனக்குப் புத்தி வரும்'' என்று கூறிவிட்டு, மணி தன்னை அடிக்க வருவான் என்று பயந்து அங்கிருந்து ஓடிவிட்டாள்.

இந்தச் சமயம் பார்த்தா 'மியாவ்... மியாவ்....' என்று பூனைக் குட்டி கத்திக் கொண்டு வரவேண்டும்? அய்யோ, பாவம்! உடனே மணி பாய்ந்தோடி அதைப் பிடித்து அடி அடியெனக் கையால் அடித்தான். சிறிது நேரத்தில் அது சுருண்டு விழுந்தது. எழுந்திருக்கவில்லை.

''நல்ல வேளை. செத்துத் தொலைந்தது'' எனக் கூறிக்கொண்டே பூனைக் குட்டியை எடுத்துக் கொண்டு போய்த் தெருக் கோடியில் இருந்த குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு வீடு திரும்பினான். இந்த விஷயம் யாருக்கும் தெரியாது என நினைத்தான்.

அன்று இரவில் அவனால் சரியாகவே தூங்க முடியவில்லை. கண்ணை மூடினால் போதும். கனவில் பூனைக் குட்டி வந்து நிற்கும். ''மியாவ்... மியாவ்...'' எனக் கதறும். தன்னை அது கடித்து விடுமோ என்று பயந்தான், மணி. நடுநடுங்கிய வண்ணம், ''ஐயோ! ஐயோ! குட்டிப் பூனை என்னைக் கடிக்க வருகிறதே!'' எனப் பயங்கரமாகக் கத்தத் தொடங்கினான்.

இந்தப் பயங்கரமான சத்தத்தைக் கேட்டு மணியின் தந்தை விழித்துக் கொண்டார். ஆனால், அவர் அவன் அருகில் வரவில்லை. என்ன நடக்கிறது என்று பார்த்துக்கொண்டே படுத்

திருந்தார். மூன்று தடவை மணி இப்படிப் பயந்து கதறிவிட்டான். மூன்றும் முறை கத்தியதும், அவன் அப்பா எழுந்து அருகிலே வந்தார்.

''மணி! உன் பாலைக் குட்டிப் பூனை குடித்து விட்டது என்று கோபம் கொண்டு நீ அதைத் துன்புறுத்தினாய். ஆனால் நடந்தது என்ன தெரியுமா? உனக்காக வைத்திருந்த பாலில் ஈ ஒன்று விழுந்து விட்டது. அதனால் தான் நான் அந்தப் பாலைக் குட்டிப் பூனைக்குக் கொடுத்தேன். இதை நீ தவறாகப் புரிந்து கொண்டு கோபத்தில் காரியம் செய்து விட்டாய். ஆனால் இன்றைக்கு இல்லாவிட்டால் நாளைக்கு நீ பாலைக் குடிக்கலாம். ஆனால், இன்று போன பூனைக் குட்டியின் உயிரை, நீ நாளைக்குக் கொடுக்க முடியுமா?'' என்று கேட்டார்.

''அப்படியா அப்பா! ஐயோ, நான் பூனையை அநியாயமாய் அடித்துக் கொன்று விட்டேனே!'' என்று அழுதான். ''அழாதே!'' என்று அவர் கூறிக் கொண்டிருக்கும்போதே, 'மியாவ் மியாவ்' என்ற குரல் கேட்டது. சத்தம் வந்த திசையைப் பார்த்தான். மணியின் அப்பா உடனே விளக்கைப் போட்டார். அதே பூனைக் குட்டி அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தது.

''இது கனவா, நனவா!'' என்று கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தான் மணி. அப்பா சிரித்தார்.

''மணி, நீ இதைத் தூக்கிக்கொண்டு தெருக் கோடிக்கு வந்தாயே, அப்போது தெரு முனையில் திரும்பிய நான் தற்செயலாகப் பார்த்தேன். உடனே, அங்கிருந்த உன் நண்பன் கோபு வீட்டிற்குள் சென்று ஜன்னல் வழியாக நீ என்ன செய்கிறாய் என்று கவனித்தேன். குப்பைத் தொட்டிக்குள் இதை எறிந்து விட்டு, சுற்று முற்றும் பார்த்தபடி திரும்பிச் சென்று விட்டாய். சிறிது நேரத்தில் நான் சென்று, குப்பைத் தொட்டியில் கிடந்த இதைத் தூக்கிச் சென்று கோபு வீட்டில் சிறிது நேரம் வைத்திருந்தேன். இதன் வாயில் தண்ணீர் ஊற்றினேன். உடம்பைத் தடவிக் கொடுத்தேன். இது பிழைத்துக் கொண்டது. பிறகு பால் கொடுத்தோம். 'இன்று இது இங்கேயே இருக்கட்டும்' என்று கோபு வீட்டிலேயே விட்டு வந்தேன். இது எப்படியோ இங்கு இந்த நேரத்தில் வந்து விட்டது'' என்றார்.

தந்தை இப்படிக் கூறியதும், ''அப்பா! நல்ல வேளை. பூனை பிழைத்துக் கொண்டது. இல்லாதபோனால், எனக்குத் தூக்கமே வராது! நிம்மதி இருக்காது. என்னுடைய தப்பிதத்தால் ஒரு உயிர் அநியாயமாகப் போக இருந்தது. இனிமேல் இப்படி எந்தவிதமான தப்பிதமும் செய்யவே மாட்டேன்!'' என்று கூறி, மணி தேம்பித் தேம்பி அழுதுகொண்டே, பூனைக் குட்டியின் அருகிலே ஓடினான். அதைக் கட்டிப் பிடித்துத் தூக்கினான். முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சினான். நேரிலே குட்டிப் பூனை வந்துவிட்டதால், இனிக் கனவிலே வராது என்ற நிம்மதியுடன் அவன் தூங்கினான்.

சிறுவர் பூங்கா

குன்றக்குடி ஒரு சிறு கிராமம். ஆயினும் அங்குள்ள முருகன் கோயில் மிகவும் புகழ் பெற்றது. அந்தச் சிறு ஊரை, ஒரு தொழில் நகரமாக ஆக்கி வருகிறார், தவத்திரு குன்றக்குடி அடிகளார். குழந்தைகளுக்காகப் பள்ளிக்கூடங்கள் நடத்துவதுடன், சிறுவர் பூங்கா ஒன்றையும் அமைத்து, குழந்தைகள் அங்கு ஓடி ஆடி விளையாடவும், புத்தகங்கள் படிக்கவும் வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார். சிறுவர் பூங்காவிற்கு ஒரு புதுக் கட்டிடம் கட்டப் போகிறார்கள். அதன் அடிக்கல் நாட்டு விழா மார்ச் மாதம் நடைபெற்றது. தமிழக அரசு இக்கட்டிடத்திற்காக ரூபாய் முப்பதாயிரம் மானியமாகக் கொடுத்திருக்கிறது:

இச்சிறுவர் பூங்கா போல ஒவ்வொரு ஊரிலும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

படம்: சுப செல்வராசன்



சிந்தி... உழை.. உயர்வாய்!

கோமதி



சிந்தனை செய்தே செயலாற்று — நல்ல
சிறப்பைப் பெறலாம் வரலாற்றில்!
வந்தனை செய்தே உனைப்போற்றும் — இந்த
வையகம் எல்லாம் பொறுப்பேற்று!

எழுத்தை எழுதிட மைஉதவும் — ஆனால்
எடுத்தே அதையும் கொட்டிவிடின்,
எழுத்தா தெரியும்! இல்லையில்லை — அந்த
இடமே அசுத்த மாகிவிடும்!

கல்லும் சிமெண்டும் குவித்துவிட்டால் — ஒரு
கட்டட மாகிச் சிறந்திடுமா?
அல்லும் பகலும் பாடுபட்டே — அதை
அமைத்திடச் சிந்தனை வேண்டுமன்றோ?

வண்ணக் குழம்பை அப்படியே — நாம்
வைத்துப் பார்த்தால் குழம்பேதான்!
எண்ணங் களையே சித்திரமாய் — நன்கு
எழுதிக் காட்டிடில் அற்புதமாம்!

வெற்றுத் தோலில் ஒலியில்லை — அதை
வேண்டிய முறையில் கட்டிவிட்டால்
மற்றோர் மெச்சிடும் மிருதங்கம் — என்ற
மதிப்புப் பெறுவதை அறிவாயே!

உழைப்பால் உலகில் உயர்ந்திடலாம் — எனும்
உண்மை நிலையை அறிந்திடுவாய்!
களைப்பைக் காலால் மிதித்திடுவாய் — எதிர்
காலத்தைப் பொன்னாய் மதித்துயர்வாய்!




நாணை ஒலி எழுப்பி முருகனை அச்சுறுத்த நினைத்தான் தாரகன்.
நாணை அறுத்தார் முருகன். தாரகன் திகைத்தான்.




சுரசை வளர்ந்தாள். அசுரர்குரு சுக்கிராச்சாரியாரிடம் கல்வி கற்றாள்.
குழந்தாய் இனி நீ மாயையில் வசிப்பவள். மாயை என்பதே உன் பெயராகும். தேவர்கள் அழிய அசுரர்களை நீ வாழவைக்க வேண்டும்.
குரு தேவா! நான் என்ன செய்ய வேண்டும்?
மாயா! காசிப முனிவர் கடுந் தவம் செய்கிறார். அவரை மயக்கி மணம் செய்து கொள். அசுரர்கள் பிறப்பார்கள். அசுர இனம் தழைக்கும். ம்.. செல்!
ஆகட்டும் குருதேவா.
காசிபர் தவம் செய்த வறண்ட பிரதேசத்துக்கு சுரசை வருகிறாள்.
சூழ்நிலையே சரியில்லை... முனிவருக்கு இந்தச் சூழலில் காதல் பிறக்காது. இதனையே நான் மாற்றுவேன்.
மாயையால் சூழல் மாற முனிவர் தவம் கலைகிறது.......
ஆ! எத்தனை மாற்றம்! இளமை என்னைத் தொடர்கிறதோ! ஆ! எத்தனை அழகான பெண்!
சுரசை பயந்து ஓடுவது போல் நடக்க....
பெண்ணே ஏன் ஓடுகிறாய்?
உங்கள் தவம் என்னைக் கெட்டு விட்டதே! முனிவரே மறுபடியும் தவம் செய்யுங்கள்.
தவமா! இனிமேலா! என் தவத்தின் பயனே நீ தான்!


தான் மறைந்தால் முனிவருக்கு மோகம் அதிகமாகும் என்று உணர்ந்து மாயை மறைந்தாள்.
கிளியே! குயிலே! அழகான இளம் பெண்ணைப் பார்த்தீர்களா?
மீண்டும் மாயை புகுந்து...
பெண்ணே! என்னைத் தவிக்க விட்டு விட்டு எங்கு மறைந்தாய்?
பாவம் தீர கங்கையில் நீராடப் போகிறேன்!
என் தவத்தால் கங்கையை வர வழைக்கட்டுமா? என்னைப் பிரிந்து போகாதே! என்னை மணந்து கொள்! யார் நீ! பேசமாட்டாயா? சரி!சரி! மணம் முடிந்த பிறகு யார் என்று மெதுவாகத் தெரிந்து கொள்வேன்.
திருமணமா? முனிவரே! ஒரு நிபந்தனை. நான் எடுக்கும் எல்லா வடிவங்களையும் நீங்களும் எடுக்க வேண்டும். ஒவ்வொரு வடிவத்திலும் நீங்கள் என்னை மணக்க வேண்டும்.
ஆஹா! இதென்ன பிரமாதம்!

அசுரவடிவம், சிங்கம், யானை, ஆடு என்று ஒவ்வொரு யாமத்தில் ஒவ்வொரு வடிவமாக எடுத்து மணந்தனர். அதனால் அசுர இனம் தழைத்தது.





முனிவர் திகைத்தார்.
மாயை பேசத் தொடங்கினள்.

நாடோடிப் பாடல்கள்



கண்ணாம்பூச்சி விளையாட்டு

கட்டிலும் கட்டிலும் சேர்ந்ததோ?
சேர்ந்தது.
காயாம் பூவும் பூத்ததோ?
பூத்தது.
வெட்டின கட்டையும் தளிர்த்ததோ?
தளிர்த்தது.
வேரில்லாக் கத்தரி காய்த்ததோ?
காய்த்தது.
கண்ணை இறுக்கிக்கோ.
இறுக்கினேன்.
ரோஜாப் பூவே, ரோஜாப் பூவே,
மெல்ல வந்து கிள்ளிப் போ!

கொசுவுக்கு எச்சரிக்கை!

கள்ளப் பயல் கொசுவே,
காதில் வந்து கசகச என்னாதே!
என்னைக் கடித்தால் கொசுவே, உன்
பல்லைப் பிடுங்கி டுவேன்!

கொட்டடி, கொட்டடி

கொட்டடி கொட்டடி
சின்னப் பொண்ணே,
கோலவளைக் கையாலே!
சேர்த்துக் கொட்டடி
சின்னப் பொண்ணே,
சிகப்புவளைக் கையாலே!
பார்த்துக் கொட்டடி
சின்னப் பொண்ணே,
பச்சைவளைக் கையாலே!
நீயே கொட்டடி
சின்னப் பொண்ணே,
நீலவளைக் கையாலே!
தானே கொட்டடி
சின்னப் பொண்ணே,
தங்கவளைக் கையாலே!

ஆனைக்காரன் பெண்டாட்டி

ஆனைக்காரன் பெண்டாட்டி
ஆட்டுக் குட்டியைப் பெத்தாளாம்.
காச்சு மூச்சுன்னு கத்திச்சாம்.
பாலை வாரி எறிஞ்சாளாம்.







பாவக்காய்ப் பாட்டு

ஒரு கொடியைத் தூக்கத் தூக்க
ஓராயிரம் பாவக்காய்.
ஆரு போட்ட பாவக்காய்?
அண்ணி போட்ட பாவக்காய்.

ஆரு சமைக்கிற பாவக்காய்
அண்ணி சமைக்கிற பாவக்காய்.
கசக்குமோ புளிக்குமோ?
கலந்து கொட்டடி சர்க்கரையை!

பூவே பூ

பூவே பூ
புளியம் பூ
பொன்னிறக் கொண்டைக்குத்
தாளம்பூ!

வெள்ளரிக்காய்ப் பாட்டு

ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்டானும் வெள்ளரிக்
காய்-அதைக்
காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லி
காயிதம்போட்டானும் வெள்ளைக்காரன்

அத்திப் பட்டை

அத்திப் பட்டை
அரசம் பட்டை
நான் போறேன்
ஜோலார்ப் பேட்டை!

காயோ கடப்பங்காய்

காயோ கடப்பங்காய்
காஞ்சிபுரத்து நெல்லிக்காய்
உப்போ புளியங்காய்
ஊறுகாய் போட்ட நெல்லிக்காய்.



அம்மாவா? அத்தையா?



கௌசக் ரங்கநாதன்

ரமாவுக்குப் பத்து வயது. அப்பா அம்மா பேரில் அவளுக்கு அளவற்ற ஆத்திரம். வெறுப்புக்கூட. காரணம் என்ன?

அப்பா ரொம்பக் கண்டிப்புப் பேர் வழி. அப்பாவை எதிர்த்து அம்மா ஒரு வார்த்தை பேசமாட்டார். ரமா ஆறும் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். காலையில் ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்துவிட வேண்டும். உடனே பல் தேய்த்து முகம் கழுவிக் கொண்டு பாடங்களை உருப்போட வேண்டும். படிப்பு விஷயத்தில் அப்பா ரொம்ப கறார். லீவு நாட்களில்கூட காலையில் சீக்கிரமே எழுந்து விட வேண்டும். அம்மா பால் தருவாள்.

ரமாவுக்குப் பால் பிடிக்காது. நல்ல ஸ்ட்ராங் காப்பி வேண்டும் என்று அப்பா இல்லாதபோது அடம் பிடிப்பாள். அப்பாவைப் பார்த்தால் அடங்கிப்போய் விடுவாள்.

காலை எட்டு மணிக் கெல்லாம் குளித்து நன்றாக உடை உடுத்திக் கொண்டு அப்பாவுடன் சாப்பிட உட்கார வேண்டும். ''காய் கறிகள், ரசம், சாம்பார் எல்லாம் வேண்டாம், பிடிக்கவில்லை. **வெறும்** தயிர் மட்டும் போதும்'' என்பாள்.

''சின்ன வயசில் சத்துள்ள உணவாய்ச் சாப்பிட வேண்டும். நிறையக் கீரைவகைகள், காரட், முள்ளங்கி, பீட்ரூட் வகைகள் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டும்'', என்று அப்பா சொல்லுவார். அப்பா வீட்டில் இருக்கும் நாட்களில் அவருக்குப் பயந்து கொஞ்சம் கொஞ்சம் கீரைகள், காய் கறிகள் எல்லாம் சேர்த்துக்கொள்வாள். இல்லாவிட்டால் அடம்தான்! அப்பாவையும் எதிர்த்து அம்மா ஒரு வார்த்தை பேசமாட்டாள். ரமாவிடமும் செல்லம் அதிகம்.

ரமா வீட்டில் டி. வி. வாங்கினார்கள். சனிக்கிழமை சினிமாகூட ரமா முன் கூட்டியே அன்றைய பாடங்களைப் படித்திருந்தால்தான் போடுவார்கள். இல்லாவிட்டால் போட மாட்டார்கள். தினசரி ஸ்கூலிலிருந்து ரமா மாலையில் வர ஐந்து, ஐந்தரை ஆகிவிடும்.

கொஞ்ச நேரம்தான் விளையாட அனுமதிப்பார்கள். ஏழு மணிக்கெல்லாம் கண்டிப்பாய்ப் படிக்க உட்கார்ந்து விட வேண்டும். எட்டு மணி வரை அன்றைய பாடங்களைப் படிக்க வேண்டும். பிறகு அப்பா, அம்மாவுடன் சாப்பாடு. சாப்பிட்டுக் கொண்டே அன்றைய பாடங்களைப் பற்றிக் கேள்வி கேட்பார் அப்பா. பதில் சொல்லத் தெரியா விட்டால் கோபித்துக்கொள்வார். 'ஒரு அன்போ அனுசரணையோ கிடையாது' என்று ரமா நினைப்பாள்.

பிறகு ஒன்பது மணிக்கெல்லாம் படுக்கை. ஏழு மணிக்கே ரமாவுக்குத் தூக்கம் தூக்கமாய் வரும். சமாளித்துக் கொண்டு படிப்பாள், அப்பாவுக்குப் பயந்து. இரவு மணி ஒன்பதுக்குள் ரொம்ப அசந்து விடும் ரமாவுக்கு. நன்றாக அயர்ந்து தூங்க வேண்டும் போல் இருக்கும். அதுவும் விடியற் காலையில் நன்றாகத் தூக்கம் வரும். அப்போது பார்த்து அப்பா எழுப்பி விடுவார். உடனே எழுந்துவிட வேண்டும். இல்லாவிட்டால், அப்பாவுக்குப் பொத்துக் கொண்டு கோபம் வந்து விடும்!

'சே, என்ன அப்பா, எப்போதும் கண்டிப்பு, கண்டிப்பு. இங்கே நிற்காதே, அங்கே நிற்காதே. இதைச் சாப்பிடாதே. அதைச் சாப்பிடாதே. படி படி. இதே பேச்சுத்தானா?' என்று கோபம் கோபமாய் வரும்.

ரமாவின் அப்பா அரசாங்க உத்தியோகஸ்தர். சுமாரான சம்பளம்தான். ரமா ஆசைப்பட்டுக் கேட்டதையெல்லாம் உடனே வாங்கிக் கொடுக்க முடியாத நிலைமை. ஆனாலும், எங்கேயோ கடன் உடன் பட்டு வாங்கிக் கொடுத்து விடுவார். படிப்பில் படு சுட்டி. முதல் ராங்தான் எப்போதும். 'ஆனாலும் என்ன, இயந்திரம் போல் காலையில் ஐந்தரைக்கெல்லாம் எழுந்திருக்க வேண்டுமே! சாவி கொடுத்த பொம்மை போல் கிடுகிடுவென்று தன் காரியங்களைச் செய்து கொள்ள வேண்டுமே!' என்று ரமா முணுமுணுப்பாள்.

ஸ்கூல் வாயிலில் நெல்லிக்காய், ஐஸ் இதெல்லாம் விற்கும். நிறையக் குழந்தைகள் வாங்கித் தின்பதைப் பார்க்கும்போது ரமாவுக்கும் சபலம் தலை தூக்கும். அப்பாவின் கண்டிப்பை நினைத்துக் கும்மென்று இருந்துவிடுவாள். தெரு ஓரங்களில் ஈமொய்த்துக் கொண்டிருக்கும் பண்டங்களை வாங்கித் தின்னக் கூடாது என்பார் அப்பா.

ஒரே ஒரு தடவை அப்பா அம்மாவுக்குத் தெரியாமல் வீட்டில் யாரோ சொந்தக்காரர்கள் கொடுத்து விட்டுப் போயிருந்த காசை எடுத்துக் கொண்டு போய், ஸ்கூல் வாயிலில் விற்றுக்கொண்டிருந்த நெல்லிக் காயையும் மட்டமான ஐஸையும் ஆசை தீரத் தின்றுவிட்டாள்.

மறுநாளே ஜுரம் வந்து விட்டது. அப்பாவுக்குப் பயந்து உண்மையைச் சொல்லி விட்டாள். அப்பா மிகவும் கோபித்துக் கொண்டார். மூன்று நாட்கள்வரை கடுமையான ஜுரம். டாக்டர் நிறைய மருந்து கொடுத்தார். தினம் ஒரு இன்ஜக்ஷனும் போட்டார். கஞ்சி மட்டும்தான் குடிக்க வேண்டும் என்றார். ஒரு வாரம் வரை படுக்கை தான். எதையும் சாப்பிட முடியவில்லை. ஒரு வாரப் படிப்பும் போயிற்று.

படுத்துப் படுத்துப் போரடித்தது.

உடம்பு தேறியவுடன் மறுபடியும் கண்டிப்பு. ஒரு வாரப் படிப்பையும் சேர்த்துப் படிக்க வேண்டிய நிலைமை. சே, என்ன படிப்பு, படிப்பு!

ஊரிலிருந்து அத்தை வந்திருந்தாள். அத்தை ரொம்ப அன்பு காட்டினாள். 'கண்ணு, கண்ணு' என்று கொஞ்சினாள் ரமாவை. தான் போகுமிடமெல்லாம் ரமாவை அழைத்துக் கொண்டு போனாள். கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்தாள். அத்தை பிள்ளை கோபால் நிறைய விஷமம் பண்ணினான். அத்தையும் கண்டிக்கவில்லை. தொட்டதற்கெல்லாம் கோபம் வரும் அப்பாவும் சிரித்துக் கொண்டே இருந்தார். எதைத் தொட்டாலும், ''ரமா, உடைஞ்சிடும். தொடாதே!'' என்பவர் கோபால் தொட்டால் வாயைத் திறக்க மாட்டார்.

ரமாவுக்கும் ஸ்கூல் லீவு. அதனால் அவர் அதிகம் கண்டிக்கவில்லை. அத்தையுடன் சுற்ற, சினிமாப் பார்க்க, எக்ஸிபிஷன் போக, ஹோட்டலில் சாப்பிடவெல்லாம் அனுமதித்தார். 'அத்தை என்னமாகப் பழகுகிறாள்! அன்பைப் பொழிகிறாள். சே, இந்த அப்பாவும் இருக்கிறாரே, எப்பவும் கடுகடுவென்று!' என்று நினைத்துக் கொள்வாள்.

சில சமயங்களில் அப்பா ரமாவைக் கண்டித்துக் கோபித்துக்கொண்டாலும், ''டேய், டேய், குழந்தையை ஏண்டா கோவிச்சுக்கிறே' என்று பரிந்து கொண்டு வருவாள், அத்தை.



"எங்க ஊருக்கு வந்துடேன் ரமா. அங்கே ஸ்கூலில் படிக்கலாம். கோபாலும் உன்னோடு வருவான். விளையாடுவான். உனக்கு வேண்டியதையெல்லாம் தருவேன்" என்றாள் அத்தை.

"டேய், ரமாவை நான் அழைச்சிண்டு போறேண்டா. நானே படிக்க வைக்கிறேன். எனக்கும் பெண் குழந்தை கிடையாது" என்றாள் அத்தை அப்பாவிடம்.

"அதெல்லாம் வேண்டாம் அக்கா. எங்களுக்கு ரமாவை விட்டுப் பிரிந்து இருக்க முடியாது" என்றார் அப்பா.

ரமாவுக்குக் கோபம் கோபமாக வந்தது. 'பிரிந்து இருக்க முடியாதாம், பிரிந்து! போலியாய் வேஷம் போடுகிறார் அப்பா. அம்மாவும் தாளம் போடுகிறாள். எப்பவும் கண்டிப்பு, படிப்பு தவிர வேறென்ன இங்கே?'

'அத்தை வீட்டுக்குப் போனால் ஜாலியாய் ஊர் சுற்றலாம். வேண்டியதைத் தின்னலாம். கட்டுப்பாடு கிடையாது. நொடிக்கொரு தடவை, 'ரமாக் கண்ணு, ரமாக் கண்ணுன்னு ஆசையாய்க் கூப்பிடறாளே! எல்லாவற்றுக்கும் கொடுத்து வைத்திருக்கணும்' என்று நினைத்துக் கொண்டாள்.

அந்த வருஷமும் ஸ்கூலிலேயே ரமா தான் பர்ஸ்ட் ராங்க். ஸ்கூலில் பரிசு கொடுத்தார்கள், முதல் ராங்க் வாங்கியதற்கும் ஒரு நாள்கூடத் தவறாமல் பள்ளிக்கு வந்ததற்கும்.

★★★★★★★★★★★★★★★★★★★

"எதுக்கு அம்பி என்னை உன் வீட்டுக்கு அழைக்கிறாய்?"

"என் தம்பிக்குப் பூச்சாண்டி காட்ட!"

- சுதர்ஸன்



இதேபோல எப்போதும் இருக்க வேண்டும் என்று அப்பா சொன்னதோடு சரி. மறுபடியும் கண்டிப்பு, கண்டிப்பு!

அத்தையை நினைத்து நினைத்து ஏங்கினாள் ரமா. கடவுளிடம் வேண்டிக் கொண்டாள், அத்தை வீட்டிலேயே படிக்க வேண்டும், அப்பா கண்டிப்பிலிருந்து விடுபட வேண்டும் என்று.

கடவுள் ரமாவின் வேண்டுகோளுக்குச் செவி சாய்ப்பது போல் ஒரு சம்பவம் நடந்தது.

அப்பா ஆபீஸில் ஒரு பயிற்சிக்காக அவரை ஒரு வருஷம் டில்லிக்கு அனுப்ப வேண்டும் என்றார்கள். அப்பாவுக்கு ஹோட்டல் சாப்பாடு ஒத்துக் கொள்ளாது. அல்ஸர் நோய் அவருக்கு. அதனால் அம்மாவும் கூடப் போவதென்று முடிவாயிற்று.

ஒரு வருடம் வரை ரமா அத்தை வீட்டில் படிக்க வேண்டும் என்று முடிவாகியது. ரமாவுக்கு ரொம்பச் சந்தோஷம். அத்தையும் நொடிக்கொரு தடவை 'ரமாக் கண்ணு, ரமாக் குட்டி' என்று கொஞ்சிக் கொண்டிருந்தாள். ரொம்பப் பெருமையாக இருந்தது ரமாவுக்கு.

'ஒரு வருஷம்தானே அப்பாவுக்கு டில்லி வாசம்? திரும்பி வந்தவுடன் மறுபடியும் போயாக வேண்டுமே! இங்கேயே அத்தை வீட்டிலேயே படிக்கிறேன் என்று சொல்லிவிட வேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும், அப்பா வீட்டுக்குப் போகக் கூடாது' என்று நினைத்துக் கொண்டாள்.

ஒரு வாரம் வரை அத்தை ரொம்பப் பிரியமாக இருந்தாள். பின்னால் கொஞ்சம் கொஞ்சமாய் மாற ஆரம்பித்தாள்.

ரமாவுக்குப் பழக்கமில்லாத வேலைகளையெல்லாம் செய்யச் சொன்னாள். அவளால் முடியவில்லை. அதெல்லாம் செய்து பழக்கமில்லை. அப்பா வீட்டில், 'இதைச் சாப்பிடு ரமா, அதைச் சாப்பிடு ரமா' என்று கெஞ்சுவார்கள். முடியாதென்று அடம் பிடிப்பாள். பிடிக்காததெல்லாமும் இப்போது பிடித்தது. முன்பெல்லாம் பசியே எடுக்காது ரமாவுக்கு. சாப்பாட்டின் முன் உட்கார்ந்து 'ஹோ' வென்று அழுவாள். அம்மா கூட, "சாப்பாடு அன்ன லட்சுமி. இலை முன் உட்கார்ந்து அழக் கூடாது. பின்னால் வருத்தப்படுவாய்" என்று சொன்னதெல்லாம் நினைவுக்கு வந்தது.

ரொம்ப அன்பாய் இருந்த அத்தை, முதலில் சிரித்துக் கொண்டே எல்லா வேலைகளையும் வாங்கினாள் ரமாவிடம்.

நாட்கள் போகப் போக முகம் களித்து, கடுகடுவென்று எரிந்து விழுந்தாள். படிக்கவே நேரமிருக்காது ரமாவுக்கு. கால் பரீட்சையில் மார்க்குகள் குறைந்தன. அழுகை பொத்துக் கொண்டு வந்தது ரமாவுக்கு. எப்போதும் அலுப்பு, பசி. வயிறு நிறையச் சாப்பாடு கூடப் போடுவதில்லை.

ஒரு நாள் ரமா, உடம்பு சரியில்லை என்று படுத்து விட்டாள்.

எல்லா வேலைகளையும் செய்தும் கூட. "இந்தப் பெண் சொன்னது எதையுமே கேட்க மாட்டேன் என்கிறது. சரியாய்ச் சாப்பிடுவதும் இல்லை. பின்னால் என் மண்டையை உருட்டப் போகிறார்கள். எனக்குப் போதாத காலம். இந்த உபத்திரவத்தை இழுத்து விட்டுக் கொண்டேன். நல்லபடியா உன் அப்பா பயிற்சி முடிந்து வந்த உடன் உன்னை ஒப்படைக்க வேண்டும்" என்றாள். வருவோர் போவோரிடமெல்லாம் ரமாவைத் திட்ட ஆரம்பித்தாள்.

"நீங்கள் ஏன் மாமி இதையெல்லாம் இழுத்து விட்டுக் கொள்கிறீர்கள்? கடைசியில் உங்களுக்குக் கெட்ட பெயர்தான், உங்க தம்பிகிட்ட" என்று சிலர் தூபம் போட்டனர்.

அத்தை பிள்ளை கோபாலும் ரமாவுடன் விளையாடுவதுமில்லை, அனுசரணையாகப் பேசுவதுமில்லை. முன்பு கலகலப்பாய் இருந்தவன், இப்போது தலையில் குட்டுவது, பின்னலைப் பிடித்து இழுப்பது, மண்ணை வாரிக் கண்களிலும் தலையிலும் போடுவது அப்படியெல்லாம் செய்துவிட்டுத் தன்னைத் தொந்தரவு செய்வதாய் அத்தையிடம் புகார் செய்வான். உடனே அத்தை ரமாவைத் திட்டுவாள்.


வீட்டு வேலைகள் எல்லாம் தெரிந்து கொண்டாள், ரமா. ஆனால், உடம்பு ரொம்ப இளைத்து விட்டது. படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. அரை வருடப் பரீட்சையில் இன்னமும் மார்க்கு குறைந்தது. படிக்கவே நேரம் கொடுக்காமல் வேலைகளை வாங்கிவிட்டு மார்க் குறைந்ததற்கும் அத்தை ஏசினாள்.

அப்போதுதான் முதன் முறையாக அப்பா அம்மாவை நினைத்துக்கொண்டாள் ரமா.

அப்பா அம்மா கண்டிப்பு எவ்வளவு அவசியமானது என்பதை உணர்ந்து கொண்டாள்.

'கடவுளே, வினாயகப் பெருமானே, அப்பா அம்மாவைத் தப்பாக நினைத்தேனே! அதற்குத் தண்டனை கொடுத்து விட்டாய். சீக்கிரம் அப்பா, அம்மா ஊர் திரும்ப வேண்டும். அவர்களிடம் போய்விட வேண்டும். நேரம் தவறாமல் படித்து நன்றாய் முன்னுக்கு வர வேண்டும். நிறைய மார்க்குகள் வாங்க வேண்டும். தவிர, ஆசை தீர நன்றாய்ச் சாப்பிட வேண்டும்' என்று வேண்டிக் கொண்டாள்.

தினம் தினம் ஓயாமல் வினாயகப் பெருமானை வேண்டிக் கொண்டதால் அப்பா அம்மா சீக்கிரமே ஊர் திரும்பினர்.



"இட்லி என்ன காசு? சாம்பார் என்ன காசு?"

"தொட்டுக்கொள்கிற பண்டத்துக்கு காசு கிடையாது. அது இனாம்"

"அப்போ, இட்லிக்குத் தொட்டுக்க நாலு லட்டு, எட்டு ஜாங்கிரி, ஆறு துண்டு அல்வா கொண்டுவா."

- சுதர்ஸன்

ரமாவைத் திரும்ப அழைத்துக் கொண்டனர். "எனக்கென்னவோ பாரம் குறைந்தது டா. அவரவர்கள் குழந்தைகள் அவரவர்களிடம்தான் இருக்க வேண்டும்" என்றாள் அத்தை.

"லீவுக்கு வந்து போ ரமா" என்றாள் அத்தை, அன்பொழுக.

'போதும், போதும், உங்கள் சிரிப்பும், உபசரிப்பும். நான் இனி ஏமாற மாட்டேன். என்ன இருந்தாலும் இனி, பெற்றோர்தான் தெய்வம். அவர்கள் சொல்படிதான் கேட்பேன். புத்தி வந்தது எனக்கு' என்று ரமா வாய் விட்டுச் சொல்லவில்லை: உள்ளூர நினைத்துக் கொண்டாள்.



அந்தத் தெருவிலே வாலில்லாக் குரங்குகளென்று பேர் வாங்கின செட்டு மாரிமுத்துவும், அவன் தோழர்களான கண்ணன், வைரம் மூன்று பேரும்தான்.

தெருவிலே இந்த மூன்று பேரும் இறங்கினுல் போதும். வருகிறவர்களையும் போகிறவர்களையும் பரிகாசம் செய்வதும், வம்புச் சண்டைக்கு இழுப்பதும் அவர்களது வழக்கமாகிவிட்டது. அதனுல், வாலில்லாக் குரங்குகள் என்ற பெயரும் வாங்கி விட்டார்கள்!

'இந்த மூன்று பேருக்கும் நல்ல புத்தி வராதா, இவர்களும் நல்ல பிள்ளைகளாக மாற மாட்டார்களா' என்று வேண்டினவர்கள் நிறையப் பேர் உண்டு.

அன்றைக்கு இந்த மூன்று வாலுகளும் தெருவிலே குஷியாக ஒருத்தரை ஒருத்தர் பிடித்துத் தள்ளிக் கொண்டு விளையாடியவாறு சென்ருர்கள். திடீரென்று மாரிமுத்து, ''பாம்பு டோய், பாம்பு!'' என்று அலறிக் கூச்சலிட்டான். மற்ற இருவரும் 'எங்கே, எங்கே?' என்று கேட்டு நடுங்கிக் கொண்டே ஓட்டமெடுத்தார்கள்.

மாரிமுத்து, ''ஏண்டா என்னை விட்டுட்டு ஓடறீங்க? பாம்பு செத்துக் கிடக்குடா! செத்த பாம்பு! ஆமாம், ஓடியாங்க'' என்ருன். தைரியத்தை ஒரு மாதிரியாக வரவழைத்துக்கொண்டு கண்ணன், வைரம் இருவரும் மாரிமுத்துவிடம் வந்தார்கள்.

மாரிமுத்து திடீரென்று அவர்கள் கை இரண்டையும் பிடித்துக் கொண்டு, ''ஏண்டா இப்படி நடுநடுங்கிச் சாகிறீங்க?'' என்ருன்.

''நிஜமா பாம்பு செத்துப்போச்சா? நல்லாப் பாருடா'' என்ருன் வைரம்.

''இருடா ஒரு கல்லை எடுத்து மெதுவா விட்டெறிஞ்சு பார்க்கிறேன்'' என்று கண்ணன் ஒரு கல்லை எடுத்துப் பாம்பின் மேல் போட்டான். அது அசையவில்லை.

''ஆமாண்டா, இது செத்த பாம்பு. எதுக்கும் நான் ஒரு தடவை பரீட்சை செய்து பார்க்கிறேன்'' என்று தன் கால் கட்டை விரலால் பாம்பின் வாலை அழுத்திப் பார்த்தான். பாம்பு அசையவில்லை; நெளியவில்லை. பிறகு தைரியமாக உட்கார்ந்து கையால் பாம்பின் வாலைப் பிடித்துத் தூக்கினுன். பாம்பு அசையவில்லை. ''செத்த பாம்பு டோய்'' என்று பலமாகச் சிரித்தான் மாரிமுத்து.

''நிஜமாவாடா! எங்கே நானும் தொட்டுப் பார்க்கிறேன்'' — வைரம் ஆசைப்பட்டான். ''செத்த பாம்பு கடிக்காதே!'' என்று தன் பயத்தைப் போக்கிக் கொண்டான். இப்போது மூன்று பேரும் சேர்ந்து சிரித்தார்கள். மாரிமுத்து செத்த பாம்பைக் கையில் வைத்துக் கொஞ்சம் ஆட்டிப் பார்த்தான்.

பிறகு வைரம் கையில் கொடுக்க, அவனும் பயந்துகொண்டே லேசாக ஆட்டிப் பார்த்தான். கண்ணன் வைரத்தின் கையைத் தன் கையால் தொட்டுப் பார்த்தான். மாரிமுத்து, ''நாம பாம்பை வெச்சிக்கிட்டு விளையாடினது போதும், மத்தவங்களுக்கு விளையாட்டுக் காட்டலாம்'' என்று சொல்லி, வைரத்திடமிருந்து பாம்பைத் தன் கையில் வாங்கிக் கொண்டான். அதற்குள் எட்டயிருந்து இதை வேடிக்கை பார்க்க நாலைந்து குழந்தைகள் கூடி விட்டார்கள்.

இதைப் பார்த்த மாரிமுத்து, ''பாருங்கடா, பாம்பை, உயிரோட பிடிச்சோம். உங்களாலே முடியுமா?'' என்று கேட்டுக் கொண்டே பாம்பை அவர்கள் மீது வீசிவிடுவது போல் 'புஸ்...புஸ்... ஆடு பாம்பே, நீ ஆடு பாம்பே' என்ருன்.

அவ்வளவுதான்! அந்தக் குழந்தைகள் ''ஐயையோ! பாம்பு! பாம்பு!'' என்று தலைதெறிக்க ஓட, அவர்களைத் துரத்துக்கொண்டு வைரம், மாரிமுத்து, கண்ணன் மூவரும் ஓடினுர்கள். குழந்தைகளோ, 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று தங்கள் தங்கள் வீட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டார்கள்.

''பாம்புக்கு ஏன் இப்படிப் பயப்படுறாங்க?''

''நம்மளைப் போலத் தைரியமா இருக்கத் தெரியல்லியே!''

''சுத்தப் பயந்தாங்கொள்ளிகள்!'' என்று சொல்லிவிட்டு, மூன்று பேரும் தெருவில் வருவோர், போவோரை, பாம்பைக் காட்டிப் பயமுறுத்திக் கொண்டேயிருந்தார்கள்.

இந்தச் சமயத்தில் வைரம், ''மாரிமுத்து, எம்மா நேரம் பாம்மை நீமட்டும் கையிலே வச்சுக்கிடுவே? என் கிட்டதான் கொஞ்ச நேரம் தாடா'' என்றான்.

''இந்தாடா, வாங்கிக்க.''

''எங்கிட்டயும் அப்புறம் தரணும்'' என்றான் கண்ணன். வைரம் பாம்பின் வாலைக் கையில் பிடித்து மாரிமுத்து விடமிருந்து வாங்கி 'விர், விர், விர்' என்று சுற்றினான். தன் தலைக்கு மேல் சுற்றினான். முன்னால் வளைந்து வளைந்து பாம்பு நெளிவது போல் சுற்றினான். பிறகு, ''கண்ணா, இந்தாடா, நீயும் வாங்கித் தைரியமாச் சுத்து'' என்றான்.

''வைரம், நீ சுத்தும்போது பாம்பு நெளிஞ்ச மாதிரியே இருந்ததுடா'' என்றான் கண்ணன்.

''அதுவா? ஐயா சும்மா நெளிஞ்சு நெளிஞ்சு பாம்பு அசையற மாதிரியே கையிலே வெச்சுச் சுத்தினாரா, அதனாலே அப்படித்தான் இருக்கும். கண்ணா, நீயும் சுத்துடா'' என்றான் வைரம்.

கையில் வாங்கி வாலைப் பிடித்துப் பாம்பைப் பலமுறை சுற்றினான் கண்ணன். பின்பு, துண்டை உதறுவது போல் பாம்பை உதறினான். அது கண்ணன் கையிலிருந்து மாரிமுத்து, வைரம் பக்கத்தில் விழுந்தது.

உடனே ஒரு பெரிய அலறல், ஊரே நடுங்கும்படி! அப்படிச் சத்தம் போட்டது வைரமும் மாரிமுத்துவும்தான்!


''ஐயோ பாம்பு! பாம்பு! பாம்பு!'' என்று உயிரே போகும்படி கத்திக்கொண்டு ஓடினார்கள். கண்ணன் எங்கே எப்படி ஓடினான் என்றே தெரியவில்லை!

மாரிமுத்து, வைரம் அருகில் விழுந்த பாம்பு, சீறிக் கிளம்பி அவர்கள் ஓடிய திசையில் ஓட ஆரம்பித்தது! தலை தெறிக்க ஓடிய மாரிமுத்து தெருவில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த சாணத்தில் விழுந்து, உடல் முழுவதும் சாணம்!

வைரம் ஓடிய வேகத்தில் தெருவின் ஓரமாகத் தேங்கிக் கிடந்த சாக்கடையில் விழுந்து நீராடி எழுந்தான். கண்ணன் ஓடிய வேகத்தில் எதிரில் வந்த சைக்கிளில் மோதி, கைகால்களில் குங்குமப் பொட்டு வைத்தது போல் காயம்!


என்ன நடந்தது? அந்தப் பாம்பு மயங்கிய நிலையில் நகர முடியாமல், தெருவோரம் உள்ள புதரை விட்டு வெளியே வந்து கிடந்திருக்கிறது. அதை இந்த வாலில்லாக் குரங்குகள் கையில் எடுத்து அப்படியும் இப்படியுமாகச் சுற்றி, முதலுதவி கொடுத்தது போல் செய்து விட்டார்கள்!

பாம்புக்குப் பாலை வார்த்தால் அது என்ன செய்யும்? இவர்களோ பாம்புக்கு உயிரல்லவோ கொடுத்து விட்டார்கள்? எதில் விளையாடுவது, எதோடு விளையாடுவது என்று இருக்கிறதல்லவா?



விஞ்ஞான விளையாட்டு

ஆர்.பி.சாரதி



எரியாத கைக்குட்டையும், நனையாத கைக்குட்டையும்

காகிதம், துணி போன்றவை மிக எளிதில் தீப்பற்றிக் கொள்ளும் என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால் கைக்குட்டை ஒன்றை எரியாமல் இருக்கச் செய்வது எப்படி? வெகு சுலபம்! கைக்குட்டைதான் தேவை என்பதுகூட அல்ல...பழைய கிழிந்த துணிகூடப் போதும்!

மெழுகு வர்த்தியையோ பெட்ரூம் விளக்கையோ ஏற்றி வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் வைத்துள்ள துணியின் ஒரு முனையை அப்படியே சுடரில் காட்டுங்கள். உடனே தீப்பற்றும். அணைத்துவிடுங்கள்! இன்னொரு முனையில் பழைய செப்புக் காலணாவையோ வேறு எந்தக் காசையோ இறுக முடிந்து வைத்துக் கொள்ளுங்கள். இப்போது முன்போலவே செப்புக் காசு முடிந்த துணிமுடிச்சைச் சுடரில் காட்டுங்கள்! உடனே தீப்பற்றி எரிகிறதா? எரியாது. ஏன்?

தீயின் வெப்பத்தை உள்ளே உள்ள செப்புக் காசு இழுத்துக் கொண்டு விடுகிறது. செப்புக் காசு கிடைக்கா விட்டால் இப்போதுள்ள இருபத்தைந்து காசு நாணயம் அல்லது வேறு நாணயத்தைப் பயன்படுத்திப் பாருங்களேன்!

இதே விளையாட்டைக் காகிதத்தில் கூடச் செய்து பார்க்கலாம். வெறுங் காகிதம் தீப்பட்டவுடன் எரிந்து போய்விடும். அதே காகிதத்தைச் செப்புக்காசை வைத்து இறுகக் காற்றுப் புக இடமில்லாமல் முறுக்கி (ஆனால் கிழியாமல்) தீச்சுடரில் காட்டுங்கள்! உடனே தீப்பற்றாது!

ஜாக்கிரதை! நெருப்போடு விளையாடும்போது மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உங்களுக்கோ, வீட்டில் உள்ள பொருட்களுக்கோ ஆபத்து ஏற்பட்டுவிடப் போகிறது! காகிதம், அல்லது துணியில் உள்ள காசைக்கூட உடனே தொடக் கூடாது! சுட்டு விடும்! (எனக்கே சுட்டு விட்டது. வாயில் விரலை வைத்துக் கொண்டேன்!)

எரியாத கைக்குட்டையை இனி நனையாத கைக்குட்டையாகவும் காண்போமா?

அதே கைக்குட்டை அல்லது துணியை நன்றாகப் பந்து போல் சுற்றி ஒரு டம்ளருக்குள் இறுக்கமாக அடைத்து விடுவோம். நம் உள்ளங்கையால் டம்ளரின் வாய்ப்புறத்தை இறுக மூடிக்

கொண்டு இன்னொரு கையால் அடிப்புறத்தைப் பிடித்துக் கொண்டு கவிழ்த்தாற்போல் நீருள்ள தொட்டியிலோ வாளியிலோ அடிப்பக்கம் வரை கொண்டு போய் நீர் உள்ளே புகாமல் (வைத்துவிட்டு) கையைச் சட்டென்று எடுத்துவிட வேண்டும். டம்ளர் உள்ளே நீர் சென்று துணியை நனைக்க வேண்டு மல்லவா? அதுதான் நடக்காது! டம்ளரை 'லபக்'கென்று மேலே தூக்குங்கள்! கைக்குட்டை நனைந்திருக்கிறதா? நனையாது. ஏன்?

டம்ளரின் உள்ளே இருந்த காற்று நீருக்கு இடம் தரவில்லை! அவ்வளவு தான்!

வீட்டில் ஒரு மீன் தொட்டி!

நீங்கள், சிலர் வீட்டில் மீன் தொட்டியைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? மிக அழகிய வண்ண வண்ண மீன்கள் சுற்றிச் சுற்றி மேலும் கீழும் நீந்திச் செல்வதை மீன் காட்சியகத்திலும் கண்டிருக்கலாம்.

நாமும் சிறிது நேரம் ஒரு மீன் தொட்டி அல்லது மீன் பக்கெட் அமைத்துக் களிப்போமா?

நமக்குத் தேவை உயிருள்ள மீன்கள் அல்ல... அட்டை மீன்கள்... வெறும் அட்டை மீன்கள் — நாமே செய்யப் போகும் அட்டை மீன்கள்!

பழைய நோட்டுப் புத்தக அட்டைகளோ, வேறு சற்றுக் கனமான அட்டைகளோ போதும்! பென்சிலால் மீன் போல (ஆமாம், மீன் போலத்தான்... சுமாராக வரைந்தால் போதும்) வரைந்து கொண்டு கத்தரிக் கோலால் வெட்டி எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு மீன்கள் தேவையோ அவற்றைத் தயார் செய்து கொண்டு விடுவோம். ஒன்றை மறந்து விட்டேனே...!

நம் மீனுக்கு மிகத் தேவையான தனி அமைப்பு ஒன்று! வால் பக்கம் சிறு பள்ளம் போல பிளேடு அல்லது கத்தியினால் சிறிக் கொள்ள வேண்டும். இது ஆழமாக அமைவது நல்லது. ஆனால் ஓட்டையாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். மீன்கள் தயார்! வாயகன்ற தண்ணீர்த் தொட்டியோ, வாளியோ போதும். தண்ணீர்ப் பஞ்ச காலத்தில் தண்ணீரை வீணாக்கப் போவதில்லை. விளையாட்டுக்குப் பிறகும் பயன்படுத்தலாம் (குடிக்க அல்ல!)

நம் மீன்களைத் தண்ணீரில் விடுமுன் வால் பக்கத்து 'காடி'யில் சலவைத் தூளையோ சோப்பின் பிசிறுகளையோ மெழுகினைப் போல் அடைத்து விட வேண்டும்.


இப்போது நீரில் மீனை மிதக்க விடுவோமா?

சிறிது நேரம் கழியட்டும்...

சோப்புக் கரையக் கரைய மீனுக்குக் குஷி! 'ஜம்'மென்று நீந்தும்! சோப்புத் தூள் கரைந்து மீன் நனைந்து உள்ளே போகுமுன் தூக்கி எறிந்து விடுங்கள். நமக்கென்ன மீனுக்கா பஞ்சம்? புதிய... புதிய... மீன்கள்! தொட்டியின் அளவுக்கேற்ப ஒரே சமயத்தில் இரண்டு மூன்று மீன்களையும் விடலாம்! சலவைத் தூள், சோப்புக்குப் பதிலாக கற்பூரத் தூளை அல்லது சில சொட்டுத் தேங்காய் எண்ணெயை விட்டோ கூட முயற்சி செய்யலாம்.

நம் மீன்களின் வண்ணம் அட்டையின் வண்ணம்தான்! நம் மீன் சுற்றிச் சுற்றி வருமே தவிர நீருக்கு அடியிலும் மேலுமாக நீந்த முடியாது!

என்ன இருந்தாலும், மனிதனின் படைப்புக்கும் கடவுளின் படைப்புக்கும் வேறுபாடு இல்லாமல் இருக்குமா?



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி


உறுப்பினர் எண், பெயர், முகவரி

326. வி. ஸ்ரீராம், 20, ரெட்டி ராயர் தெரு, தென்கரை, கும்பகோணம்.
327. எ. குப்புசாமி, 8ஆம் வகுப்பு, உயர்நிலைப்பள்ளி, வித்யாலய அஞ்சல், கோவை-641020.
328. கே. இலக்குவன், 6ஆம் வகுப்பு, அரசினர் உயர்நிலைப்பள்ளி, அத்திவெட்டி, மதுக்கூர், தஞ்சை மாவட்டம்.
329. புரசை பா. நாகராசன், 17/1, சுப்பிரமணியபுரம் 2வது தெரு, காரைக்குடி.
330. ப. செந்தில் பாபு, எஸ். மேலப்பட்டி, சந்தையூர்-626713.
331. ஜி. கருணாதேவி, 8/எ, சப்பாணி கோவில் கிழக்குச் சந்து, தெற்கு வெளி வீதி, மதுரை 1.
332. வி. எம். கணேசன், 9, ஜோன்ஸ்புரம் 2வது தெரு, பசுமலை, மதுரை-4.
333. நா. ஆ. திருமணிச்சாமி, 163, சீதக்காதி தெரு, விருதுநகர்-1.
334. ஆர். சிவகுமார், 231-இ, தெற்கு வடக்குப் புதுத் தெரு, சாத்தூர்-626203.
335. சி. ஜே. சரவணன், 95, செந்தி விநாயகபுரம், விருதுநகர்-1.
336. ஜி. சுரேஷ், வீட்டு வசதி வாரியம், ஐ.பி.-4, திண்டிவனம்-604002.
337. ஆர். கே. சங்கரநாராயணன், 1/72, கிழக்குத் தெரு, நல்லாத்தூர்-605121.
338. எம். பி. வி. சபரிநாதன், 60-பி, வடக்குத் தேர் வீதி, சீர்காழி.
339. நா. ரங்கராஜன், 1908, சந்தைப்பேட்டை, புதுக்கோட்டை.
340. ஏ. ஆர். சுந்தர், 4, நீலகண்டன் தெரு, கணபதிநகர், நாகல்கேணி, சென்னை 44.
341. ஆர். ஸ்ரீதர், C/o எம். இராமகிருஷ்ணன், 'கோகுலம்', பழங்காநத்தம், மதுரை-3.
342. டி. சிவக்கொழுந்து, 7, ராஜபவனம், பெருமாள்புரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி-7.
343. எஸ். ராம்குமார், 26, சம்பந்தம் தெரு, மந்தைவெளி, சென்னை-28.
344. ஜி. வெங்கடேஸ்வரன், 99, பெருமாள் சன்னதித் தெரு, ஸ்ரீவைகுண்டம்-628601.
345. கே. பிச்சைகிருஷ்ணன், 2, கஸ்தூரிபா நகர், மேலூர்-635106.
346. வா. சிவகுமார், 11/4, இல்லத்துப் பிள்ளை தெரு, போடிநாயக்கனூர்-626513.
347. எம். செல்வக்குமார், 1/44, வடக்குத் தெரு, குல்லூர் சந்தை-626053.
348. ச. இரமணன், 31, திருவள்ளுவர் தெரு, சிதம்பரம்.
349. ஆர். பூர்ணிமா, 8, சின்ன அக்ரஹாரம், ராசிபுரம்-637408.
350. ஆர். வைதேகி, 8, சின்ன அக்ரஹாரம், ராசிபுரம்-637408.
351. ஞா. ராஜன், 1/43, கலைமகள் தெரு, சுவர்ணபுரி, சேலம்-4.
352. வி. ரேவதி, 2/10, பூளவாடி, கோவை மாவட்டம், 638206.
353. இரா. சத்தீஷ்குமார், 15, பாரதிதாசன் தெரு, பா. நா. புதூர், கோவை-41.
354. ஜி. யுவராஜ், 76, பழைய எடப்பாடி ரோடு, சங்ககிரி, சேலம் மாவட்டம்.
355. வா. ஸ்ரீதர்கிருஷ்ணா, 39, அண்ணாமலை கவுண்டர் வீதி, தர்மபுரி.
356. எஸ். இராகவேந்திரன், 26, மு. க. புதூர், 2வது வீதி, திருப்பூர்-4.
357. ஜி. ஹரிஹரன், 26, ஆறுமுகம் பிள்ளை தெரு, நெகமம்-642120.
358. ப. செந்தில்வடிவு, இ. பழனிச்சாமி, தமிழாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, செரிபாளையம்-642120.
359. எஸ். பரமேஸ்வரன், 12/34, மாரியம்மன் கோவில் தெரு, ஆ. புதுப்பாளையம், சக்தி நகர், பெரியார் மாவட்டம்.
360. வி. விஷ்ணுப்ரியா, 12, கழனிவாசல் அக்ரஹாரம், காரைக்குடி.
361. நா. மோகன், எஸ். சி. பிளாக் 20/6, ஸ்டோன் ஹவுஸ் ஹில், உதகை.
362. எஸ். கவி, 41, மாலைக் கோவில் தெரு, விருதுநகர்.
363. க. கார்த்திகேயன், 9, வேலுச்சாமிக் கவுண்டர் லே அவுட், பொள்ளாச்சி.
364. வி. அருள், C/o டி. வீர வெங்கடாசலம், கரும்பு இன்ஸ்பெக்டர், பேரூர்-608701.
365. க. மதிஆதனன், 118A, டாகடர் ராதாகிருஷ்ணா ரோடு, டாடாபாத், கோவை-12.
366. பொன். ஜி. பிரபாகரன், 18, ஸ்ரீரங்க பிள்ளை தெரு, குகை, சேலம்-6.
367. ம. ராம்சேகர், 16, அன்னபூர்ணா லே-அவுட், கே. கே. புதூர், கோவை-38.
368. ஜே. டயஸ் எப்ரேம், 63, தச்சன்மொழி, சாத்தன்குளம்-628704.
369. கே. பரமகுரு, 4/224, டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரு, காந்திநகர், வேலூர்-6.
370. சி. ஸ்ரீராம்ஜி, 17, பராங்குச தேசிகர் தெரு, ஹரித்திரா நதி போஸ்ட், மன்னார்குடி.
371. எம். விமலா, 4244, தெற்கு 3ம் வீதி, புதுக்கோட்டை.
372. எஸ். பிருந்தா, 'ராமர் பவனம்' சேர்ந்தமரம் போஸ்ட்-627857.
373. கோ. கல்பனா, 12, 3வது தெரு, முனுசாமி ரெட்டியார் நகர், கொடுங்கையூர், சென்னை-51.
374. சு. வெங்கடலட்சுமி, 1-ஜி, சேலம் நெடுஞ்சாலை, சின்ன சேலம்-606201.
375. கு. மங்களம், 47, மேற்குச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.
376. ஆ. சீனிவாசன், 86-பி, கிழக்கு கோவிந்தாபுரம், திண்டுக்கல்.
377. கே. பாலாஜி, C/o ஆர். காசிராஜ், கோடங்கால், கடம்பூர்-627714.
378. கோ. பரணீதரன், 1, 3வது தெரு, ஜவஹர் நகர், திருமங்கலம், மதுரை மாவட்டம்.
379. அ. துரைராஜ், 773, அன்பழகன் தெரு, கருணாநிதி நகர், திருச்சி-21.

380. ரா. நாராயணன், 43, தங்கசாலை தெரு, சென்னை-79.
381. மு. சுரேஷ்குமார், 10, நர்ஸஸ் குடியிருப்பு, கோட்டக்கரை, கும்மிடிப்பூண்டி-601201
382. ப. சாயி ப்ரியா, 5-ஏ, மஹாதேவன் தெரு, நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை-44
383. எஸ். செந்தில், 43, மாரியம்மன் கோயில் தெரு, திருக்கண்டீஸ்வரம், நெல்லிக்குப்பம் (வழி).
384. சு. நெல்லைநாயகம், 10-ஏ, ரங்கநாதபுரம் 3வது வீதி, உப்பிலிபாளையம், கோவை-15.
385. ஆர். கிருஷ்ணதாஸ், S/o பி. ராமநாதன், த.பெ. எண் 6, உதகமண்டலம்.
386. ஜெ. நிர்மலா, 119, சின்ன எல்லைய சந்து, ரங்கே கவுடர் வீதி, கோவை-1.
387 வி. நடராசன், 6, சூரியா தெரு, பரணி காலனி, வடபழனி, சென்னை-93.
388. மெ. மணிவண்ணன், 'கலைக் கோயில்' 7, பிள்ளையார் கோவில் தெரு, சைதை, சென்னை-15.
389. ஆர். சுந்தர், 14, எல்லம்மன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33.
390. அரவிந் அனந்தன், 9, 41-வது தெரு, 6வது நிழற்சாலை, அசோக்நகர், சென்னை-83.
391. டி. ஜெய்சங்கர், 255/சி, இரயில்வே காலனி, மதுரை-10.
392. எஸ். லதா, 11/2, ஆதி சங்கரர் தெரு, நாட்டரசன்கோட்டை-623556.
393. G. Venkatesh, 19, Jai Hari Kunj, 13-13-A, Shree Nagar, Shree Nagar Colony Bombay-62
394. ச. பிரகாஷ், 1, காகக்காரச் செட்டி தெரு, மன்னார்குடி-614001.
395. ஆர். ஸ்ரீலலிதா, 70, கன்னையா தெரு, அமைந்தகரை, சென்னை-29.
396. எம். காவேரி லாவண்யா, 13, சரோஜினி தெரு, சென்னை-17.
397. ஏ.எல். பெரியான் (விஜி) 13, ஏ.எல்.வி. காம்பவுண்ட், கடலூர்-607001.
398. எஸ். கல்யாணராமன், 93, பி. நரசிம்மபுரம் வடக்கு, கரூர்-639001.
399. எம். எஸ். ஸ்ரீதர், 150, வெங்கடரங்கம் பிள்ளை தெரு, சென்னை-5.
400. எம். பிரசன்னவெங்கடேஷ், 21, குட்டைத் தெரு, சந்தைப்பேட்டை புதூர், நாமக்கல்-637002.
401. பி. சதீஷ்குமார், 9, ரத்தினசிங் குளம் மேலண்டை வாடை, ஆரணி ரோடு, வேலூர் (வ. ஆ.)
402. எஸ். வித்யுல் லதா, 7-ஏ, கடைவீதி, முசிறி, திருச்சி மாவட்டம்.
403. வி. சிவசங்கர நாராயணன், 7, பொன்மேனி நாராயணன் தெரு, எஸ்.எஸ். காலனி, மதுரை-16.
404. ஏ. வெங்கடேஷ், 86, காமாட்சி அம்மன் கோவில் 2வது தெரு, தெற்கு மாசி வீதி, மதுரை-1.
405. இல. சரவணகுமார், நல்லாம்பாளையம்-621714.
406. க. செய்சங்கர், 40, சின்னத் தெரு, குன்றத்தூர், சென்னை-69.
407. வி. ஜெயலட்சுமி, 3, முதல் தெரு, ராஜாஜி நகர், வில்லிவாக்கம், சென்னை-49.
408. ஆர். ப்ரியம்வதா, C/o பி. கே. ராமகிருஷ்ணன், பழமார்நேரி, திருக்காட்டுப்பள்ளி
409. டி. எஸ். பத்மப்ரியா, 3, திலகர் தெரு, ஆர். எஸ் புரம், கோவை-2.
410. கே. விஜயராகவன், 416, எஸ். எல். எஸ்., அண்ணாநகர், மதுரை-20.
411. எம். எச். முகம்மது மஸ்தான், 2-52, வடக்குத் தெரு, கீழக்கரை, இராமநாதபுரம் மாவட்டம்.
412. ஜி. விஜயகுமார், 45, அன்னவாசல் தெரு, மன்னார்குடி.
413. அ. பக்கிரிசாமி, 20, நாணயக்காரத் தெரு, நாகூர், 611002.
414. எம். பி. சுதா, 90, ஆஸ்பத்திரி வீதி, மதுராந்தகம்-603306.
415. ஆர். நடேசன், 4, சங்கர நிலையம், வள்ளலார் தெரு, சென்னை-63.
416. பி. இந்துமதி, 4, கந்தசுவாமி காலனி, கிழக்குத் தாம்பரம், சென்னை-59.
417. ஏ. பொம்மிராஜ், கிருஷ்ணப்பேரி, ஆர். சி. மிடில் ஸ்கூல், மானகசேரி, இராமநாதபுரம் மாவட்டம்.
418. சி. சகுந்தலா, 13, சுப்பையா நகர், தட்டாஞ்சாவடி, பாண்டிச்சேரி-9.
419. வெ. பிரேமாவதி, 4, லட்சுமண நாயுடு வீதி, உப்பிலிபாளையம், கோவை-15.
420. என். மணிகண்டன், 29, கடைவீதி, நெகமம்-642120.
421. ஏ. ஆர். ஆனந்த், டி-35, பாரப்பட்டி தெரு, விருதுநகர்-1.
422. டி. தீபா, 3, மருதி தெரு, அமைந்தகரை, சென்னை-29.
423. ஆர். சுந்தர், சி-41, கலைமகள் பள்ளித் தெரு, ஸ்வர்ணபுரி, சேலம்-4.
424. ஒய். எஸ். ஹரிஹரன், 29, அக்ரஹாரம், ஏத்தாப்பூர்-636117.
425. எஸ். விஜயலோகா, 47, பக்தபுரி தெரு, கும்பகோணம்.1.
426. ஜெ. ஜான் பிரிட்டோ, 37, பஜனைக்கூடத் தெரு, பாலக்கரை, திருச்சி-1.
427. மு. நக்கீரன், கண்ணு இல்லம், நாயுடுமங்கலம், 606802.
428. க. முருகானந்தம், 7, சுந்தரராயர் காலனி, வண்டிக்காரத் தெரு, தஞ்சை-1.
429. டி. மதிவாணன், 3/45, தேரடித் தெரு, கோலூர்-602101.
430. ஜி. விஜயராஜன், 96-நம்பர் 1, வ. உ. சி. தெரு, பண்ருட்டி.
431. க. சோமசுந்தரம், 51-பி, பூட்டை ரோடு, சங்கராபுரம்-606401.
432. ஏ. என். அரவிந்தன், 55, அனந்தகிருஷ்ணபுரம், சங்கர் நகர், 627357.

(இன்னும் வரும்)

கவிதையா விடுகதையோ?



சீர்காழி வெங்கடேசன்

1

நீரின்றி அழகாக
நீண்டபெரும் ஆறுக
ஊரெல்லாம் உலகெல்லாம்
ஓடுகிற ஆறெதுவோ?

2

தடுக்காத வேலியதைத்
தாண்டாமல் தமிழ்நாட்டுள்
அடுப்பின்றி நெருப்பின்றி
அன்னுங்கரி எக்கரியோ?

3

நம்வயலில் களையாகும்
நாம்உண்டால் மருந்தாகும்
கம்பன்ஔவை பாட்டினிலே
காணுமதன் பேரென்ன?

4

வலைபோட்டோ விலைபோட்டோ
வந்துசேரா மீனும்
அலையில்லாக் குளத்திலுள்ள
அம்மீனும் எம்மீனோ?

5

தரையில் படுக்கும்மரம்
தண்ணீரில் ஓடும்மரம்
இலைகாய்பூ இல்லாமல்
எமக்குதவும் மரம்எதுவோ?

விடைகள்:

1. வரலாறு
2. நெய்வேலி நிலக்கரி
3. ஆரைக் கீரை
4. விண்மீன்
5. கட்டுமரம்

மிருகக் காட்சி சாலை

மு. ராமசாமி

ராமு: மிருகக் காட்சி சாலையில்
மீனு நேற்றுப் பார்த்ததை
அருமையாகச் சொல்லிடு
ஆசையோடு கேட்கிறேன்.

மீனு: ஏண்டா ராமு கேட்கிறாய்?
எத்தனையோ மிருகங்கள்!
ஒவ்வொன்றாக நானுமே
உற்றுப் பார்த்தேன் மகிழ்வுடன்.
கண்டால் உறுமும் சிங்கமும்
கரடியோடு சிறுத்தையும்
கூண்டிற்குள்ளே உள்ளன
கூசாமலே பார்க்கலாம்.
பாயும் வேங்கை விலங்குகள்
பச்சைக் கிளி பறவைகள்
ஊர்ந்து செல்லும் பாம்புகள்
ஒவ்வொன்றாகக் காணலாம்.
ஆடு மாடு மான்களும்
அரசன் போன்ற யானையும்
பாரில் உள்ள உயிர்களை
நேரில் கண்டு மகிழலாம்.

ராமு: குரங்கை நீயும் கண்டாயோ?
குறும்பு என்ன செய்தது?
மறந்திடாமல் சொல்லிடு
மகிழ்ச்சியோடு கேட்கிறேன்.

மீனு: குரங்கு தாவிக் குதித்தது.
கொம்பில் ஏறி நின்றது.
வாழைப் பழத்தை நீட்டினேன்
வாங்கிக் கொண்டு சென்றது.
கண்டதெல்லாம் சொல்லிடக்
கால நேரம் போதுமோ?
சென்று நீயும் பார்த்திடு
சிந்தை குளிர மகிழலாம்.





கேள்வி நேரம்

கேள்வி கேட்பவர்:

இரத்தின குமாரி

பங்கு பெறுவோர்:

சத்திய நாராயணன் (சதீஷ்), விஜி, ஆரோக்கிய ரவி (ரவி)

இரத்தின குமாரி: ஒரே ஆண்டில், ஒரே மாதத்தில் ஒரே தேதியில் இரண்டு இந்தியப் பெரியார்கள் பிறந்தார்கள். அவர்கள் யார், யார் தெரியுமா?

ரவி: காந்தித் தாத்தாவும், லால்பகதூர் சாஸ்திரியும்.

இரத்தின: இல்லை. இருவரும் ஒரே மாதத்தில் ஒரே தேதியில் – அதாவது அக்டோபர் இரண்டாம் தேதி பிறந்தார்களே தவிர, ஒரே ஆண்டில் பிறக்கவில்லை.

உம்.... தெரியவில்லையா? அவர்களில் ஒருவர் பெரிய கவிஞர்; இன்னொருவர் நேரு மாமாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

விஜி: எனக்குத் தெரியும். ரவீந்திரநாத தாகூர்; இந்திரா காந்தி.

இரத்தின: விஜி சொன்னதில் முதல் பெயர் சரிதான். இரண்டாவது பெயர் தவறு.

சதீஷ்: நேரு மாமாவின் அப்பா பண்டித மோதிலால் நேருதானே?

இரத்தின: அவரேதான்! தாகூரும் பண்டித மோதிலாலும் 6–5–1861ல் பிறந்தார்கள்.

....வேகமாக நடக்கும் போட்டியைப் பார்த்திருப்பீர்கள்.

ரவி: டெலிவிஷனில் அடிக்கடி பார்க்கிறோமே.

இரத்தின: அப்படியா? அப்போட்டியில் முக்கியமான நிபந்தனை எது, தெரியுமா?

சதீஷ்: ஓடக் கூடாது.

இரத்தின: ஓடினால்தான் அது நடைப் போட்டியாக இருக்காதே! நடக்கிறார்களா, ஓடுகிறார்களா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?

ரவி: போட்டியில் கலந்துகொள்பவர்களின் பாதங்களை நான் கவனமாகப் பார்த்திருக்கிறேன். ஏதாவது ஒரு பாதம் எப்போதும் தரையைத் தொட்டுக் கொண்டே இருக்கிறது.

இரத்தின: ரவி சொன்ன மாதிரி, இரண்டு பாதங்களில் ஒன்று எப்போதும் தரையைத் தொட்டுக்-கொண்டே இருக்க வேண்டும். இது தான் முக்கியமான விதி

....சரி, நீங்கள் வானவில் இருக்கும் திசையைப் பார்த்துக் கொண்டிருக்

கும்போது, சூரியன் எந்தப் பக்கத்தில் இருக்கும்?

விஜி: எனக்குப் பின் பக்கத்திலே இருக்கும்.

இரத்தின: கரெக்ட்.... கார்ட்டூன் என்று சொல்கிறார்களே கேலிச் சித்திரம், அது முதல் முதலாக வெளியானது எந்த நாட்டில் என்று தெரியுமா?

ரவி: இங்கிலாந்தில்.

சதீஷ்: அமெரிக்காவில்.

இரத்தின: இரண்டு பேர் சொன்னதும் தவறு. விஜி, உனக்குத் தெரியுமா?

விஜி: நீங்களே சொல்லிவிடுங்கள், அக்கா.

இரத்தின: முதல் முதலாக இத்தாலியில்தான் கேலிச் சித்திரங்களை வெளியிட்டார்கள். அப்புறம் பிரான்ஸ், பிரிட்டன் நாடுகளில் பரவியது. இப்போது எல்லா நாடுகளிலுமே கேலிச் சித்திரங்களைக் காணலாம்.
...ஒரு நாட்டின் பெயரைத் தமிழில் மொழிபெயர்த்தால் 'உதய சூரியன்' என்று வரும். அந்த நாட்டை நாம் எப்படி அழைக்கிறோம்? அந்த நாட்டுக்காரர்கள் எப்படி அழைக்கிறார்கள்?

ரவி: ஜப்பான் என்று நாம் அழைக்கிறோம். நிப்பன் என்று அவர்கள் அழைக்கிறார்கள்.

இரத்தின: அடடே, ரவி ரொம்பச் சரியாகச் சொல்லி விட்டானே!... அடுத்த கேள்வி... நம் நாட்டின் தேசியப் பறவை மயில். இது உங்களுக்குத் தெரியும். தேசிய மிருகம் எது?

விஜி: சிங்கம்.

சதீஷ்: இல்லை. புலிதான்.

இரத்தின: சதீஷ் சொன்னதுதான் சரி. ...நம் முதல் குடியரசுத் தலைவர் யார்? அவர் எத்தனை ஆண்டுகள் குடியரசுத் தலைவராக இருந்தார், தெரியுமா?

விஜி: ராஜேந்திர பிரசாத். அவர் 10 வருடங்கள் குடியரசுத் தலைவராக இருந்தார்.

இரத்தின: இராஜேந்திர பிரசாத் என்று விஜி சொன்னது சரிதான். ஆனால் 10 ஆண்டுகள் என்பது தவறு. அவர் 12 ஆண்டுகள் குடியரசுத் தலைவராக இருந்தார்... அடுத்து குரங்கைப் பற்றிய கேள்வி... குரங்குகளில் பல வகை உண்டு. சில வகைகளின் பெயர்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். சொல்லுங்கள் பார்க்கலாம்.

விஜி: கொரில்லாக் குரங்கு, சிம்பான்ஸிக் குரங்கு, கிப்பன் குரங்கு... அப்புறம் அப்புறம்...

ரவி: நாமக் குரங்கு.

இரத்தின: நீ சொல்ற நாமக் குரங்கும் விஜி சொன்ன நாய்க் குரங்கும் ஒன்றுதான்.

ரவி: அப்படியா, சரி, கருங்குரங்கு, அனுமன் குரங்கு, துதிக்கை மூக்குக் குரங்கு...

சதீஷ்: இன்னும் இருக்குதே! குல்லாக் குரங்கு, சிலந்திக் குரங்கு, அணில் குரங்கு.

இரத்தின: போதும், நிறையச் சொல்லி விட்டீர்கள். இன்னொரு கேள்வி. குழந்தைகளுக்கு எழுதுவோர் சேர்ந்து சென்னையில் ஒரு சங்கம் வைத்திருக்கிறார்களே, அதன் பெயர் தெரியுமா?

விஜி: ஓ, தெரியுமே. குழந்தை எழுத்தாளர் சங்கம். அதன் 32வது ஆண்டு விழாவைக் கூடச் சமீபத்தில்தான் கொண்டாடினார்களே!

இரத்தின: பேஷ், ஆண்டு விழா நடந்ததைக்கூட நினைவில் வைத்திருக்கிறாயே!... புகையிலையில் ஒரு வித நஞ்சு இருக்கிறது. அதன் பெயர் தெரியுமா?

ரவி: நிக்கோடின்.

இரத்தின: கரெக்ட்! அளவுக்கு அதிகமாகப் புகையிலையை உபயோகிப்பவர்களுக்கும், சுருட்டு சிகரெட்டுப் பிடிப்பவர்களுக்கும் புற்று நோய் உண்டாவதற்குக் காரணம், இந்த நஞ்சுதான் என்கிறார்கள். இப்போது நான் ஒரு பொன் மொழி சொல்கிறேன்:
'அகிம்சை கோழையின் ஆயுதமல்ல: அது வீரனின் ஆயுதம்.
இதைச் சொன்னவர் யார்?

விஜி: காந்தித் தாத்தாதானே?

இரத்தின: அகிம்சை என்றவுடனே காந்தித் தாத்தா நினைவு வராமல் இருக்குமா? அதனால்தான் விஜி சரியாகச் சொல்லி விட்டாள்...... UNESCO என்கிறோமே, அந்த நிறுவனத்தின் முழுப் பெயர் என்ன?

சதீஷ்: United Nations Educational, Scientific and Cultural Organisation.

இரத்தின: ரொம்பச் சரி. அனைத்து ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான பண்பாட்டுக் கழகம் என்று தமிழில் கூறலாம்.... ஆமாம், அதன் தலைமை அலுவலகம் எங்கே இருக்கிறது?

சதீஷ்: லண்டனில்.

ரவி: இல்லை, பாரிசில்.

இரத்தினா: ரவி சொன்னதே சரி. அப்பர், சுந்தரர், திருஞான சம்பந்தர், ஆகியமூவரும் சிவபெருமானைப் பற்றிப் பாடிய நூலின் பெயர்என்ன?

சதீஷ்: தேவாரம்.

இரத்தினா: சரியான பதில்.... நம் பாரத நாடு விடுதலை பெற்றபோது மைசூர், பரோடா, திருவாங்கூர், புதுக்கோட்டை என்று பல சுதேச சமஸ்தானங்கள் இருந்தன. அப்படி மொத்தம் எத்தனை சமஸ்தானங்கள் இருந்தன என்று கூற முடியுமா?

ரவி: 552.

இரத்தினா: அடே, சரியாகச் சொல்லி விட்டாயே!... நந்தனாருக்குத் திருநாளைப் போவார் என்று ஒரு பெயர் உண்டு. அந்தப் பெயர் எப்படி வந்தது?

விஜி: எனக்குத் தெரியும். என் தாத்தா சொல்லி யிருக்கிறார். நந்தனாருக்குச் சிதம்பரத்துக்குப் போய் நடராஜரைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாம். ஆனாலும், கோயிலுக்குள்ளே நுழைய விடுவார்களா என்று அவருக்குச் சந்தேகமாம். தினமும் 'நாளைக்குப் போவேன், நாளைக்குப் போவேன்' என்று நம்பிக்கையோடு சொல்லிக் கொண்டிருப்பாராம். அதனால், அவரை எல்லாரும் 'நாளைப் போவார்' என்று அழைத்தார்களாம். அதன் பிறகு 'திருநாளைப் போவார்' ஆகிவிட்டதாம்.

இரத்தினா: அடடே, விஜி அவங்க தாத்தா சொன்னதை நன்றாக நினைவிலே வைத்து அப்படியே சொல்லி விட்டாளே!... உங்களுக்காகத் தமிழிலே 'குழந்தைகள் கலைக் களஞ்சியம்' பத்துத் தொகுதிகளாக வெளி வந்திருக்கிறதே. அதன் தலைமைப் பதிப்பாசிரியர் பெயர் தெரியுமா?

சதீஷ்: ம. ப. பெரியசாமித் தூரன்.

இரத்தினா: சரியான விடை.... ஆங்கிலேயர் ஆட்சியில் முதன் முதலாக மூன்று பல்கலைக் கழகங்கள் மூன்று நகரங்களில் ஏற்படுத்தப் பட்டன. எந்த எந்த நகரங்களில் என்று தெரியுமா?

ரவி: சென்னை, டில்லி, பம்பாய்.

இரத்தினா: ரவி சொன்ன பதிலில் முதலும் கடைசியும் சரியே. ஆனால் நடுவே சொன்னதுதான் தவறு.

சதீஷ்: நான் சரியாகச் சொல்கிறேன். கல்கத்தா.

இரத்தினா: கரெக்ட்! டெலிபோனைக்கண்டு பிடித்த அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் எந்த நாட்டில் பிறந்தவர்?

விஜி: எடின்பரோவில்.

இரத்தினா: எடின்பரோ என்பது அவர் பிறந்த நகரம். ஆனால், எந்த நாட்டில் அவர் பிறந்தார் என்றல்லவா கேட்டேன்? எடின்பரோ எந்த நாட்டின் தலைநகரம்?


விஜி: ஸ்காட்லாந்து நாட்டின் தலைநகரம்.

இரத்தினா: விஜி சொன்ன விடை சரியே... கடைசியாக ஒரு கேள்வி. 4 கிலோ மீட்டர் தூரத்தைக்கடக்க ரவிக்கு ஒரு மணி நேரமாகிறது. ரவி, சதீஷ் இருவரும் சேர்ந்து அதே தூரத்தைக் கடக்க எவ்வளவு நேரமாகும்?

சதீஷ்: அதே நேரம்தான். அதாவது ஒரு மணி!

இரத்தினா: நீ சொன்னது சரியே. ஆனாலும், இரு நண்பர்களும் பேசிக் கொண்டே செல்லும்போது ஒரு மணி ஆனதாகத் தெரியாது. அதை விடக் குறைந்த நேரமே ஆனது போல் தோன்றும். இல்லையா?

மூவரும்: ஆமாம்! ஆமாம்!




இந்த வடிவங்கள் எதைக் குறிக்கின்றன? உங்களுக்கு நன்றாகத் தெரிந்தவைதான். சற்றுக் கூர்ந்து கவனித்தால் புரிந்துவிடும். இதைத் தொடர்ந்து வரும் வடிவத்தை நீங்களே சுலபமாக வரைந்து கொள்ள முடியும்.

விடையை நீங்களே கண்டுபிடிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியே அலாதி தான்!

விடை 80 ம் பக்கம் பார்க்க.

— எம். சிவசுப்பிரமணியன்



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பங்கு கொள்கிறார்கள்.



அக்கா வைத்த ரசம்

அக்கா வைத்த ரசம் இதுவே.
அருமையான ரசம் இதுவே.
எட்டுத் திசையும் கிடைக்காத
இந்த ரசத்தின் பெருமை கேள்.

சுப்புப் பயல்தான் குடித்தானே.
ஐயோ, உப்பு என்றானே!
அம்பிப் பயல்தான் குடித்தானே.
ஐயோ, காரம் என்றானே!

அக்கா வருவதை நான்கண்டு
ஆகா, அருமை ரசம்என்றேன்.
அக்கா முகத்தில் சிரிப்பைப் பார்!
அவர் முகத்திலும்
வெறுப்பைப் பார்!

—கே. கணேஷ் (126)
போரூர்

சித்தி மாறினாள்!

ஒரு நாள் மேரி தன் அண்ணன் டேவிட்டிடம் வந்து, ''அண்ணா, கிறிஸ்துமஸ் நெருங்கி விட்டது. எனக்காக அப்பா எடுத்துவந்த துணிகளை சித்தி விற்றுவிட்டாள். ஏற்கெனவே எனக்கு ஒரு சட்டைதான். இந்த முறையும் எனக்குத் துணி இல்லாததால் என் தோழிகள் கேலி செய்வார்களே!'' என்று அழுதாள்.


அண்ணன் கூலி வேலை செய்து ஒரு வாரத்தில் 15 ரூபாய் சேர்த்தான். அதில் தங்கைக்குத் துணி வாங்க நினைத்தான். தங்கையை அழைத்துச் செல்ல வீட்டிற்குச் சென்றான்.

வீட்டை நெருங்கியதும் அங்கு கூட்டமாக இருந்ததைக் கண்டான். கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளே சென்றான். அவன் சித்தி மாடியிலிருந்து கீழே விழுந்து கிடந்ததைக் கண்டு துடிதுடித்தான்.

உடனே டேவிட் ஓடிச் சென்று டாக்டரை அழைத்து வந்தான். அவர் எழுதிக் கொடுத்த மருந்தை வாங்கக் கடைக்கு ஓடினான். டாக்டருக்கும் மருந்துக்குமே அவன் சேர்த்த பணம் சரியாகி விட்டது. சித்தியின் காலும் சில நாட்களில் குணமாகி விட்டது. டேவிட்டின் செய்கை அறிந்த சித்தியின் மனம் மாறியது.

டேவிட்டையும் மேரியையும் அணைத்துக்கொண்டாள். அன்று முதல் அவர்களைத் தன் சொந்தக் குழந்தைகளைப் போலவே அன்பாக நடத்தினாள்.

—சு. கிருஷ்ண ராஜ் (770)
சங்கரன்கோவில்



பட் பட் பட்டாபி

பட்பட் பட்டாபி
பள்ளியில் விடுவான் கொட்டாவி
பட்டாபி விடும் காத்தாடி
காதை அறுக்கும் கூத்தாடி!

—இரா. விஷ்ணுப்ரியா
வேலூர் (441)



ரோஜாவின் ராஜா

நேரு எங்கள் மாமாவாம்
 ரோஜாவின் ராஜாவாம்.
இந்திராவின் தந்தையாம்,
 எங்களுக்கு மாமாவாம்.

காந்தித் தாத்தா சீடராம்,
 கண்ணியமான மனிதராம்.
இந்தியாவின் பெருமையை
 என்றும் வளர்த்த தலைவராம்.

—டி. வெங்கடகிருஷ்ணன் (73)
செங்கம்

வாசலில் கண்ட வாசகம்

ஒரு மாதா கோயிலின் வாசலில் எழுதப்பட்டிருந்த வாசகம் என் கவனத்தை மிகவும் கவர்ந்தது. அது இதுதான்:
 'சிலருக்கு மூக்கு உடைவதற்கு அவர்களின் நாக்குத்தான் காரணமாகிறது.'

—சி. ஷீத்தல் (69)
செம்பூர், பம்பாய்

நோய் வராத காரணம்

அவர் ஒரு பெரிய பணக்காரர். அவருக்குப் பத்துப் பிள்ளைகள். அவர் வீட்டில் தினமும் வகை வகையாகச் சாப்பிடுவார்கள். ஆனால், தினமும் அவர்களின் வீட்டுக்கு வந்து வேலை பார்க்கும் ஒரு சிறுவனுக்கு வெறும் முருங்கைக் கீரையை மட்டுமே கொடுத்தனுப்புவார்கள்.

ஒரு சமயம், அந்தக் கிராமத்தில் ஒரு கொடிய நோய் வந்தது. பணக்காரர் வீட்டிலிருந்த அனைவரையும் அந்த நோய் பற்றிக் கொண்டது. ஆனால் வேலைக்காரச் சிறுவனுக்கு மட்டும் வரவில்லை.

டாக்டரிடம் இதைப்பற்றிச் சொன்ன போது, ''இவன் தினமும் என்ன சாப்பிடுகிறான்?'' என்று கேட்டார். ''தினமும் முருங்கைக் கீரை சாப்பிடுகிறான்'' என்றார் பணக்காரர்.

''அதனால்தான் இவனுக்கு நோய் வரவில்லை'' என்றார் டாக்டர்.

—பா. ராமசாமி (1614)
திருநெல்வேலி-6



ஏது இனி வாலாட்டம்?

எங்கள் வீட்டில் சுண்டெலிகள்
 எண்ணிக்கையோ ஏராளம்
தங்க மான பொருள்களெல்லாம்
 கடிப்பதிலே தாராளம்!

தினம் தினமும் அவற்றுடனே
 தீராத போராட்டம்.
தீனியிலே மருந்து வைத்தேன்;
 ஏது இனி வாலாட்டம்?

—மு. செந்தில்வேலன் (141)
தேனி

மூன்று எழுத்துக் கொண்ட சொல்

மு, ள, ல — இந்த மூன்று தமிழ் எழுத்துக்களையும் கொண்ட ஒரே சொல் — தொழிலாளி.

—என். மோகனசுந்தரம் (46)
பொள்ளாச்சி



நமது பாரதி

நமது பாரதி — தமிழ்
நாட்டு பாரதி!
அமுதப் பாடலால் — உள்ளம்
அள்ளும் பாரதி!

நாடு விடுதலை — பெற
நல்ல வழிகளைப்
பாடல் மூலமே — பரவச்
செய்த பாரதி!

கண்ணன், முருகனை — அன்னை
காளி மாரியை
என்றும் வணங்கியே — புகழ்
எடுத்த பாரதி!

—த. அருள்சிவபாலன் (47)
செங்கல்பட்டு

பழைய விடுகதைகள்

1. நான்கு எழுத்துக்காரன்: நடு நரப்புக்காரன்: நாக்கின் தோழன் —அவன் யார்?
2. நாக்கில் கயிற்றுடன் தூக்கில் தொங்குவான் — யார் அவன்?
3. எழுத்து இல்லாத வரி: எழுந்து ஓடும் வரி — அது என்ன!

—வி. விசாலாட்சி (665)
சென்னை-28

விடை: (1) புகையிலை; (2) கோயில் மணி: (3) வரிக் குதிரை

புதிய விடுகதைகள்

1. பத்துக் கால்கள் உடையது: பக்கவாட்டில் நடப்பது-எது?

2. உங்கள் வீட்டில் இருந்தபடியே ஒளியும் பார்க்கலாம்; ஓசையும் கேட்கலாம் —அது என்ன?

3. ஒரு காரில் செல்வோர் சிலர்: இரு காரில் செல்வோர் பலர்


—ஏ. ஆர். ஆனந்த் (421) விருதுநகர்

விடைகள்: 1. நண்டு: 2. டெலிவிஷன்: 3. சர்க்கார் கார் (பஸ்.)

வேண்டாத விடைகள்!

எந்த நாட்டை மதிப்போடு அழைக்கிறோம்?
'ஸ்ரீ'லங்கா.
சொத்து உள்ள நாடு எது?
'ஆஸ்தி'ரேலியா.
10 மார்க் வாங்கும் நாடு எது?
'டென்' மார்க்.
நெல் அதிகம் உள்ள மாவட்டம் எது?
திரு'நெல்' வேலி.
நெய் அதிகம் உள்ள ஊர் எது?
'நெய்' வேலி.

—ஆர். சுந்தர் (644)
விக்கிரபாண்டியம்



உதடு படாக் குறள்கள்!

கீழே உள்ள மூன்று குறள்களையும் படிக்கும்போது இரண்டு உதடுகளும் ஒன்றையொன்று தொடாது. கீழ் உதடு, மேல் பல் வரிசையில் படாது. வாய் திறந்தபடி இருக்கும்.

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை (310)

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் (341)

எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல் (489)

—வே. செந்தில்குமார்
திருத்தணி (65)



தொந்தி, முந்தி, நந்தி

விநாயகர் வயிறு தொந்தி — நீங்கள்
விரைவீர் ரயிலுக்கு முந்தி
சிவனுர் வாகனம் நந்தி — என்றும்
செல்லாதீர் விருந்துக்குப் பிந்தி
தெருக்கள் சேருமிடம் சந்தி — நன்ருய்த்
தெரியாததை மீண்டும் சிந்தி
அவசரத்துக்குஅடிக்கலாம்தந்தி-ஆதவன்
அடையும் நேரம் அந்தி
பாண்டவர் அன்னை குந்தி — பெண்
குரங்கின் பெயரோ மந்தி.

—எம். எஸ். கோமதி (37)
குமாரபுரம், நள்ளி அஞ்சல்

பெயர்ப் பொருத்தம்

ஒருவர்: அம்மா,உங்க மகன் ஆனந்த ராஜ் என்ன செய்கிருன்?
அம்மா: அழுது கொண்டே இருக்கிருன்.

—டி. எஸ். சிவசங்கர் (1209)
இராஜபாளையம்

நாடோடிப் பாடல்

மாமன் பெருமை

அந்தி ரயிலேறி
அறந்தாங்கி போயிறங்கி
காலே ரயிலேறி
கல்கத்தா போயிறங்கி
மாலே ரயிலேறி
மதராசு போயிறங்கி
கோர்ட்டுத் திறந்து
குருச்சி மேல் உட்கார்ந்து
ஜட்ஜுடன் வாதாடும்
சமர்த்தரோ உங்களம்மான்!

—டி. உமா (2117)
கணபதி அக்ரகாரம்

போலீஸ்காரர் பிடிக்காதது ஏன்?

அன்று அமாவாசை. என் அப்பாவுடன்காரில் விளக்கு இல்லாமல் சென்று கொண்டிருந்தேன். தெருக்களிலும் இரு புறமும் விளக்குகள் எரியவில்லே. திடுமென ஒரு போலீஸ்காரர் எங்கள் காரை நிறுத்திஞர். ஆனுல், அவர் எங்களேப் பிடிக்கவில்லே. ஒரு நிமிஷத்தில் தொடர்ந்து காரில் சென்ருேம். ஏன் எங்களேப் போலீஸ்காரர் பிடிக்கவில்லே?

ஒரு நிமிஷம் யோசித்துப் பாருங்கள். பதில் தெரியவில்லேயானுல், மேலே படியுங்கள்.

அன்று அமாவாசைதான். ஆனுல், இரவு நேரமல்ல: பகல் நேரம்தான். பகலில் விளக்குகள் எதற்கு? எங்கள் காரை நிறுத்தியவர் டிராபிக் போலீஸ்காரர்தான். போக்கு வரத்துக்காக நிறுத்திஞர்!

—வி. ஜெயலட்சுமி(407)
சென்னே-49



பேசாத காரணம்!

டெலிபோன் மணி அடிக்கிறது. டாக்டர் போனே எடுக்கிருர். ஒரு பெண்ணின் குரல் கேட்கிறது.

''டாக்டர், சீக்கிரம் வாங்க. என் மகன் எது கேட்டாலும் பதில் சொல்லவில்லே.''

''இதோ ஐந்து நிமிஷத்தில் வருகிறேன். சரி, அவன் பெயர் என்ன? என்ன வயது?''

''சங்கர். வயது 10''

''இப்போது சங்கர் என்ன பண்ணுகிருன்?''

'' 'கோகுலம்' படிக்கிருன்.''

''அப்படியானுல் நான் வரவேண்டிய அவசியம் இல்லே. 'கோகுலம்' படிக்கும் சிறுவனின் கவனம் வேறு எதிலும் செல்லுமா? இப்போது அவன் கையில் உள்ள கோகுலத்தை வாங்குங்கள். உடனே பேசுவான்.''

—என். கார்த்திகேயன் (746)
புது டில்லி—5

எதியோப்பிய தேசத்து குட்டிக் கதைகள்

'தேவி'


யார் குற்றம்?

ஒரு காட்டில் சிங்கம், புலி, கழுதைப் புலி, கழுதை நான்கும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. அந்தக் காட்டிலே நீண்ட நாட்களாக மழை பெய்ய வில்லை. ஒரு நாள் அவை மழை பெய் யாமல் போனது குறித்து வருந்தின. நம்மில் யாரோ பாவம் செய்துள் ளோம். அதுதான் மழை பெய்ய வில்லை'' என்று நினைத்தன.

சிங்கம், ''நான் ஒரு பசுவைக்-கொன்றேன். நான் ஒரு படுபாவி!'' என்றது.

''இது ஒன்றும் பாவமான செயல் அல்ல'' என்றன புலியும், கழுதையும், கழுதைப் புலியும்.

''நான் ஒரு ஆட்டைக் கொன்றேன். நான்தான் பாவம் செய்தவன்'' என் றது புலி.



''இது ஒரு பெரிய பாவமா? இல்லை, இல்லை.'' என்றன மற்ற மிருகங்கள்.

''நான் ஒரு கோழிக் குஞ்சைக் கொன்றுவிட்டேன். அதனால்தான் மழை பெய்யவில்லையோ!'' என்றது கழுதைப் புலி.

''அது காரணமாக இருக்க முடி யாது'' என்று மற்றவை கூறின.

கடைசியாக கழுதை, ''நான் ஒரு நாள் என் எஜமானனுடன் செல்லும் போது, வழியில் வளர்ந்திருந்த புல் லைக் கடித்துத் தின்றேன். அதனால் தான் மழை பெய்யவில்லையோ! நான் ஒரு படுபாவி'' என்றது.


உடனே சிங்கமும், புலியும், கழு தைப் புலியும், ''ஆம், நீ புல்லைத் தின்றதுதான் பாவம். அதனால்தான் மழை பெய்யவில்லை'' என்று கூறிக் கழுதை மேல் பாய்ந்து அதைக் கொன்று விட்டன!

புலியை வென்றவன்!

கிராமத்தில் இருந்து பன்னிரண்டு பேர் புறப்பட்டார்கள். சிறிது தூரத் தில் உள்ள பட்டணம் சந்தைக்குப் போனார்கள். காட்டைக் கடந்து ஊருக்குத் திரும்பி வரும்போது, எல் லோரும் சரியாக வந்து விட்டோமா என்று அவர்களில் ஒருவன் எண்ணிப் பார்த்தான். எண்ணும்போது அவன் தன்னை விட்டுவிட்டு எண்ணியதால், 11 பேர்தான் இருந்தார்கள். ''ஐயோ ஒருவனைக் காணோமே!'' என்று கதறி னான். உடனே இன்னொருவன் எண் ணினான். அவனும் தன்னை விட்டு விட்டு எண்ணியதால் ஒருவன் குறைந் தான்.

''ஐயோ! அவனைப் புலி பிடித்து விட்டதே!'' என்றான் ஒருவன். மற் றொருவன், ''ஆகா! அது எப்படிப் பிடித்தது தெரியுமா?'' என்றான். வேறொருவன், ''அடடா! எவ்வளவு தீரமாய் அவன் புலியை எதிர்த்தான், தெரியுமா?'' என்றான். இன்னொருவன், ''செத்தாலும் வீரச் சாவு அவனுக்கு'' என்றான். அடுத்தவன், ''ஐயோ, அவன் மனைவி வருந்துவாளே!'' என்றான். ''ஐயோ, அவன் மிகவும் நல்லவ னாயிற்றே!'' என்றான் இன்னொருவன்.

ஊருக்கு எல்லோரும் அழுது-கொண்டே சென்றார்கள். ஊரார் கூடி, ''ஏன் அழுகிறீர்கள்!'' என்று கேட்டனர். ஒவ்வொருவரும் தலையில் இருந்த மூட்டையைக் கீழே வைத்து விட்டு, ''நாங்கள் 12 பேர் சந் தைக்குப் போனோம். திரும்பி வரும் போது எங்களில் ஒருவனைப் புலி அடித்துக் கொன்று விட்டது'' என்று அழுது கொண்டே கூறினார்கள். அவன் புலியை எப்படி வீரமாக எதிர்த்தான் என்பதையும் கூறினார்கள். ஊர்-மக்கள் அதைக் கேட்டு மிகவும் வருந்தினார்கள்.



அப்போது ஒரு சிறுமி, "இதோ இவர்கள் இறக்கி வைத்த 12 மூட்டைகளும் இருக்கின்றனவே!" என்று தன் அம்மாவிடம் சொன்னாள். உடனே அந்தச் சிறுமியின் அம்மா, "ஆளுக்கு ஒரு மூட்டைதானே கொண்டு வந்தீர்கள்? இப்பொழுது ஒவ்வொருவரும் அவரவர் மூட்டையை எடுத்துக் கொள்ளுங்கள்." என்றாள். அவ்வாறே அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். ஒரு மூட்டைகூட மிஞ்சவில்லை. அதைப் பார்த்த ஊர்த் தலைவர், "12 பேருக்கும் 12 மூட்டைகள்! அப்படியென்றால் எல்லாரும் இருக்கிறார்கள்! யாரும் குறையவில்லை" என்று மகிழ்ச்சியோடு கூறினார்.

"ஆகா! புலியை எதிர்த்து அவன் உயிரோடு வந்து விட்டானே! என்னே அவன் தீரம்! என்னே அவன் வீரம்!" என்று வியந்தான், அவர்களில் ஒருவன்.

"அடடா! அவன் வீரமே வீரம்!" என்றனர் மற்றவர்கள். இதைக்கொண்டாட ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடினர்: ஆடிப் பாடி ஆனந்தமாய்க் கழித்தனர்.

ஓநாயின் சபதம்

ஓநாயின் குட்டி ஒன்று காட்டிலே அங்குமிங்குமாக ஓடி விளையாடியது. வெகு நேரம் விளையாடியதால் களைத்துப்போய், ஒரு மரத்தடியில் அயர்ந்து படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது. அப்போது அந்த வழியாக வந்தது ஒரு யானைக் கூட்டம். அக்கூட்டத்திலிருந்த யானைகள், 'தடதட' என்று வேகமாகச் செல்லும்போது, வழியில் படுத்திருந்த ஓநாய்க் குட்டியை மிதித்துக்கொண்டு சென்றன.

உரலைப் போன்ற கால்களும், மலையைப் போன்ற உடல்களும் உடைய யானைகள் மிதித்ததால், ஓநாய்க் குட்டி அங்கேயே நசுங்கிச் செத்துப்போனது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு காக்கை பறந்து போய் அப்பா ஓநாயிடம் விஷயத்தைச் சொன்னது.

அதைக் கேட்ட ஓநாய் பதை பதைத்தது. "எங்கே, அந்த இடத்தைக் காட்டு" என்று காக்கையிடம் கேட்டது. காக்கை முன்னால் பறந்து செல்ல, ஓநாய் பின்தொடர்ந்தது. ஒரு மரத்தடியில் தன் குட்டி செத்துக் கிடந்ததைக் கண்டதும், 'ஓ'வெனக் கதறி அழுதது.

பிறகு காக்கையைப் பார்த்து, "என் குட்டியை யானைகள் கொன்று விட்டதாகவா கூறுகிறாய்? இருக்காது. நீ சரியாகப் பார்த்திருக்க மாட்டாய். என் குட்டியை யானைகள் ஏன் கொல்ல வேண்டும்? என்னை விரோதியாக நினைக்கும் ஆடுகள்தான் என் குட்டியைக் கொம்புகளால் முட்டி முட்டிக் கொன்றிருக்க வேண்டும்... அதுதான் உண்மை... என் குட்டியைக்



கொன்ற ஆடுகளை நான் சும்மா விடப் போவதில்லை. இன்று இருட்டுவதற்குள் எத்தனை ஆடுகளைப் பழிவாங்குகிறேன் பார்" என்று கூறி ஆவேசமாகக் கிளம்பியது.

யானைகளிடம் நெருங்கக் கூட முடியாத ஓநாய், பாவம், ஆடுகளைப் பழிவாங்க நினைக்கிறது!


நெருப்பும் வாசனையும்

நல்ல குளிர் காலம். அந்திபட்டால் யாருமே வெளியில் தலை காட்ட அஞ்சுவர். போர்வையில்லாமல் இருக்கவோ, படுக்கவோ முடியாது. அந்தக் குளிர் காலத்தில் அபிசீனிய தேசத்துப் (1923க்குப் பிறகு இதன் பெயர் எத்தியோப்பியா) பிரபு ஒருவர் ஒரு பந்தயம் வைத்தார்.

''இந்தக் குளிர் காலத்தில் இரவு நேரம் முழுவதும் ஊரை ஒட்டி இருக்கும் மலை மேல் இடுப்பிலே ஒரு துணியுடன் நிற்க வேண்டும். இரவு முழுவதும் அஞ்சாமல் நிற்பவனுக்கு ஆயிரம் காசுகள் பரிசளிப்பேன்'' என்றார்.

ஒருவன் மலைமேல் ஏறி இரவு முழுதும் நடுக்கும் குளிரில் நின்றான். விடிந்ததும் அவனுக்குப் பரிசளிப்பார் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் அவரோ, ''நீ குளிரில் நடுங்காமல் நின்றது எதனால் என்று எனக்குத் தெரியும், மலையடிவாரத்தில் சிலர் தீயை மூட்டிக் குளிர் காய்ந்து கொண்டிருந்தார்களல்லவா? அந்தச் சூட்டினால்தான் குளிர் உன்னை ஒன்றும் செய்யவில்லை. எனவே உனக்குப் பரிசு இல்லை'' என்று கூறிவிட்டார். பாவம், அவன் ஏமாந்து போனான்.


இதை அறிந்த அவனுடைய நண்பன் பிரபுவுக்குப் புத்தி புகட்ட நினைத்தான். ''பிரபு அவர்களே! என் வீட்டில் விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். தாங்கள் அவசியம் வரவேண்டும்'' என்றான். பிரபு வந்தார்.



விருந்தில் உணவு பரிமாறப்படவில்லை. அதற்குப் பதிலாக வாசனையை மட்டும் அவருடைய மூக்குக்குள் புகும்படி செய்தான்.

''விருந்துக்கு அழைத்து விட்டு வாசனையை மட்டும் காட்டுகிறாயே!'' என்று கோபமாகக் கேட்டார் பிரபு.

''தூரத்தில் எரிந்த நெருப்பு குளிரைப் போக்கும் என்றால், இந்த வாசனையும் உங்கள் வயிற்றுப் பசியைப் போக்கி இருக்குமே!'' என்று கூறி அவரை மடக்கினான் அந்த நண்பன்.



கேள்விகள் இரண்டு— விடை ஒன்று!

மா. தமிழ்வாணன்

(1) வெந்த கறி மணப்பதேன்?
வீரர் படை வீழ்வதேன்?

(2) நாய் ஓடுவது எதனாலே?
நாக்கு இனிப்பதும் அதனாலே?

(3) பெயர்ச் சொல் வீட்டை மூடும்;
வினைச்சொல் விரைவைக் காட்டும்.

(4) குப்பை சேர்வது எதனாலே?
குழந்தை அழுவதும் அதனாலே?

(5) காடு குறைவதேன்?
கால்வாய் நீள்வதேன்?

(6) பந்து எழும்புவதேன்?
பையன் அழுவதேன்?

(7) கண்ணீர் வடிப்பதேன்?
தண்ணீர் இரைப்பதேன்?

(8) பாம்பு தலை தூக்குவதேன்?
நாம் காமிரா முன் நிற்பதேன்?

விடைகள்

(1) பெருங்காயத்தால் (2) கல்கண்டால் (3) ஓடு (4) எடுப்பாரற்று (5) வெட்டுவதால் (6) அடிப்பதால் (7) கவலையினால் (8) படம் எடுப்பதால்

இருண்ட குகையில் இரண்டு சிறுவர்கள்

• நெடுங்கதை •

பூதலூர் முத்து

பாபு வேக வேகமாக ஒரு துண்டுத் தாளில் நான்கைந்து வரிகளைக் கிறுக்கி எடுத்துக் கொண்டு கூடத்துக்கு வந்தான்.

தோட்டத்தில் அவனுடைய அம்மா மீனாட்சியும் தங்கை அமுதாவும் பூச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்கள். வீட்டில் உதவிக்கு ஆள் இருந்தாலும், அந்த வேலையை மட்டும் அவர்கள்தான் செய்வார்கள். செழித்து வளர்ந்திருக்கிற செடிகளுக்குக் குளுகுளுவென்று நீர் விட்டு, அவை பூக்களாகப் பூரிப்பதைப் பார்க்கும்போது அவர்களுக்கு அலாதியான மகிழ்ச்சி ஏற்படும்.

பாபு வேலைக்காரப் பையன் முருகனைக் கூப்பிட்டான். ''முருகா! இப்போது நமக்கு வீட்டில் வேலை இல்லை. நாம் ஒரு காரியம் செய்யலாமா?'' என்றான்.

''என்ன செய்யலாம்? நீயே சொல்'' என்றான் முருகன்.

''நான் சொல்கிறேன். செய்யவேண்டியது நீதான். காரணம், உனக்குத்தான் மரம் ஏறத் தெரியும்.''

''மரம் குட்டையா உயரமா? போக வேண்டிய இடம் பக்கமா, தூரமா?'' என்றெல்லாம் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தான் முருகன்.

''முருகா. நீ மரம் ஏறுவதில் கில்லாடி என்பது எனக்குத் தெரியும். அதற்காக இப்படியா கேள்வி கேட்பார்கள்? நாம் வெண்ணாற்றங்கரை ஓரமாக இருக்கும் நாவல் மரத்துக்குப் போகிறோம். நீ மரத்தில் ஏறிப் பழங்களைப் பறிக்கப் போகிறாய். மரத்தில் ஏறி, 'கட்ட பழம் வேண்டுமா, கடாத பழம் வேண்டுமா?' என்று கேள்வி கேட்கத் துவங்கிவிடாதே. பழத்தை ஒழுங்காகப் பறித்துப் போட வேண்டும். முதலில் இரண்டு பழத்தைப் பறித்து வாயில் போட்டுக்கொள். அப்புறம் கேள்வி கேட்க மாட்டாய்'' என்றான் பாபு.

''உன்னுடைய அறிவிப்புகள் — திட்டமெல்லாம் இருக்கட்டும். நாவல் பழம் பறிக்க, மரம் ஏற வெண்ணாற்றங் கரைக்குப் போகிறோம் என்றால் அம்மா விடமாட்டார்களே!'' என்றான் முருகன்.

''அம்மா விடமாட்டார்கள். ஆனால் பொய்யும் சொல்லக் கூடாது. என்ன செய்யலாம் என்று யோசித்தேன். இந்தத் துண்டுத்தாள் திட்டம் உருவானது.

'அம்மா, நானும் முருகனும் வெண்ணாற்றங் கரைக்கு நாவல் பழம் பறிக்கப் போகிறோம். எங்களைத் திட்டாதே. சீக்கிரமே வந்துவிடுகிறோம், பழத்தோடு. அமுதா! இத்தனை நாள் நாவல் பழம், நாவல் பழம் என்று அரித்தாய் அல்லவா? உனக்காகவும் சேர்த்துத்தான் நாங்கள் நாவல் பழம் பறிக்கப் போகிறோம்' என்று இதில் எழுதியிருக்கிறேன். கூண்டில் இருக்கிற என் கிளியிடம் இதைக் கொடுத்து, 'ரங்கா, அம்மாவிடம் இதைக் கொடுத்து விடு' என்று சொல்லிவிட்டு வந்துவிடுவேன்'' என்றான் பாபு.

பாதி வழியில் நடந்து கொண்டிருக்கும்போதே, ''சரி... அம்மாவாவது பொறுத்துக் கொள்வார்கள். உன்னுடைய அப்பாவுக்குத் தெரிந்தால் தோலை உரித்து விடுவாரே!'' என்றான் முருகன்.

''ஆமாம், தோலை உரிக்கக் கூடியவர்தான். ஆனால், ஒரு வாரம் ஆகும். அவர்தான் வெளியூர் போயிருக்கிறாரே!'' என்றான் பாபு.

''பாபு, என் வேலைக்கும் ஆபத்து உண்டாக்கி விடாதே! 'அவன்தான் சொன்னான், உனக்குப் புத்தி எங்கேடா போயிற்று, வேலைக்காரப்பயலே?' என்று கேட்டால் நான் என்ன பதில் சொல்ல முடியும்? இரண்டு நாளில் அன்னம்மாக் கிழவி கூடையில் விற்கக் கொண்டு வரும்போது நான் நம் வீட்டுக்குக் கூட்டி வருகிறேன்'' என்றான் முருகன்.

''முருகா, என்னையும் அமுதாவையும் நீ இப்படி ஏமாற்றக் கூடாது. அப்புறம் நட்புக்கு என்னடா இருக்கிறது? நீ இந்த நாவல் பழத்தைப் பறித்துத் தரக் கூடாதா? நீ பறித்துத் தராவிட்டால் அப்புறம் உன்னோடு பேச மாட்டேன்'' என்றான் பாபு.

அதற்கு மேல் முருகனால் தட்ட முடியவில்லை. வெண்ணாற்றங்கரையை நோக்கிப் பாபுவுடன் சென்றான். சற்று நேரத்தில் முருகனுடைய நாய் மணி எப்படியோ மோப்பம் பிடித்து



ஓடிவந்து அவர்களைப் பின் தொடர்ந்தது.

'பல தடவை மரம் ஏறியிருக்கிறோம்' என்ற தன்னம்பிக்கையில் தரையில் நிற்பதுபோல் கிளையில் நின்று கொண்டு இரண்டு கைகளாலும் பழங்களைப் பறித்துப் போட்டுக் கொண்டிருந்தான் முருகன். அப்போது அவன் சற்றும் எதிர்பாராவண்ணம் ஒரு பெரும் காற்று அடித்தது. கிளைகளைக் கைகளால் பற்றிக் கொள்ள முயன்றான். அதற்குள் அவனை நிலைகுலையச் செய்து கீழே தள்ளிவிட்டது, அக் காற்று!

* * *

ஒரு மாதத்துக்குப் பிறகு வலது பகுதியில் ஓர் ஊன்றுகோலை வைத்துக் கொண்டு தாங்கித் தாங்கி நடந்தவாறு வந்து நின்றான் முருகன். அவனுடைய வலது காலில் ஏற்பட்ட முறிவு நிரந்தர ஊனத்தை அவனுக்கு வழங்கிவிட்டது.

முருகன் தவறிக் கீழே விழுந்ததும், கதறித் துடித்ததும், தான் நிலைகுலைந்து போய் நின்று கண்ணீர் வடித்ததும் பாபுவுக்கு நினைவு வந்தன.

கீழே விழுந்து படுகாயமடைந்து கிடந்த முருகனுக்குத் துணையாக நின்று ஆறுதல் சொல்வதா, வீட்டுக்குப் போய் யாரையாவது கூட்டிக் கொண்டு வருவதா என்று குழம்பிக் கொண்டு நின்றபோது, முருகனுடைய நாய் மணி, முருகனைச் சுற்றிச் சுற்றி வந்து குரைத்துத் தன்னுடைய அதிர்ச்சியை வெளியிட்டது. அவனுக்கு அருகில் வந்து நின்று துயரத்தோடு அவனைப் பார்த்தது. 'வீட்டுக்குப் போ' என்று கையால் அவன் சைகை காட்டியதும் மறு கணம் மாங்குடியை நோக்கி ஓடியது.

மாடுகளைத் தொழுவத்தில் கட்டிக் கொண்டிருந்த முருகனின் தந்தை



சின்னுவின் வேட்டியை மணி கவ்விப் பிடித்து இழுத்தது. புத்தி சாதுரியம் மிகுந்த மணி காரணமில்லாமல் தம்மை இழுக்காது என்று உணர்ந்து கொண்ட அவர், உடனே அதன் பின்னால் ஓடிவந்தார்.

சற்று நேரத்தில் பாபுவின் தாய் மீனாட்சியம்மாளுக்கும் செய்தி தெரிந்தது. மனம் கலங்கி, ஒரு சின்ன வண்டியைக் கட்டிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்து விட்டாள். அந்த வண்டியில் முருகனைத் தூக்கிப் போட்டுக் கொண்டு பக்கத்தில் இருந்த புதுக்குடி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். மீனாட்சியம்மாள் வேண்டிய உதவிகளையெல்லாம் செய்தாள். இருந்தும் முருகனின் வலது காலில் முழங்காலுக்குக் கீழே எடுத்துவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது!

முருகனுடைய ஏழைத் தந்தை சின்னுவுடைய கண்கள் அழுது அழுது கண்ணீரின்றி வற்றிவிட்டன. அவனுடைய தாய் அந்தக் கவலையிலேயே காய்ச்சல் வந்து படுத்து விட்டாள்.

அதைவிட இன்னோர் அதிர்ச்சி அவர்களுக்கு ஏற்பட்டது.

ஒரு வாரத்தில் ஊரிலிருந்து திரும்பிய பாபுவின் தந்தையான மிராசுதார் வேலாயுதம், விஷயத்தைக் கேள்விப்பட்டு பாபுவை அழைத்தார். பிரம்பை எடுத்து அவனை அடி அடி என்று அடித்தார். கதறிக் கொண்டே உடம்பு துடிக்கத் தோட்டத்துப் பக்கம் ஓடினான் அவன்.

ஒரு மாதத்திற்குப் பிறகு அந்தச் சின்னஞ் சிறு வயதில் ஊன்று கோலுடன் வந்து நின்ற முருகனைப் பார்த்த வேலாயுதம், ஆறுதலாக ஒரு வார்த்தைகூடக் கூறாமல், ''நொண்டிப் பயலுக்கு இங்கே என்னடா வேலை? சோற்றுக்குத் தெண்டமாக உன்னை நான் வைத்துக்கொள்ள விரும்பவில்லை'' என்று மனம் போனபடி பேசினார்.

இரக்கமே இல்லாமல் வாழ்வதும் வெறுப்புக் காட்டுவதும் அவர் உடம்போடு ஒட்டியவை. அப்படி ஓர் அதிசயப் பிறவி அவர்!

முருகனுக்கு மனம் பொறுக்கவில்லை. சின்னுவும் அவர் மனைவியும் மிகவும் துடித்துப் போய் விட்டனர்.

'வேலை தரவேண்டாம். ஆறுதலாக ஒரு வார்த்தைகூடவா சொல்லக் கூடாது?' என்பதுதான் அவர்களுடைய வேதனை.

பாபுவும் அவனுடைய தாய் மீனாட்சியம்மாளும் முருகனுடைய வீட்டுக்கு வந்தார்கள். முருகனுக்கும் அவனுடைய பெற்றோருக்கும் ஆறுதல் கூறினார்கள்.

இருந்தாலும் முருகனுடைய மனம் ஆறுதல் பெறவில்லை. அவன் மீதே இப்போது அவனுக்கு வெறுப்பாக இருந்தது. தன்மீது உயிரையே வைத்திருக்கும் தாய் தந்தையிடம்கூடச் சொல்லாமல் வீட்டை விட்டே புறப்பட்டுவிட்டான். அவன் அன்போடு வளர்த்த மணியும் அவனோடு புறப்பட்டுவிட்டது.

வீட்டை விட்டுப் புறப்படுவதற்கு

முதல் நாள் பாபு வந்து அவனைப் பார்த்தான்.

''முருகா, என்னால்தானே உனக்கு இவ்வளவு தொல்லை? கால் போயிற்று. வேலையும் போயிற்று.... சொல்லால் சூடு வேறு... என்னை மன்னிப்பாயா முருகா?'' என்றான் பாபு.

''பாபு... உன்மீது எனக்கு எந்த வருத்தமும் இல்லை.என் உள்ளம் ஏனோ துன்பப் படுகிறது. ஆனால், அதற்கு நீ காரணம் இல்லை'' என்று சொன்னான் முருகன்.

''முருகா, உனக்கு எந்த உதவி வேண்டுமானாலும் கேள். என்னால் இயன்ற அளவு செய்கிறேன். அம்மாவும் உன் நினைவாகவே இருக்கிறார்கள். அமுதா உன்னைப் பற்றிக் கேட்காத நேரமே இல்லை. அப்பாவை மீறி நாங்கள் எதுவும் செய்ய இயலாமல் இருக்கிறோம். அவர் குணம்தான் உனக்குத் தெரியுமே!'' என்றான் பாபு.

''உங்களுக்கெல்லாம் மிகுந்த நன்றி பாபு....'' என்று சொன்ன முருகனுடைய கண்களிலிருந்து அருவி போல் கண்ணீர் கொட்டியது.

* * *

தஞ்சாவூரில் அவனுடைய சித்தப்பா பெட்டிக் கடை ஒன்று வைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார். வசதியில்லாவிட்டாலும் அன்பும் இரக்க குணமும் உள்ளவர் அவர். அங்கு சென்றால் தனக்கு நிம்மதியாக இருக்கும் என்று நினைத்தான் முருகன். கொஞ்ச நாள் கழித்துத் தன்னுடைய அப்பாவையும் அம்மாவையும் பாபுவையும் சந்திக்கலாம் என்று முடிவு செய்தான் அவன்.

மாலை நேரம். மெதுவாக நடந்து ஊரை விட்டுத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தான் முருகன். யாரும் தன்னைச் சந்தேகக் கண்ணோடு பார்த்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தான் அவன்.

மாங்குடியின் தெற்குப் பகுதியில் வெண்ணாறு ஓடுகிறது. வடக்குப் பகுதியில் ஊரை விட்டுத் தாண்டி மேற்குத் திசையில் திரும்பினால், அந்தக் காடு. காட்டைத் தாண்டி மலைப் பகுதிகள். அந்தப் பகுதிகளில் ஆள் நடமாட்டமே இருக்காது. வெளியூர் செல்பவர்கள் வடக்குத் திசையில் நேராகச் செல்லும் வண்டிப் பாதை வழியாகச் செல்வார்கள். செல்பவர்கள் இருட்டுவதற்கு முன்பே நான்கைந்து பேராகத் தான் அந்தப் பாதையில் செல்வார்கள். அவ்வளவு அச்சம்நிறைந்த பாதை அது!

பாதை இருந்த இடமே அப்படி என்றால் பாதை இல்லாத மேற்குப் பகுதிபற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

'இன்று மேற்குத் திசையில்தான் நடந்து பார்க்கலாமே!' என்று எண்ணிய முருகன், அசாத்தியத் துணிச்சலோடு அந்தத் திசையில் நடக்கவும் தொடங்கி விட்டான்.


எங்கும் புதர்களும் முள் மரங்களும் பாறைகளும் கற்களும் காட்சியளித்தன. நடந்து செல்வது மிகவும் கடினமாக இருந்தது.



இருள் கவ்விக் கொண்டு வந்தது. மணியுடன் முருகன் தாங்கித் தாங்கி நடந்து கொண்டே இருந்தான். தூரத்தில் ஒரு பாழடைந்த மண்டபம் தெரிந்தது.

கருங்கற்களால் ஆன அந்த மண்டபம் வெகு காலத்துக்கு முன்னால் கட்டப்பட்டிருக்கவேண்டும். சில தூண்கள் கீழே விழுந்து உடைந்து கிடந்தன. பாம்புப் புற்றுகளும் புதர்களும் அச்சத்தை உண்டாக்கின. மண்டபத்தின் அருகில் ஒரு வயதான புளிய மரம் நின்று கொண்டிருந்தது.

மண்டபத்தின் முன் பக்கத்தில் பேச்சுக் குரல் கேட்கவே, பின்புறம் கவரோரமாக முருகன் மறைந்துகொண்டான். மறைந்துகொள்ள வசதியாக



அந்த இடத்திலும் புதர்கள் மண்டிக் கிடந்தன.

அவர்கள் என்ன விஷயம் பேசுகிறார்கள் என்பதைக் காது கொடுத்துக் கேட்டான் அவன். எதுவும் காதில் விழவில்லை. சற்று நேரத்தில் அவர்கள் இருந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுப் போகும் சப்தம் கேட்டது. எல்லோரும் போய்விட்டார்களா என்பதை உறுதி செய்து கொண்டு மண்டபத்தின் முன்புறம் வந்தான்.

இருளின் ஆட்சி துவங்கி விட்டது. காட்டுப் பறவைகள் எழுப்பிய ஒலி முருகனுடைய வயிற்றைக் கலக்கியது.

'இவர்கள் ஏதோ திட்டத்தோடு இங்கே கூடியிருக்கிறார்கள். அது என்னவென்று தெரிய வேண்டும். இந்த இடத்தையும், இருட்டையும், இந்தப் பறவைகளின் ஒலியையும் கண்டு பயந்தால் காரியம் நடக்காது' என்று எண்ணிய முருகன், உடனே சுறுசுறுப்பாகச் செயல்படத் தொடங்கினான்.

மணியை மண்டபத்தின் பின்புறம் புதர் மறைவில் கட்டிப் போட்டான். அது நிலைமையைப் புரிந்து கொண்டது போல் சத்தம் போடாமல் இருந்தது.

ஊன்றுகோலை மறைத்து வைத்தான். உடம்பில் இருந்த தெம்பையெல்லாம் ஒன்று கூட்டி, மண்டபத்தில் இருந்த சிறுசிறு பொந்துகளிலும் வெளியில் நீட்டிக் கொண்டிருந்த கற்களிலும் இடது காலை வைத்தவாறு கைகளையே முழுமையாக நம்பி மண்டபத்தின் மீது ஏறினான் முருகன்.

மண்டபத்தின் மேல் தளத்தில் நடுப் பகுதிக்குச் சென்று படுத்துக் கொண்டான். கீழே இருந்து பகல் நேரத்தில் பார்த்தால் கூட, அவன்

67ம் பக்க விடை

ஒன்று முதல் ஏழுவரை உள்ள எண்களே அவை. ஒவ்வொரு எண்ணும் இருமுறை எழுதப்பட்டுள்ளது. ஒன்று நேராக இருக்கும். மற்றொன்று திரும்பி இருக்கும். இரண்டும் இணைந்ததையே காண்கிறீர்கள். இதைத் தொடர்ந்து வரும் வடிவம் இரண்டு 8கள் இணைந்ததாக இருக்கும்.

மேலே இருப்பதைக் கண்டு பிடிக்க முடியாது. சற்று தூரம் சென்று கவனமாகப் பார்த்தால்தான் தெரியும்.

மேல் தளத்தில் குப்புறப் படுத்துக் கீழே பார்த்தான். ஒரு சிறு துளை இருந்தது. அது போதும். அதன் வழியாகக் கீழே பேசுவதைக் கேட்க முடியும். கீழே வெளிச்சம் இருந்தால் ஆட்களையும் கண்டு கொள்ள முடியும்.

முருகனின் நம்பிக்கை வீண்போகவில்லை. அந்த முரடர்கள் மறுபடி வந்து மண்டபத்தில் கூடினார்கள்.

மேல் தளத்தில் தளத்தோடு தளமாகப் படுத்துக்கொண்டு கண்ணை வைத்துப் பார்த்தான். வெளிச்சம் இல்லாததால் எதுவும் தெரியவில்லை. எனவே துளையில் காதை வைத்துக் கூர்மையாக்கிக் கொண்டான். இப்போது அவர்கள் பேசுவது தெளிவாகக் கேட்டது.

அவர்களுடைய திட்டத்தைக் கேட்டு அதிர்ச்சி யடைந்தான் அவன். அவனுடைய இதயமே நின்றுவிடும்போல் இருந்தது.

சற்று நேரத்தில் அதிர்ச்சியிலிருந்து தன்னை மீட்டுக் கொண்ட அவன், 'எப்பாடு பட்டாவது இதனைத் தடுத்து நிறுத்துவேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அந்த இரவுப் பொழுதை எப்படியாவது கழித்து விட்டால் விடிகாலையில் மற்றவற்றைப் பார்த்துக் கொள்ளலாம் என எண்ணிய முருகன் கொட்டுகின்ற பனியைப் பற்றிக் கவலைப் படாமல், மேல் தளத்திலேயே படுத்துக்கொண்டான். குளிரில் உடம்பு நடுநடுங்கியது. பல்லைக் கடித்தபடி சகித்துக் கொண்டான். வானத்தையே பார்த்துக் கொண்டு தூங்காமல் விழித்திருந்தான்.

* * *

முருகனுடைய நாய் மணி, வேலாயுதத்தின் வீட்டின் முன்னால் வந்து நின்றது. வீட்டுக்குள் பார்த்தவாறு குரைக்கத் தொடங்கியது.

''டேய்... யாருடா வீட்டில் இருப்பது? இந்த நாய் யாருடையது?... ஏண்டா சனியன் இங்கே வந்து கத்திக் கொண்டு நிற்குது?... அடித்து விரட்டுங்கடா..'' என்றார் வேலாயுதம்.

மணி பாபுவைத் தேடி இங்குமங்கும் பார்த்தது. பாபுவைக் காணோம்! அது வேலாயுதத்துக்குத் தெரியவில்லை. ஒரு தடியன் நாயை அடித்து விரட்ட, கம்பைத் தூக்கிக் கொண்டு வேகமாக வந்தான். அதற்குள் அமுதா ஓடிவந்து,

''அப்பா, அந்த நாயை அடிக்கவேண்டாம் என்று சொல்லுங்கள். அது நம் முருகனுடைய நாய் அப்பா. மிகவும் அறிவுள்ள நாய். விசுவாசம் உள்ளது'' என்றாள்.

''யாருடைய நாயாக இருந்தால் என்னம்மா? அடித்து விரட்ட வேண்டியது தான்...'' என்றார். அதற்குள் மாடியிலிருந்து பாபு ஓடிவந்தான்.

''முருகனை நேற்றிலிருந்து காணவில்லையாம். அவனுடைய நாயைப் பார்த்ததும் எனக்குத் தெம்பாக இருக்கிறது. அதையும் அடித்து விரட்டாதீர்கள்.'' என்று சொல்லிக்கொண்டே அதன் அருகில் சென்று, அதன் முகத்தையும் கழுத்தையும் தடவிக் கொடுத்தான்.

மணியின் கழுத்துப் பட்டையில் ஒரு கடிதம் கட்டப்பட்டிருப்பதைக் கண்டான் பாபு. அதை எடுத்துப் படித்தான்.

''பாபு... நாளை அமாவாசை தினம். உங்கள் களத்து மேட்டில் இருக்கும் நெல்லை எல்லாம் திருடர்கள் இரவோடு இரவாகக் கொண்டு போகத் திட்டமிட்டிருக்கிறார்கள். உன் அப்பாவிடம் சொல்லி இதைத் தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்...''

செய்தி உண்மையாக இருந்தால் கூடத் தன்னுடைய பெயரைப் போட்டால், பாபுவின் தந்தை எங்கே வெறுப்படையப் போகிறாரோ என்று நினைத்தான் முருகன். ஆகையால் தன் பெயரைப் போடாமல் விட்டிருந்தான்.

தந்தை வேலாயுதத்திடம் கடிதத்தைக் காட்டினான் பாபு. அவர் அசட்டையாக இருந்தார்.

''வேலை கொடுக்கவில்லை, சோறு போடவில்லை என்ற எரிச்சலில் இந்தப் பயல் முருகன் இந்த மாதிரி யெல்லாம் கயிறு திரிக்கிற வேலையில் இறங்கியிருக்கிறானே... இருக்கட்டும். அவனை நான் பார்த்துக் கொள்கிறேன். போய் அந்தக் கடிதத்தைக் கிழித்துக் குப்பையில் போடு'' என்று அவனை விரட்டினார்.

தாய் மீனாட்சியம்மாளிடம் கடிதத்தைக் கொண்டு போய்க் கொடுத்து விவரத்தைச் சொன்னான் பாபு.

''முருகன் மிகவும் நல்லவன் அம்மா. அவன் வேடிக்கைக்காக இப்படி எழுத மாட்டான். அப்பா நம்ப மறுக்கிறார். நீங்கள் உடனே நம் ஆட்களைக் கூப்பிட்டுத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுங்கள் அம்மா'' என்றான் பாபு.

அவளும் அதன்படியே நம்பிக்கையான ஆட்களைக் கூப்பிட்டு விஷயத்தை ரகசியமாகச் சொல்லி அனுப்பினாள். களத்துமேட்டு நெல்லை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று சொன்னாள்.

பாபு, மணிக்குச் சாதம் போட்டான். நாலைந்து பிஸ்கட்டுகளைப் போட்டான். அது வாலைக் குழைத்துத் தன் நன்றியைத் தெரிவித்து விட்டு ஓடியது.

மணி ஓடிய பின்னால்தான் பாபுவுக்கு ஒரு யோசனை வந்தது. ''அடடா, ஒரு பதில் கடிதம் வைத்திருக்கலாமே! அவன் இருக்கும் இடம் தெரியவில்லையே!'' என எண்ணி வருத்தப்பட்டான்.

* * *

அன்று அமாவாசை. மையைக் குழப்பி ஊரின் மீது அப்பியது போல் இருந்தது இருளின் காட்சி.

வேலாயுதம் எந்தக் கவலையும் இல்லாமல் மாடியில் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்.

சற்று நேரத்தில் காவல்கார முனியன் ஓடிவந்தான். ''ஐயா, நூறு மூட்டை நெல்லும் திருட்டுப் போக இருந்தது. ஐயா.. ஒரே நேரத்தில் இருபது இருபத்தைந்து பேர் வண்டியோடு வந்து நெல் மூட்டைகளைத் தூக்க ஆரம்பித்து விட்டார்கள். நல்லவேளை, நம்முடைய ஆட்கள் ஐம்பது பேர் திடீரென்று தோன்றி அவர்களைத் தாக்கவே, வண்டி மாடுகளை விட்டு விட்டுத் தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடிவிட்டார்கள். நமக்கு நல்ல காலம். எல்லாம் அந்த முருகன் செயல்தான் ஐயா...'' என்றான் அவன்.



கண்ணன்: எடை பார்க்கிற மிஷினில் இருபது பைசாவுக்குப் பதில் பத்து பைசா போடறியே!

முரளி: இருக்கிற காசு அதுதான். பாதி எடை தெரிஞ்சா போதும். அதை இரண்டால் பெருக்கி என் எடையைத் தெரிஞ்சுக்குவேன்.

-லலிதா செல்லப்பா

பரபரப்போடு பாபுவையும் மீனாட்சியம்மாளையும் கூப்பிட்டுப் பேசினார், வேலாயுதம்.

''கடிதத்தில் கூறியபடி தக்க சமயத்தில் ஆட்களை அனுப்பாமலிருந்தால், நூறு மூட்டை நெல்லும் போயிருக்குமே! கடிதத்தைக் கேலி செய்து பேசினீர்களே'' என்றாள் மீனாட்சியம்மாள்.

''முருகனைப் பற்றித் தவறாகப் பேசிவிட்டேன். அவன் மிகவும் சிரமப்பட்டுத்தான் இத்தகவலை அனுப்பியிருக்க வேண்டும்!'' என்று ஓரளவு வருத்தம் தெரிவித்தார் அவர்.

* * *

'முருகன் எங்கே இருக்கிறானோ!... என்ன ஆபத்தில் இருக்கிறானோ! ஒன்றும் தெரியவில்லையே!' என்று எண்ணித் துடித்தான் பாபு.

அவன் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தபோது வேலியோரத்தில் முருகனுடைய மணி நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். பொங்கி வந்த ஆர்வத்தைக் கட்டுப்படுத்த அவனால் முடியவில்லை. வேலி வழியாகவே கையை விட்டு மணியின் கழுத்துப் பட்டையில் இருந்த கடிதத்தை எடுத்

துப் படித்தான். அதில் முருகன், தான் இருக்கும் இடத்தைக் கூற வில்லை. ''நான் நலமாக இருக்கிறேன். நீயும் உன் தங்கையும், அப்பா, அம்மாவும் நலம்தானே! என் அப்பா அம்மாவிடம் எதையும் சொல்ல வேண்டாம்.'' என்று குறிப்பிட்டிருந்தான்.

''நல்ல வேளை. இப்போது இந்த மணியைத் தொடர்ந்து சென்றால் முருகன் இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து விடலாம்'' என்று நினைத்தான் பாபு. மணி காலை நேரத்திலேயே வந்து விட்டதால், அவனுக்குச் சிரமம் எதுவும் இல்லை. அதைப் பின்பற்றிக் கொண்டே ஓட்டமும் நடையுமாக விரைந்தான் பாபு.

* * *

ஊரைத் தாண்டி மணி போய்க் கொண்டிருந்தது. நடக்க நடக்கக் கால் வலித்ததே தவிர முருகனைக் கண்டபாடில்லை.

கல்லும் முள்ளும் நிறைந்த பாதையில் மணி முன்னேறிப் போய்க் கொண்டிருந்தது. ஊரை விட்டு வடக்கே வெகு தூரம் வந்து, பின்னர் கிழக்கு நோக்கிச் சென்றது. எங்கு பார்த்தாலும் புதர்களும் கருவேல மரங்களும்தான்!

'இந்தப் பகுதி பகல் நேரத்திலேயே இவ்வளவு அச்சத்தைக் கொடுக்கிறதே!' என்று எண்ணிய பாபு, மௌனமாக மணியைத் தொடர்ந்து சென்றான்.

சாக்லேட் எங்கே?

''டேய் ரவி, அலமாரியில் இருந்த சாக்லெட்டெல்லாம் எங்கே? நீ எடுத்தாயா?''

''நான் எடுக்கலே அம்மா.''

''நீ எடுத்ததை உன் அண்ணன் பார்த்தானாமே?''

''சுத்தப் பொய். நான் எடுக்கும்போது அவன் வீட்டிலேயே இல்லியே!''

—ராஜராஜன்



தூரத்தில் ஓர் ஆலமரம் தெரிந்தது. அதற்கு அருகிலேயே ஓர் இறைவைக் கிணறு. பக்கத்தில் எலும்பும் தோலுமாக இரண்டு மாடுகள்: அவற்றின் தோற்றத்தைப் பார்த்தால் யாரும் அவற்றைத் திருடமாட்டார்கள்.

அங்கே இருந்த குடிசைக்கு முன்னால் போய் மணி நின்றது. மணியைக் கண்டதும், முருகன் வெளியே ஓடி வந்தான்.

பாபுவும் கூட வந்திருப்பதை அறிந்த முருகனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

''பாபு... உங்கள் களத்து மேட்டில் நடக்க இருந்த திருட்டைத் தடுத்து விட்டீர்களா?'' என்று ஆர்வத்தோடு கேட்டான்.

''மணி கடிதத்தைக் கொண்டு வந்திராவிட்டால், சாப்பாட்டுக்கு ஒரு நெல் மணி கூட இல்லாமல் எல்லாம் போயிருக்கும். என் அப்பா உன்மீது எவ்வளவு தூரம் வெறுப்புக் காட்டினார்! எப்படியெல்லாம் விரட்டி அடித்தார்! அப்படியும் நீ உதவி செய்திருக்கிறாயே!'' என்று வியந்தான் பாபு.

''நான் என்னுடைய கடமையைச் செய்தேன், பாபு... மெதுவாகப் பேசு. இருடர்கள் நடமாட்டம் இருந்தால் நமக்கு ஆபத்து!'' என்றான் முருகன்.

''முருகா! நீ ஏண்டா வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டாய்?''

''வேலை வெட்டி இல்லாமல் நொண்டி என்ற பேரோடு என் பெற்றோருக்குப் பாரமாக இருக்க நான் விரும்பவில்லை. ஏதாவது ஒரு வேலை தேட வேண்டும் என்றுதான் புறப்பட்டேன்.''

''என்னால்தானே உனக்குக் கால் போயிற்று?'' என்று வருந்தினான் பாபு.

''கால் போனால் என்ன? என் உள்ளத்தில் தெம்பு இருக்கிறது. நம்பிக்கை இருக்கிறது. நீ வருத்தப் படாதே, பாபு. மெதுவாக நொண்டி நொண்டி வந்து கொண்டிருந்தேன். மேற்கே வெகு தூரத்தில் ஒரு பாழ் மண்டபம் இருக்கிறது என்று முன்பு கேள்விப் பட்டிருந்தோமே, அங்கே நடந்து போனேன். அப்போதுதான் நெல் கொள்ளை பற்றி அறிந்துகொள்ள முடிந்தது.

''விடியற்காலை எழுந்து மணி மூலம் செய்தியை அனுப்பி விட்டுக் கிழக்குத் திசையில் நடந்தேன். இந்தக் காட்டில் ஒருவர் தனியாக இருந்து பயிர்த் தொழில் செய்கிறார். அவரைப் பார்த்தேன். வயல்களுக்கும் இந்தக் குடி

சைக்கும் காவலாக இருக்க முடியுமா? நான் உனக்குச் சம்பளம் தருகிறேன்'' என்றார். ஒத்துக்கொண்டேன். உன்னைத்தான் அடிக்கடி பார்க்க முடியாது. நீ என்னைப் பார்ப்பதையோ என்னோடு பேசுவதையோ உன்னுடைய அப்பா விரும்ப மாட்டார். அதனால் நாம் கடிதத்தின் மூலம்தான் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும்'' என்றான் முருகன்.

''இப்போது அப்பாவின் மனம் மாறி வருகிறது'' என்றான் பாபு.

''இருந்தாலும் கொஞ்ச நாள் இங்கேயே இருக்க விரும்புகிறேன்.'' என்றான் முருகன்.

சிறிது நேரம் முருகனுடன் இருந்து விட்டு, பாபு வீடு திரும்பினான்.

* * *

சிறிது தூரத்தில் யாரோ வருவது தெரிந்தது. முருகன் உற்றுப் பார்த்தான். ''அடடே, இது யார்?... மோகனல்லவா? இங்கே எப்படி வந்தான்!'' என்று வியப்போடு பார்த்தான் முருகன்.

அழுக்கடைந்த சட்டையும் பரட்டைத் தலையுமாக நின்றிருந்தான் மோகன். அன்று முதன் முதலில் பார்த்த அதே கோலம். தண்ணீருக்காகக் கையில் ஒரு பாத்திரத்தை வைத்திருந்தான். அவன்.

* * *

சரியாக ஓர் ஆண்டுக்கு முன்பு நடந்தது. அழுக்கடைந்த கிழிந்த சட்டையும், பறட்டைத் தலையும், சோர்ந்துபோன கண்களுமாக மோகன் மாங்குடி வந்து தெருக்களில் சுற்றிக் கொண்டிருந்தான். கையில் பாத்திரம் கூட இல்லாமல் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான் அவன்.

பிச்சை கேட்டவாறே வேலாயுதம் வீட்டின் எதிரே வந்தான். அங்கே நின்ற சின்ன வண்டியின் டயர் போட்ட சக்கரத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது வேலாயுதம் அவனைப் பார்த்து விட்டார்.

''டேய் முருகா! அந்தப் பயலைப் பார்.... அவன் பார்க்கிற பார்வையே சரியில்லை. திருட்டுப் பார்வை! வீட்டுக்குப் பின்புறம் இழுத்துப் போய் மரத்தில் கட்டிப்போடு. அவன் யார், எந்த ஊர் எதற்கு, இதுபோல் சுற்றுகிறான் என்பதெல்லாம் நான் தெரிந்து கொள்ள வேண்டும். இரண்டு நாளாய்ச் சுற்றுகிறானே... எதையும் சொல்லாவிட்டால் சாட்டையால் நாலு போட்



வரலாற்றில் இடம்!

''வரலாற்றில் உன் பெயர் இடம் பெற வேண்டுமென்ற உன் அப்பாவின் ஆசையை நிறைவேற்றி விட்டாயா? எப்படிடா?''

''ஆமாம், என் வரலாற்றுப் புத்தகத்தில் என் பெயரை எழுதி வைச்சுட்டேன்.''

—டி. எல். ரெட்டி

டால் கதறிக் கொண்டு சொல்கிறான்.. பக்கத்துத் தெருவில் பாத்திரங்கள் திருட்டுப் போயிருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். நாம் கவனமாக இருக்க வேண்டும்.'' என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டு அந்தப் பையன் அதிர்ச்சியடைந்தான்.

அவர் அப்படித்தான். சில நேரங்களில் ஒன்றுமில்லாத சின்ன விஷயத்துக்குக்கூடப் பெரிதாக அமர்க்களப்படுத்தி ஆர்ப்பாட்டம் நடத்துவார். பெரிய விஷயத்தைப் பெரிது படுத்தாமல் விட்டுவிடுவார்.

முருகன் வேறு வழியில்லாமல் அந்தப் பையனைத் தோட்டத்துப் பக்கம் இழுத்துக்கொண்டு போவது போல் பாவனை செய்து அழைத்துச் சென்றான்.

நல்லவேளையாக வேலாயுதம் அவசரமாக வெளியூருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

முருகன், பாபுவின்தாய் மீனாட்சியம்மாவிடம் சென்று ரகசியமாக, ''அம்மா, இவனைப்பார்த்தால் கெட்டவன்போலத் தெரியவில்லை. வறுமையின் காரணமாக பார்ப்பதற்கு இப்படி இருக்கிறான். இவன் திருடனோ என்று ஐயா சந்தேகப்படுகிறார். மரத்தில் கட்டிவைக்கும்படி சொல்கிறார்'' என்றான்.

அந்தப் பையனைக் கண்டதும் மீனாட்சியம்மாளுக்கு இரக்கம் பிறந்தது.

சற்று நேரத்தில் வேலாயுதம் புறப்பட்டுப் போன பின்னர், அவனைக் குளிக்கச் செய்து சாப்பாடு போட்டாள். என்

ணெய் கொடுத்துத் தலை வாரிக் கொள்ளும்படி சொன்னான். பாபு ஓடிப் போய் ஒரு சட்டை கொண்டு வந்து கொடுத்தான். கிழிந்த சட்டையைக் கழற்றிவிட்டு அந்தச் சட்டையை அவன் போட்டுக் கொண்டான்.

அதற்குப் பின் முருகன் அவனைத் தன்னுடைய வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனான். அவனுடைய பெயர் மோகன் என்பதையும் தெரிந்து கொண்டான்.

இரண்டு நாட்கள் முருகன் வீட்டில் இருந்த மோகன், அதற்குப் பின் சொல்லாமலே புறப்பட்டுவிட்டான்.

அவன் மீது எல்லோருக்கும் இரக்கமாக இருந்தது. ஆனால் வேலாயுதத்தின் முன்கோபத்தை நினைத்த போது எதையும் செய்ய இயலவில்லையே என்று வருந்தினர். அவனைத் தேடும் முயற்சியில் இறங்கவில்லை.

* * *

முருகன் ஒரு காலை இழந்து நிற்பதைக் கண்ட மோகன் திடுக்கிட்டான். விவரம் கேட்க நினைத்தான். பேச முடியவில்லை. சைகை மூலம் கேட்டான். முருகன் நடந்ததைச் சுருக்கமாகக் கூறிவிட்டு, ''ஆமாம், நீ நன்றாகப் பேசுவாயே, இப்போது ஊமையாக இருக்கிறாயே!'' என்று வருத்தத்துடன் கேட்டான்.

மோகன் ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதிக் காட்டினான்.

முருகனிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்த சில நாட்களில் அவன் ஒரு கொள்ளைக் கூட்டத்தில் சிக்கிவிட்டானாம். அவர்கள் அவனுடைய நாக்கை அறுத்து ஊமையாக்கி விட்டார்களாம். பிச்சைக்காரனைப் போல் நடித்து உளவு சொல்ல வேண்டுமாம். எங்கே எந்த வீட்டில் இருடலாம் என்பதைப் பார்த்து வரவேண்டுமாம். தப்பித்து ஓட முயற்சி செய்தால், தேடிப் பிடித்துக் கொன்று விடுவதாக எச்சரிக்கை செய்திருக்கிறார்களாம்!

அவன் மீது முருகனுக்கு மிகவும் இரக்கம் பிறந்தது. ''ஆண்டவன் கொடுத்த நாக்கைப் பாவிகள் இப்படி இரக்கமில்லாமல் அறுத்துவிட்டார்களே! அவர்களிடமிருந்து அவன் எப்போதுதான் தப்பப் போகிறானோ!'' என்று எண்ணிக் கலங்கினான் அவன்.

''மிராசுதார் வேலாயுதத்தின் களத்து மேட்டில் கொள்ளை அடிக்க முயன்றது அந்தக் கூட்டம்தானே?'' என்று கேட்டான் முருகன்.

''ஆமாம்'' என்று எழுதிக் காட்டிய மோகன், ''நான் சீக்கிரம் மலைக்குத் திரும்ப வேண்டும். சந்தேகப்படுவார்கள்.'' என்றும் எழுதிக் காட்டிவிட்டு உடனே புறப்பட்டுவிட்டான்.

முருகன் அவனுக்கு நாலைந்து வெள்ளரிப் பிஞ்சுகளைக் கொடுத்து அனுப்பினான்.

அன்று வேலாயுதம் அவனை மரத்தில் கட்டிப் போடச் சொன்னபோது, மீனாட்சியம்மாளிடம் சொல்லி உதவி செய்த முருகனை மோகனால் மறக்க முடியவில்லை.

* * *

அன்று பாபு முருகனைத் தேடி வந்தான்.

முருகன் குறிப்பிட்ட அந்தப் பாழடைந்த மண்டபத்துக்குச் சென்றுவர வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டான்.

முருகன் எவ்வளவோ மறுத்துக் கூறினான். ''அது மிகவும் ஆபத்தான இடம். மேற்கே மலைப் பகுதியில் இருக்கும் கொள்ளையர்கள் சில நாட்களில் இரவு நேரத்தில் அந்த மண்டபத்தில் வந்து கூடிப் பேசுகிறார்கள்.'' என்றான் அவன்.

நெருப்புப் பிடிக்காத மரம்!

இஸ்ரேலில் டமாரிஸ்கில் என அழைக்கப்படும் மரங்கள் ஏராளமாக இருக்கின்றன. இந்த மரத்தையோ இதன் இலைகளையோ எவ்வித முயற்சியினாலும் நெருப்பில் எரிய வைக்க முடியாதாம். இந்த மர இலைகளின் மீது நெருப்பு வைத்தால், நெருப்பு உடனே அணைந்து விடுகிறதாம். இந்த மரத்தின் அருகே வேறு எவ்விதமான புல் பூண்டுகளும் முளைப்பது இல்லையாம்.

நன்றி: தமிழ் நேசன்
—நீரை அத்திப்பூ



''முருகா, நாம் பகல் நேரத்திலேயே சென்றுவிட்டு வந்துவிடலாம். மண்டபத்தின் மேல் நீ படுத்திருந்த இடத்தையெல்லாம் ஏறிப் பார்க்க மாட்டேன். கீழே இருந்து பார்த்துவிட்டு உடலே திரும்பிவிடலாம்'' என்று கெஞ்சினான் பாபு.

மறுநாள் பகல் நேரத்தில் பாபுவும் முருகனும் அந்த மண்டபத்தை நோக்கி நடந்தார்கள்.

''முருகா...நான் உனக்குத் தொல்லை கொடுக்கவே இருக்கிறேன். முன்பு உன் காலைப் பறித்தேன். இப்போது ஊனமான காலால் நடக்கச் சொல்லித் துன்புறுத்துகிறேன்'' என்றான் பாபு.

''இதெல்லாம் ஒரு தொல்லையா? இப்படி நடந்து நடந்து எனக்குப் பழக்கமாகிவிட்டது. உன்னைப் போல் விரைவாக வரமுடியாது. அவ்வளவுதான்.'' என்றான் முருகன்.

* * *

இரவு நேரத்தில் அச்சத்தின் இருப்பிடமாக விளங்கும் அந்த மண்டபத்தைப் பார்த்தான் பாபு. முருகனுடைய வீரச் செயல் அவனுக்கு மிகுந்த வியப்பை உண்டாக்கியது.

''என் அம்மா நீ செய்த செயலைச் சொல்லி வியக்காத நாளே கிடையாது. உன்னுடைய மணி, மனிதர்களை விட அறிவுடையது என்று எல்லோரும் சொல்கிறார்கள். அன்றைக்கு உன்னுடைய நாய் செய்தி கொண்டு வந்திராவிட்டால் எல்லா, நெல்லையும் கொண்டு போயிருப்பார்களே!'' என்றான் பாபு.

அந்த நேரத்தில் பாபுவும் முருகனும் எதிர்பாராத ஒரு செயல் நிகழ்ந்தது.

''வாங்கடா பலே பையன்களா! உங்களைத்தான் இவ்வளவு நாளாகத் தேடினோம். வசமாகச் சிக்கிக்கொண்டீர்களா?'' என்று கூறிக்கொண்டே புளிய மரத்தின் மேலிருந்து இரண்டு முரடர்கள் கீழே குதித்தார்கள். அவர்கள் ஒளிந்திருந்ததை முருகனோ, பாபுவோ கவனிக்கவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தனர்.

பாபுவையும் முருகனையும் அவர்கள் பிடித்து இழுத்துக் கொண்டு தூரத்தில் மரங்கள் மிகவும் அடர்ந்திருந்த ஒரு தோப்புக்குக் கொண்டு சென்றார்கள். மணியையும் கயிற்றினால் கட்டித் தரதரவென்று இழுத்துச் சென்றார்கள்.

மோகன் மரத்தின் மறைவிலிருந்து இந்தக் காட்சியைப் பார்த்து அதிர்ச்சியடைந்தான். தனக்கு உதவி செய்த முருகனையும் அவனுடைய தோழன் பாபுவையும் எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று முடிவு செய்தான் அவன். சந்தேகம் வராமல் இருப்பதற்காகக் கையில் ஒரு பாத்திரத்தோடு அங்கிருந்து நழுவிக் கிழக்குத் திசை நோக்கி மெதுவாக நடந்து, பாத்திரத்தைத் தூக்கி எறிந்துவிட்டு வடக்கே இருந்த தார் சாலையை நோக்கி ஓடத் தொடங்கினான் அவன்.


பாபுவையும் முருகனையும் இடுப்போடு சேர்த்து மரத்தில் கட்டினார்கள்.

முரடர்களில் ஒருவன் பாபுவைப் பார்த்து, ''பையில் பேனா, பேப்பர் இருக்கும் போலிருக்கிறது. பெரிய ஆபீஸர் என்று நினைப்புப் போலிருக்கிறது'' என்று கிண்டல் செய்தான். பாபு மௌனமாக இருந்தான்.

''இந்த நொண்டிப் பயலுக்கு எவ்வளவு திமிர்? இவருக்குப் பெரிய துப்பறியும் புலி என்று நினைப்புப் போலிருக்கிறது. இவருக்குத் துணையாக ஒரு நாய் வேறு. இவனைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டியதுதான். அதற்குள் நாம் இவர்களை வைத்து ஒரு வியாபாரம் செய்து விடுவோம்.'' என்றான் அடுத்தவன்.

இதற்குள் இன்னும் நாலைந்து முரடர்கள் அங்கு வந்து விட்டார்கள். அவர்களில் தலைவன் முனியாண்டியும் இருந்தான்.

முனியாண்டி ஒரு கருங்கல்லின் மீது உட்கார்ந்து கொண்டு பாபுவையும்



இந்தக் கப்பில் காப்பி இருக்கிறது. ஆனால் ஆறிப் போயிருக்கிறது. உடனே சூடு பண்ண வேண்டும். என்ன செய்வது?



காப்பி இருக்கும் டம்ளருக்கு மேலே இப்படி மூன்று கோடுகள் போட்டால் காப்பி சூடாகிவிடும்!

—மேகலை

முருகனையும் பார்வையாலேயே அளந்தான். மற்றவர்களிடம் விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டான். பின் பாபுவை நோக்கி,

''டேய், உன் பெயர் என்ன?''

''பாபு.''

''உன் அப்பா பெயர் வேலாயுதம் தானே?... நீ வைத்திருக்கிற பேப்பரில் நான் சொல்வதை எழுது:

'அப்பா வேலாயுதம் அவர்களுக்கு, நான் உயிருக்கு மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறேன். என் உயிர் பிழைப்பது உங்களிடம்தான் இருக்கிறது. உடனே பத்தாயிரம் ரூபாய் பணத்துடன் வந்து என்னை மீட்டுச் செல்லுங்கள். ஊருக்கு வடமேற்கே உள்ள பாழடைந்த மண்டபத்தைத் தாண்டி ஒரு தோப்பு இருக்கிறது. அங்குள்ள வேப்ப மரத்தில் தொங்கும் கயிற்றில் பண முடிப்பைக் கட்ட வேண்டும். அந்தப் பண முடிப்பு மேலே இழுக்கப்பட்டுச் சரிபார்க்கப்பட்டதும், 'அழைத்துப் போகலாம்' என்று குரல் வரும். அதன்படி செய்யுங்கள். போலீசுக்குத் தகவல் கொடுத்தாலோ பண முடிப்புக்குப் பதிலாகக் கூழாங்கல் மூட்டையைக் கட்டிவிட்டு என்னை அழைத்துப்போக நினைத்தாலோ என் உயிருக்கு மட்டுமல்லை: உங்கள் உயிருக்கும் ஆபத்து ஏற்படும்.'...

''என்ன, நான் சொன்னதை எழுதி விட்டாயா?'' என்று கேட்டான் முனியாண்டி. ''எழுதிவிட்டேன்'' என்றான் பாபு.

ஒரு முரடன் கையில் பிடித்திருந்த மணி, அவனுக்குத் தெரியாமல் கயிற்றை மெதுவாகக் கடித்துத் துண்டித்து விட்டது. கையில் பிடித்திருந்த கயிறு தனியாக வந்ததும், அவன் கத்தினான். ''அதோ நாய் ஓடுகிறது!'' என்றான்.

மணி எவருடைய கையிலும் சிக்காமல் ஓடிக் கொண்டிருந்தது.

நாயைப் பிடிக்கும் முயற்சியில் இறங்கியவன், ஏமாந்து போய்த் திரும்பி வந்தான். அவனைத் திட்டிக்கொண்டே,

''டேய், ஊமையனைக் கூப்பிடு. அவன் பிச்சைக்காரன் வேஷத்தில் போய், இந்தக் கடிதத்தை மிராசுதார் வேலாயுதம் பார்க்கும்படி வைத்துவிட்டு வந்துவிடட்டும். ஊமையனிடம் கொடுப்பதற்கு முன், நீ ஒரு தடவை அதைப் படித்துப் பார்.'' என்றான் முனியாண்டி.

''ஊமையனைக் காணோம், தலைவரே'' என்றான் ஒருவன்.

''முதலில் அவனைத் தேடிக் கண்டு பிடியுங்கள். எல்லோரும் சரியாய்ப் பார்த்தீர்களா? எங்கேயாவது தண்ணீர் கொண்டு வரப்போயிருப்பான்'' என்றான் முனியாண்டி.

ஒருவன் அவனைத் தேடிக் கொண்டு சென்றான்.

* * *

இன்னும் இருள் வரவில்லை. ஊமைப் பையன் மோகன் விரைவாக ஓடிச் சாலைக்கு வந்து விட்டான்.

சாலையில் நின்று கொண்டு அவன் போட்டிருந்த சிவப்புச் சட்டையைக் கழற்றி வைத்துக்கொண்டு கொடி போல் ஆட்டினான்.

எதிரே வந்த பஸ் ஒன்று அவன் சிவப்புச் சட்டையை ஆட்டுவதைப் பார்த்ததும் நின்றது. உடனே அதில் ஏறிக்கொண்டான்.

கண்டக்டரிடம் பேனாவும் தாளும் வாங்கி, பாபுவும் முருகனும் ஆபத்தில் சிக்கியுள்ள விஷயத்தை எழுதிக் காட்டினான்.

பஸ் தஞ்சாவூர் நகர தலைமைக் காவல் நிலையத்தை நோக்கிப் பறந்தது.


சற்று நேரத்துக்கெல்லாம் மாவட்டக் காவல் அதிகாரியின் தலைமையில் நான்கு ஜீப்களில் காவல் துறையினர் மோகன் குறிப்பிட்ட காட்டுப் பகுதியை நோக்கி விரைந்து வந்தனர்.

மணி வந்து வேலாயுதம் வீட்டிலும் முருகனின் தந்தை சின்னுவின் வீட்டிலும் மாறி மாறிக் குரைத்தது. சின்னுவின் வேட்டியைக் கவ்வி அவரை இழுத்தது. சின்னு வேலாயுதத்தின் வீட்டிற்கு ஓடி வந்தார். அதே சமயம்

கண்ணன்: நாளைக்குப் பரீட்சை இன்று ஏன் ஜோசியர் வீட்டுக்குப் போகிறாய் மணி?

முரளி: நாளைக்கு என்ன என்ன கேள்விகள் வரும் என்று ஜோசியம் பார்க்கத்தான் போகிறானாம்!

--லலிதா செல்லப்பா



வேலாயுதத்தின் வேலைக்காரன் ஒருவன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான்.

''இந்தக் கடிதத்தை ஒரு ஆள் கொண்டு வந்து கொடுத்தான். உங்களிடம் கொடுக்கச் சொல்லிவிட்டு நிற்காமல் சைக்கிளில் பறந்து விட்டான்.''

பாபுவை மீட்கப் பத்தாயிரம் ரூபாய் உடனே கொண்டு வரவேண்டும் என்று பாபுவைக் கொண்டே எழுதப்பட்ட அந்தக் கடிதம் வேலாயுதத்தையும் மீனாட்சியம்மாளையும் திடுக்கிடச் செய்தது!

அதிர்ச்சியிலிருந்து ஒரு கணம் தன்னைச் சுதாரித்துக் கொண்ட மீனாட்சியம்மாள், ''பணம் பெரிதில்லை... எப்படியாவது பிள்ளைகளைக் காப்பாற்றுங்கள்... உடனே ஆக வேண்டியதைக் கவனியுங்கள்'' என்றாள்.

வேலாயுதம் நிற்பதற்கு நேரமில்லாமல் பம்பரமாய்ச் சுழன்றார். முருகனின் தந்தை சின்னனுடன் ஐம்பது ஆட்களைத் திரட்டிக் கொண்டு பத்தாயிரம் ரூபாய் பணத்தையும் எடுத்துக்கொண்டு ஒரு லாரியில் புறப்பட்டார்.

பாழடைந்த மண்டபத்தைத் தாண்டித் தோப்பை நெருங்கினர். அங்கே போலீஸ் ஜீப்பைக் கண்டனர். அப்போது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.


போலீஸ் ஜீப்புக்களையும் வண்டிகளில் வந்த பெரும் கூட்டத்தையும் கண்ட கொள்ளையர் கூட்டம் மலைக்குகைக்குள் ஓடிச் சென்று ஒளிந்து கொண்டது.

பாபுவையும் முருகனையும் கொண்டு போய் மலைக் குகைக்குள்ளே இருந்த ஓர் அறையில் அடைத்து வைத்திருந்தனர். கம்பிக் கதவு போடப்பட்டுச் சிறைக் கூடம் போல் இருந்தது அந்த அறை. உள்ளே ஒரே இருட்டு. பெரும் பெரும் பாறைகளைக் கொண்டே அப்படி அமைத்து வைத்திருந்தனர். அந்த அறைக் கதவைப் பூட்டி, சாவியை முனியாண்டியிடம் கொடுத்துவிட்டனர்.

ஒரு ஜீப்பில் மாவட்டக் காவல் அதிகாரியுடன் மோகன் அமர்ந்திருந்தான். அவன் அவர் கேட்கும் விவரங்களைத் தாளில் எழுதிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

✲ ✲ ✲

மாவட்டக் காவல் அதிகாரி துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டார்.



ஏழின் நடுவே ஒரு கோடு ஏன்?

ஏழு என்ற எண்ணை எழுதும்போது, சிலர் நடுவில் இன்னொரு கோடு போடுவார்கள். இது ஏன்? வேகமாக எழுதும்போது 7 என்ற எண் 1 என்ற எண் போலத்தோன்றி விடுமோ என்று கருதியே இப்படிச் செய்வார்கள். ஆனால், இதற்குக் காரணம், பிரான்ஸ் தான் என்று சிலர் கூறுகிறார்கள். பிரான்ஸ் நாட்டுக்காரர்களுக்கு 7ஆம் எண் துரதிர்ஷ்டமானது. ஆகவே, அதை எழுதிவிட்டு, பிறகு அது இல்லை என்பது போல் நடுவில் ஒரு அடி அடித்து விடுவார்கள்!

—ராதா ராமமூர்த்தி

''எல்லோரும் உயிர் பிழைக்க வேண்டுமானால், குகையை விட்டு வெளியில் வாருங்கள். வராவிட்டால் குகையோடு சேர்த்து வெடி குண்டுகளைப் போட்டு அத்தனை பேரையும் தீர்த்துக் கட்டிவிடுவோம்'' என்று ஒலிபெருக்கியில் கூறினார்.

''ஐயோ!'' என்று அலறினார் வேலாயுதம்.

''நீங்கள் கவலைப் படாதீர்கள். பொறுமையாய் இருங்கள்'' என்றார் அதிகாரி. இருந்தாலும் வேலாயுதத்தின் இதயம் துடித்துக் கொண்டிருந்தது. ஆயினும் திருடர்கள் பயப்படவில்லை.

பாபுவும் முருகனும் தங்கள் கூடவே குகைக்குள் இருந்ததால்,போலீஸ் குண்டுகளை வீசாது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகையால், கவலைப்படாமல் பாறைகளின் இடுக்கில் மறைந்து கொண்டிருந்தனர்.

மோகன் காவல் அதிகாரியிடம் ஒரு தாளில் எதையோ எழுதிக் கொடுத்தான்.

அவர் பைனாகுலரை எடுத்து மலையின் உச்சிப் பகுதியில் மோகன் குறிப்பிட்ட இடத்தில் பார்த்தார். அவர்

முகத்தில் தெளிவும் மகிழ்ச்சியும் பிறந்தன. உடனே 'வயர்லெஸ்'மூலம் நகரத்தலைமை நிலையத்துடன் தொடர்பு கொண்டார்.


சிறிது நேரத்தில் மலையின் உச்சிப் பகுதியில் ஹெலிகாப்டா வட்டமிட்டது. கயிற்றினால் ஆன ஏணி ஒன்றை மேலேயிருந்து கீழே தொங்க விட்டது. சற்று நேரத்திலேயே வேலை முடிந்து திரும்பியது.

ஒலிபெருக்கி மறுபடி அலறியது.

''பாபுவும் முருகனும் உங்களிடம் இருக்கிறார்கள் என்ற தைரியத்தில் தானே வெளியில் வராமல் இருக்கிறீர்கள்? அவர்கள் மலையின் உச்சிக்குச் சென்று, அங்கிருந்து ஹெலிகாப்டரில் தப்பிச் சென்று பத்து நிமிடங்களுக்கு மேலாகிறது. ஒழுங்காக வெளியே வந்து விடுங்கள்...''

இந்த அறிவிப்பைக் கேட்டதும் முனியாண்டியும் அவனுடைய ஆட்களும் சிறுவர்களை அடைத்து வைத்த இடத்தில் ஓடிப்போய்த் திறந்து பார்த்தனர். அவர்களைக் காணோம். அங்கிருந்த ரகசியப் பாதை திறந்து கிடந்தது. அதன் வழியாக அவர்கள் தப்பி விட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டார்கள். 'இந்த அறைக்குள் இருந்து மலையின் உச்சிக்குச் செல்லும் இரகசியப் பாதை இவன்களுக்கு எப்படித் தெரிந்தது!' என்று வியப்படைந்தான் முனியாண்டி. பிறகு, வேறு வழியின்றி முனியாண்டியும் அவனுடைய ஆட்களும்

> கண்ணன்: உன் பெயரைத்தான் சொல்லமாட்டேன் என்கிறாய்? எந்த ஊர்? அதையாவது சொல்.
>
> புதியவன்: ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக்கூடாது. என் பேரும் அதுதானே.
>
> பெயர்: சிதம்பரம்
>
> ஊர்: சிதம்பரம்
>
> -லலிதா செல்லப்பா



குகையை விட்டு வெளியில் வந்து போலீசில் சரணடைந்தார்கள்.

போலீசார் மோகனுடன் மலைப் பகுதிக்குள் சென்று கொள்ளைக் கூட்டம் வெவ்வேறு இடங்களில் பதுக்கி வைத்திருந்த தங்கம், வெள்ளி நகைகள் பாத்திரங்கள், டிரான்ஸிஸ்டர்கள், கைக் கடிகாரங்கள், சைக்கிள்கள், நெல்-மூட்டைகள் போன்ற பலவற்றைக் கைப்பற்றினர்.

தலைமைக் காவல் நிலையத்தை நோக்கி ஜீப்கள் விரைந்தன. அங்கு பாபுவையும் முருகனையும் கண்டு அவர்களைத் தழுவிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார் வேலாயுதம்.

மலைக் குகைக்குள்ளே அந்த அறையில் இருந்த ரகசியப் பாதையை முன்பே மோகன் முருகனிடம் சொல்லியிருந்ததால், அவர்களால் தப்பிக்க முடிந்தது. மோகனது நுண்ணறிவையும் விரைந்து செயல்பட்ட சாதுரியத்தையும் எல்லோரும் பாராட்டினர்.

✲ ✲ ✲

''மோகனையும் எங்களோடு அனுப்புங்கள் சார்'' என்று வேண்டினார் வேலாயுதம்.

''அவன் மூலமாகக் கொள்ளைக் கூட்டம் பற்றி இன்னும் சில விஷயங்கள் தெரிய வேண்டும். ஓரிரு நாளில் உங்களிடம் அனுப்பி விடுகிறேன்'' என்றார் காவல் அதிகாரி.

வேலாயுதம் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துப் புறப்பட்டார்.

மாங்குடியில் அவரது இல்லம் மகிழ்ச்சியில் திளைத்தது.

''முருகனும் மோகனும் இல்லாவிட்டால் நம் குடும்பத்தில் பெரிய விபத்துக்கள் ஏற்பட்டிருக்கும். உடல் ஊனமுள்ள அவர்களுடைய துணிவும் நல்ல உள்ளமும் என்னை வியக்க வைக்கின்றன. பாபுவைப் போலவே அவர்களையும் உயிராக நினைப்பேன். அவர்கள் வாழ்வில் உயர்வதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்வேன்'' என்ற வேலாயுதத்தின் அறிவிப்பு எல்லோருடைய செவிகளிலும் தேனாகப் பாய்ந்தது.

''மணி செய்திருக்கிற செயல்களைக் கண்டு நான் மலைத்து விட்டேன். மனிதர்களிடம் மட்டுமல்ல, பிராணிகளிடமும் நான் இனிமேல் அன்பு காட்டுவேன்'' என்று அவர் கூறிய போது எல்லோரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தார்கள்.

உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை - 4

டாம் மாமாவின் நல்ல இல்லம்



எச். கிருஷ்ணமூர்த்தி

அமெரிக்க நாடு. ஒகியோ ஆற்றின் தென் பகுதி. கென்டகி மாநிலம். அங்கு ஷெல்பி என்னும் ஒரு பெரிய பண்ணைக்காரரர். அவருக்கு ஒரே மகன். ஷெல்பியும் அவரது குடும்பத்தினரும் மதப் பற்று மிகுந்த கிறிஸ்தவர்கள். அக்கால வழக்கப்படி அவருடைய பண்ணையில் ஏராளமான நீக்ரோ அடிமைகள் வேலை பார்த்தனர். ஷெல்பி அவர்களை மிகவும் அன்பாக நடத்தினார்.

டாம் அவருடைய அடிமைகளில் ஒருவன். சிறு வயதிலேயே அங்கு வந்து சேர்ந்தான். உண்மையாக உழைத்தான். அடிமைகளில் முதலிடம் பெற்றான். டாம் நல்ல உயரம். பலசாலி. வாட்டசாட்டமான வடிவம். அன்பும் அறிவும் கலந்த ஆப்பிரிக்கத் தோற்றம்.

பண்ணையிலேயே ஒரு மர இல்லத்தில் டாம் வசித்தான். அந்த இல்லம் எளிமையாகவும் தூய்மையாகவும் இருந்தது. டாமின் மனைவி குலோ சமையலில் கெட்டிக்காரி. டாமுக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் விளையாட்டும் சிரிப்பும் அந்த இல்லத்தில் சதா ஒலிக்கும்.

டாமின் இல்லம் ஒரு வழிபாட்டுக் கூடமாகவும் பயன்பட்டது. பண்ணையின் எல்லா அடிமைகளும், அங்கு பிரார்த்தனைக்காகக் கூடுவார்கள். ஷெல்பியின் மகனும் வருவான். பைபிள் படிப்பான். நல்ல குரலில் பாடுவான். அது மனத்தை உருக்கும்.

ஷெல்பியின் தொழிலில் நஷ்டம் வந்தது. ஆலே என்ற வியாபாரிக்கு அவர் நிறையக் கடன் பட்டிருந்தார். கடனை அடைக்க முடியவில்லை. கடனைத் தீர்க்கப் பண்ணையிலிருந்து இரண்டு அடிமைகளை விற்கும்படி ஆலே ஆலோசனை கூறினார். முதலாவதாக அவர் டாமைத் தேர்ந்தெடுத்தார். இரண்டாவதாக, பண்ணையில் விளையாடிக் கொண்டிருந்த ஓர் அழகான சிறுவனையும் விரும்பினார். சிறுவனின் பெயர் ஆரி. அவனுடைய தாயார் எலிசா அவள் ஷெல்பியின் பண்ணையில் இருந்த இன்னொரு அடிமை. அவளுடைய கணவன் ஜார்ஜ். அவன் வேறொரு பண்ணையில் அடிமையாக இருந்தான்.

அடிமைகளை விற்பது ஷெல்பிக்குப் பிடிக்காத விஷயம். டாமையும் சிறுவன் ஆரியையும் விற்பதற்குச் சட்டம் இடம் கொடுத்தாலும், அவருடைய மனச்சாட்சி அனுமதிக்கவில்லை. வேறு

வழியில்லாமல் அவர் அந்த இருவரையும் விற்கும்படி ஆயிற்று.

ஆரியின் தந்தையான ஜார்ஜை அவனுடைய எஜமானன் மிகவும் கொடுமைப்படுத்தினான். ஆகவே, ஜார்ஜ் வடக்கில் இருந்த கானடாவுக்கு ஓடிப் போகத் தீர்மானித்தான். கானடா அண்டை நாடு. அங்கு அடிமைத்தனம் இல்லை. சுதந்திரம் விரும்பும் அடிமைகள் கானடாவுக்கு ஓடிப் போவது வழக்கம். அந்த முயற்சியில் தோற்றுப் பிடிபட்டால், தண்டனை அதிகமாக இருக்கும். பிறகு அவர்களைத் தென் பகுதியில் உள்ள பருத்தித் தோட்டங்களில் விற்று விடுவார்கள். அப்புறம் அவர்களின் வாழ்க்கை நரகமாகிவிடும்.

எலிசாவையும், குழந்தை ஆரியையும் காண ஜார்ஜ் வந்தான். "எலிசா நான் கானடாவுக்குப் போகிறேன். அங்கு நிறையச் சம்பாதிப்பேன். பிறகு உன்னையும் ஆரியையும் மீட்பேன்" என்று சொல்லிச் சென்றான்.

டாமும், ஆரியும் விற்கப்பட்டனர். மறுநாள் ஆலே அவர்களை அழைத்துப் போக இருந்தார். எலிசாவுக்குச் செய்தி எட்டியது. "நான் என் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக ஓடிப்போகிறேன்" என்று எலிசா எஜமானனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அண்ணன் டாமைப் பார்த்து, "நானும் கனடாவுக்குப் போகிறேன்" என்று கூறி விடைபெற்றாள்.

டாமையும் தப்பித்து ஓடும்படி அவன் மனைவி சொன்னாள். அதற்கு அவன், "எஜமானன் என்னை நம்பி இருக்கிறார். இதுவரையில் அவருக்குத் துரோகம் செய்தது இல்லை. இனியும் செய்ய மாட்டேன். நான் தப்பித்து ஓடிவிட்டால், எனக்குப் பதிலாக வேறு ஒருவரைத்தானே விற்க வேண்டும்? அப்போது அந்த அடிமை சிரமப்படுவாரல்லவா? பிறருக்காக நான் எந்த விதத் துன்பத்தையும் ஏற்பேன்" என்று உறுதியாகச் சொன்னான்.

மறுநாள் டாமையும் ஆரியையும் ஆலே அழைத்தார். டாம் தயாராக இருந்தான். ஆனால் ஆரியையும், அவனுடைய அம்மாவையும் காணவில்லை. அவர்கள் ஓடிப்போன, செய்தி பண்ணை முழுதும் பரவியது. டாமையும் ஆரியையும் விற்ற ஷெல்பிக்கு உள்ளூர மகிழ்ச்சி. அதை வெளிக் காட்டாமல் ஆரியையும் எலிசாவையும் பிடித்துவர வேலை ஆட்களை ஆலேக்கு உதவியாக அனுப்பினார்.



நடு இரவு. நல்ல இருட்டு. கடுங் குளிர். கனத்த பனி. எலிசா எதையும் லட்சியம் செய்யவில்லை. ''ஆரி, ஆலேயின் ஆட்கள் உன்னைப் பிடிக்க வருகிறார்கள். சமர்த்தாக என்னோடு வந்துவிடு. தப்பித்துக் கொள்ளலாம்'' என்று சொல்லிக்கொண்டே அவனுக்குக் கம்பளி ஆடை அணிவித்தாள் எலிசா. உணவையும், துணிகளையும் சிறு மூட்டையாகக் கட்டினாள். 'திக்கற்றவருக்குத் தெய்வமே துணை' என்று தெய்வத்தைத் தொழுதாள். சிறுவனை அன்போடு அணைத்துக்கொண்டாள். வில்லிலிருந்து விடுபட்ட அம்பைப் போல் எலிசா வட திசையில் விரைந்தாள்.

எலிசா பகல் முழுதும் பயணம் செய்தாள். மாலையில் ஒகியோ ஆற்றை அடைந்தாள். ஆற்றில் புது வெள்ளம். பெரிய பெரிய பனிக் கட்டிகள் ஆற்றில் மிதந்து சென்றன. அருகில் இருந்த விடுதிக்குச் சென்று படகு கிடைக்குமா என்று கேட்டாள். புது வெள்ளத்தின் காரணமாகப் படகு போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தாயும் சேயும் விடுதியில் இளைப்பாறினர்.

விடுதியை நோக்கிச் சிலர் குதிரை மீது வருவதை எலிசா கவனித்தாள். அவள் சற்றும் தாமதிக்கவில்லை. ஆரியை இறுகப் பற்றிக் கொண்டு ஆற்றை நோக்கி ஓடினாள். குதிரையில் வந்த ஆட்களும் எலிசாவைப் பார்த்து விட்டனர். அவர்கள் குதிரையிலிருந்து இறங்கி எலிசாவைத் துரத்திக்கொண்டு ஓடினர். ஆலே துரத்த, எலிசா, தன் பிள்ளையுடன் காற்றாகப் பறந்தாள். ஆற்று வெள்ளத்தை அடைந்தாள். குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்ற அன்பு உணர்ச்சியினால் அவளுக்கு ஒரு புதுச் சக்தி கிடைத்தது. புது வெள்ளத்தைக் கண்டு அவள் பயப்படவும் இல்லை; பின்வாங்கவும் இல்லை. கரைக்கு அருகில் சுழித்து ஓடும் தண்ணீரை ஒரே தாவில் தாண்டினாள். ஆற்றின் நடுவில் மிதக்கும் பனிக் கட்டியை அடைந்தாள். பனிக் கட்டி ஆடிக்கொண்டே வேகமாக நகர்ந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு பனிக் கட்டியாகத் தாவி ஆற்றின் மறு கரையை அடைந்தாள். ஆலேயும் ஆட்களும் அதிசயத்தோடும் ஏமாற்றத்தோடும் ஷெல்பியின் பண்ணைக்குத் திரும்பினர்.

* * *



ஷெல்பியின் பண்ணையில் எல்லோரும் கூடியிருந்தனர். டாமியின் மனைவியும் குழந்தைகளும் கதறி அழுதனர். தங்களை விட்டு டாம் பிரிந்து செல்லப் போவதை நினைத்து எல்லோரும் வருந்தினார்கள். நல்ல காலம் பிறந்ததும், டாம் எங்கிருந்தாலும் அவனைத் திரும்பவும் விலைக்கு வாங்கி, அவனுக்கு விடுதலை அளிக்கப் போவதாக ஷெல்பி கூறினார்.


டாம் துணி மணிகள் வைத்த பெட்டியை எடுத்துக் கொண்டான். எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு ஆலேயின் வண்டியில் ஏறினான். டாமின் கால்களில் ஆலே ஒரு கனத்த விலங்கை மாட்டினான். எல்லோரும் அதிர்ச்சி யடைந்தனர். வண்டி புறப்பட்டது.

ஆலே நேராக மிசிசிபி ஆற்றின் கப்பல் துறைக்குப் போனார். அவரும் டாமும் ஒரு பெரிய நீராவிக் கப்பலில் தெற்கு நோக்கிப் பயணம் ஆயினர். கப்பல் நின்ற இடங்களில் ஆலே சர்வ சாதாரணமாக அடிமை மனிதர்களையும் சிறுவர்களையும் விலைக்கு வாங்கினார். டாம் உள்பட எல்லோருடைய கைகளிலும் விலங்குகளை மாட்டிக் கப்பலின் கீழ்த் தளத்தில் தள்ளினார்.

அந்தக் கப்பல் அழகாகவும் வசதியாகவும் இருந்தது. மேல் தளத்தில் இருந்த பணக்காரர்களான ஆணும், பெண்ணும், சிறுவர் சிறுமிகளும் உல்லாசமாகப் பொழுதைக் கழித்தனர். கீழ்த் தளத்தில் இருந்த அடிமைகளுக்கு எந்த வசதியும் இல்லை. அங்கேயும் ஆணும் பெண்ணும் சிறுவர் சிறுமிகளும் இருந்தனர். ஆனால் உல்லாசம்தான் இல்லை. மாறாக, கைகளில் விலங்கு; முகத்தில் வேதனை; மனத்தில் குடும்பத்தைப் பிரிந்த துக்கம். அவர்கள் கூட்டமாக ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தனர். டாம் தன்னுடைய துன்பங்களை மறந்து மற்றவர்களுக்கு ஆறுதல் சொன்னான்.

* * *

ஒகியோ ஆற்றைக் கடந்த எலிசாவுக்கும் ஆரிக்கும் ஒரு குவேக்கர் அபயம் அளித்தார். உணவும் உடையும் கொடுத்துக் காப்பாற்றினார். சில தினங்களில் முன்பே ஓடிவந்த ஆரியின் தந்தையான ஜார்ஜும் அவர்களோடு சேர்ந்து கொண்டான். பண்ணை ஆட்கள் அவர்களைப் பிடிக்க நெருங்கி வந்து கொண்டிருந்தனர். இதுவரையில் தங்களைக் காத்த ஏகவுக்கு நன்றி சொல்லிக் குவேக்கரிடம் மேலும் உதவிகளைப் பெற்றுக் கொண்டு அவர்கள் கானடாவை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தனர்.



செருப்புக் கடையில் பொன்மொழி

''நம்மை மதியாதார் வாசல் மதியாதே!''

—இரத்தின மனோகர்

* * *

ஆலேயும் அடிமைகளும் ஏறிய நீராவிக் கப்பல் தெற்கு நோக்கித் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தது. டாமின் நல்ல நடத்தை ஆலேயைக் கவர்ந்தது. அவர் டாமின் விலங்குகளை நீக்கினார். டாம் கப்பல் முழுதும் சென்று மாலுமிகளுக்கும் பயணிகளுக்கும் இயன்ற உதவிகளைச் செய்தான்.

கப்பலில் கிளேர் என்ற செல்வந்தர் இருந்தார். அவருடன் ஒரு சிறுமியும் ஒரு முதிய அம்மையாரும் இருந்தனர். சிறுமி கிளேரின் மகள். எல்லோருடனும் நன்றாகப் பழகினாள். டாமும் அவளுடன் உரையாடினான். இருவரும் நண்பர்கள் ஆயினர்.

''பாப்பா, உன் பேர் என்ன?'' என்று கேட்டான் டாம்.

''என் பெயர் இவாஞ்சலின். ஆனால் எல்லாரும் என்னை 'இவா' என்றுதான் கூப்பிடுவார்கள். சரி, உன் பெயர் என்ன?'' என்று திருப்பிக் கேட்டாள் இவா.

''என் பெயர் டாம். குழந்தைகள் எல்லாம் என்னை டாம் மாமா என்றே அழைப்பார்கள்.''

''இனி நானும் உன்னை டாம் மாமா என்றே அழைப்பேன். ஆமாம், நீ இப்போது எங்கே போகிறாய்?''

''என்னை யாருக்கோ விற்கப் போகிறார்கள். யாருக்கு என்று தெரியவில்லை''

''என்ன, உன்னை விற்கப் போகிறார்களா? அப்படியானால் என் அப்பா

உன்னை வாங்கலாமே!'' என்றுசொல்லிக் கொண்டே இவா ஓடினாள். சிறிது நேரப் பழக்கத்தில் அவளுக்கு டாமை மிகவும் பிடித்து விட்டது.

இவாவின் அப்பா, மேல் தளத்தின் ஓரத்தில் நின்று கொண்டிருந்தார். ஓடிய வேகத்தில் இவா கால் தடுக்கிக் கப்பலின் மேல் தளத்திலிருந்து ஆற்றில் விழுந்து விட்டாள். அதைக் கவனித்த டாம், உடனே நீரில் குதித்து அவளைக் காப்பாற்றினான். அவளுடைய அப்பாவிடம் சேர்ப்பித்தான்.

இவா டாமைப் பற்றி அப்பாவிடம் சொல்லும் முன்பே, அன்பு உள்ளம் படைத்த அவர் டாமை விலைக்கு வாங்கி விட்டார். இவா மகிழ்ந்தாள். டாமும் சந்தோஷமடைந்தான்.

கிளேர் புது ஆர்லீன்சைச் சேர்ந்தவர். பெரிய பண்ணைக்காரர். பண்பு மிகுந்தவர். புதியஅடிமையான டாமைப் பண்ணையில் எல்லோருக்கும் அறிமுகம் செய்தார். இவாவுடன் விளையாடுவதுதான் டாமின் முக்கிய வேலை.

* * *

சிறுவன் ஆரிக்கும் அவனுடைய பெற்றோருக்கும் குவேக்கர்கள் எல்லா உதவிகளையும் அளித்துப் பாதுகாத்தனர். இறுதியில் அவர்கள் ஒரு பெரிய ஏரியின் கரையை அடைந்தனர். ஏரியின் நடுவில் குறுக்காகக் கானடா நாட்டு எல்லை இருந்தது. அந்த எல்லையைத் தாண்டிச் சென்றால் அங்கே அடிமைகளை வாங்குவதும் இல்லை; விற்பதும் இல்லை. பெற்றோரும் குழந்தைகளும் ஒன்றாக வாழலாம். ஆனால் அந்த எல்லையைத் தாண்டுவதற்குள் எத்தனை கெடுபிடி! ஆரி, எலிசா, ஜார்ஜ் மூவரையும் பிடிப்பதற்காகப் பண்ணை ஆட்கள் துரத்திச் சென்றனர். எல்லைப் போலீசுக்கும் தகவல் கிடைத்திருந்தது. அவர்களைப் பிடிக்கப் போலீஸ்காரர்களும் தயாராக இருந்தனர். ஆகவே, அவர்கள் மூவரும் மாறு வேடம் போட்டுக் கொண்டு படகில் ஏறினர். ஒரு வழியாகக் கானடா நாட்டுக்கு வந்து இறங்கி விட்டனர். அப்போது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தங்களை அடிமைத்தனத்தினின்று காப்பாற்றிய தேவனுக்கு மனப் பூர்வமாக நன்றி செலுத்தினர்.

* * *

கிளேர் தம் பண்ணை ஆட்களை அன்போடு நடத்தினார். அவர்களுக்கு எல்லா வசதிகளையும் அளித்தார்.

டாமுக்கு நிறைய ஓய்வு கிடைத்தது. அவன் தினமும் பைபிள் படித்தான். தன் முதல் எஜமானனின் மனைவியாகிய திருமதி ஷெல்பிக்கும் தன் மனைவிக்கும் இவாவின் உதவியுடன் டாம் கடிதங்கள் எழுதினான்.

சிறுமி இவா நோயுற்றாள். உடம்பும் மெலிந்தது. அவளால் ஓடியாடி விளையாட முடியவில்லை. படுத்த படுக்கை ஆனாள். மருத்துவம் பலன் அளிக்கவில்லை.

கிளேர் இவாவை மடியில் வைத்துக்கொண்டு தேற்றினார்.

''அப்பா, நான் நீண்ட நாள் இருக்க மாட்டேன். தேவனிடம் போகிறேன். திரும்பி வரமாட்டேன்'' என்றாள், இவா.

''சேச்சே, அப்படிச் சொல்லாதே, குழந்தை! உனக்குச் சீக்கிரம் உடம்பு குணமாகிவிடும். மறுபடியும் நீ எழுந்து விளையாடப் போகிறாய்'' என்றார் அப்பா.

''எனக்கு உடம்பு சரியாகி விடுமா? இல்லை அப்பா, சரியாகாது. உங்களை எல்லாம் விட்டுப் பிரிய மனம் இல்லை தான். ஆனாலும் உலகத்தில் எத்தனை விதமான கஷ்டங்கள்!''

''இவா, உனக்கு என்ன கஷ்டம்?''

''நம்முடைய வேலையாட்கள் எவ்வளவு நல்லவர்கள்! அவர்களுக்கு என்னிடம் எவ்வளவு அன்பு! அவர்கள் அடிமைகளாக இருக்கிறார்களே! எல்லோரும் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் அப்பா!''

''இப்போது அவர்கள் நம்மிடம் சந்தோஷமாக இல்லையா அம்மா?''

''இப்போது நலமாக இருக்கிறார்கள். நமக்குப் பிறகு வேறு எஜமானர்களிடம் போனால், அப்படி இருக்க முடியாதே! நான் எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள். அது சுயநலம்தானே? அவர்கள் தங்கள் குடும்பங்களைப் பிரிந்து எப்போது சோகத்தில் இருக்கிறார்களே! அவர்களுக்கு விடுதலை வழங்க வழியே இல்லையா, அப்பா?''


''அதெல்லாம் ரொம்பக் கஷ்டமான காரியம் அம்மா. நானும் உன்னைப் போலவே நினைக்கிறேன். ஆனால், எப்படிச் செய்வது என்றுதான் தெரியவில்லை.''

(தொடர்ச்சி அடுத்த இதழில்)


ஓவியம் இங்கே, காவியம் எங்கே?

தமிழ்ப் பெரும் நூல்கள் சில இங்கே குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளன. இக் குறிப்புக்களைக் கொண்டு, அவற்றைக் கண்டு பிடியுங்கள், பார்க்கலாம்.
முதல் குறிப்புக்கு விடை: நாலடி(யார்)

கருத்து: டயாரு
ஓவியம்: பி.வி.ஆர்




1



2

3



4


4X40

5



6

400


7
400
8
9
10
11
12
விடைகள்:
1 நாலடியார்
2 நான்மணிக்கடிகை
3 சிலப்பதிகாரம்
5 திருக்குறள் (முப்பால்)
6 அகநானூறு
7 புறநானூறு
8 பரிபாடல்
9 குண்டலகேசி
10 வில்லிபாரதம்
11 கைந்நிலை
12 பழமொழி



குப்புசாமி அப்புசாமி

அழ வள்ளியப்பா

அப்புசாமி:

குப்பு சாமி குப்பு சாமி,
ஜப்பான் துணியிலே
அப்பா தைத்துத் தந்த உடையில்
எங்கே செல்கிறாய்?

குப்புசாமி:

அப்பா வுக்கு அக்கா ளுக்கு
அக்காள் மகனுக்கு
அம்பத் தூரில் கல்யா ணமாம்
அதற்குச் செல்கிறேன்.

அப்புசாமி:

அப்பா வுக்கு அக்கா ளுக்கு
அக்காள் மகன் என்றால்
அத்தை மகன்தான். அதற்கு ஏனோ
சுற்றி வளைக்கிறாய்?

குப்புசாமி:

காலில் நானும் அணிந்தி ருக்கும்
உறைகள் இரண்டையும்
கண்கொட் டாமல் பார்க்கி றீர்கள்;
என்ன காரணம்?

அப்புசாமி:

ஒன்று கறுப்பு, ஒன்று வெள்ளை
உறைகள் அணிந்ததால்,
உறவுக் காரர் உன்னைப் பார்த்துக்
கேலி செய்வரே!

குப்புசாமி:

என்னி டத்தில் இன்னும் ஜோடி
ஒன்றி ருக்குது.
ஏனோ அதிலும் ஒன்று கறுப்பு;
ஒன்று வெள்ளைதான்!

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)
Editor: K. Rajendran

உங்களது எதிர்கால செல்வச் செழுமைக்கு வழிகோலுவது

லக்ஷ்மி கிருபா டெபாசிட் திட்டம்

மாத தவணை ரூ	60 மாதங்கள் நீங்கள் செலுத்தும் மொத்த தொகை	கெடு முடிவில் திரும்பப் பெறும் மொத்தத் தொகை		
		72 மாதங்கள் ரூ.	96 மாதங்கள் ரூ.	120 மாதங்கள் ரூ.
25	1500	2230.03	2771.04	3442.29
50	3000	4460.07	5542.08	6884.58
100	6000	8920.14	11084.16	13769.16
200	12000	17840.28	22168.32	27538.32
500	30000	44600.70	55420.80	68845.80
1000	60000	89201.40	110841.60	137691.60

சிறு துளிகளின் சேர்க்கையே ஆழ்கடல்.
உங்கள் சேமிப்பு சிறிது சிறிதாக சீராகச்
சேர்ந்து கணிசமான தொகையாக வளர
எங்களது லக்ஷ்மி கிருபா சேமிப்புத்
திட்டத்தில் சேர்ந்திடுங்கள். இத்திட்டத்தில்
சேமிப்பதின் மூலம் நீங்கள் பெரிய
தொகையை சேர்க்க முடியும். ஏனெனில்
உங்கள் சேமிப்பு கவர்ச்சியான வட்டியை
சம்பாதிக்கிறது.

இன்றே உங்கள் அருகாமையிலுள்ள
எங்களது கிளைக்கு விஜயம் செய்து பயன்
தரும் இத்திட்டத்தில் சேர்ந்திடுங்கள்.



லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : கரூர் 639 001
நிர்வாக அலுவலகம் : சென்னை 600 086

என். முத்தியாலு
சேர்மன்

அன்னிய செலாவணியில்
வர்த்தகம் செய்ய
அங்கீகாரம் பெற்ற வங்கி


சுத்தமான
பாலின் சுவையை
முழுமையாக உணர,
சுவையுங்கள்
Spencer's
Spencer's
MILKBIX
ஸ்பென்ஸர்ஸ்
ஸ்பென்ஸர் & கோ. லிட்.
சென்னை மற்றும் கிளைகள்
ஸ்பென்ஸர்ஸ் மில்க்பிக்ஸ் பிஸ்கட்டுகள் குழந்தைகள் மற்றும் பெரியவர்களால் எல்லா நேரங்களிலும் விரும்பப்படுபவை. இந்த பிஸ்கட்டுகளை காலை உணவுடன் சேர்த்து சாப்பிடுங்கள். பள்ளிக்கு மற்றும் நீங்கள் பணிபுரியும் காரியாலயத்திற்கு, உல்லாசப் பயணம் செல்லும்போது மற்றும் எங்கு வேண்டுமானாலும் உடன் எடுத்துச் செல்லுங்கள்.
ஸ்பென்ஸர்ஸ்
மில்க்பிக்ஸ்
சக்திதரும் பொருள் இவ்வளவு சுவைத்ததில்லை
S 3746 TAM